# சிகரம்



கலாசாரப் பேரவை

மண்முனைப்பற்று பிரதேச செயலகம்

ஆரையம்பதி

2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகரம்

## நான்காவது ஆண்டு
## சாகித்திய விழா சிறப்பு மலர்

வெளியீடு
பிரதேச செயலக கலாசாரப் பேரவை,
மண்முனைப்பற்று, ஆரையம்பதி.
**2003.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உள்ளே.....

அரசாங்க அதிபர் இ.மோனகுருசாமி, பிரதேச செயலாளர் க.சிவநாதன் ஆகியோரின் வாழ்த்துச் செய்திகளுடன்....


## கட்டுரைகள்


- மூனாக்கானா - 02
- எம்.பி.ரவிச்சந்திரா - 09
- அன்புமணி - 12
- ஆரையூர் இளவல் - 20
- க.இராசரெத்தினம் - 29
- வ.விஸ்வராணி - 33
- சி.புவனேந்திரன் - 34

## கவிதைகள்


- ஆரையூர் அருள் - 01
- க.மோகனதாசன் - 08
- மாசெ - 11
- மலர்ச்செல்வன் - 16
- தாமரைச்செல்வி - 28

## சிறுகதை


- அ.சுரேந்தினி - 17




## மற்றும்


- கலைஞர் கௌரவம் - 41
- அஞ்சலி - 43
- விளம்பரங்கள் - 49


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்முனைப்பற்றுப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை - 2003

**தலைவர்**

**திரு.க.சிவநாதன்**

(பிரதேச செயலாளர்)

**செயலாளர்**

**திரு.மு.சதாகரன்**

(கலாசார உத்தியோகத்தர்)

**உறுப்பினர்கள்**

திரு.காசுபதி நடராசா

திரு.மு.கணபதிப்பிள்ளை

திரு.இரா.நாகலிங்கம் (அன்புமணி)

திரு.க.செல்லத்தம்பி

திருமதி.இந்துமதி விமல்ராஜா

திரு.த.மலர்ச்செல்வன்

திரு.அ.வினுராஜ்

திருமதி.சுகுணா கோபாலசுந்தரம்

திரு.செ.நாகமணி

திரு.க.மோகனதாசன்

திரு.சி.நடேசகுமார்

திருமதி.த.சிவானந்தராசா

திரு.க.சதிஸ்குமார்

திரு.ந.துவாரகன்

# சிகரம்

**நான்காவது ஆண்டு**
**சாகித்திய விழா சிறப்பு மலர்**

**மலர்க் குழு**

திரு.காசுபதி நடராசா
திரு.மு.கணபதிப்பிள்ளை
திரு.க.செல்லத்தம்பி
திரு.த.மலர்ச்செல்வன்
திருமதி.இ.விமல்ராஜா
திரு.க.மோகனதாசன்

**தொகுப்பு வடிவமைப்பு**

திரு.மு.சதாகரன்

**ஓவியம்**

கிக்கோ

**விடய எழுதுனர்**

ஜனாப். M.B.ஜெயினுலாப்தின்

**கணினிப் பதிவு**

செல்வி.அ.ஜெயசுதா

**அச்சகம்**

தமிழ்ச்சு அச்சகமும் பதிப்பகமும்,
240, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

**வெளியீடு**

பிரதேச செயலக கலாசாரப் பேரவை,
மண்முனைப்பற்று, ஆரையம்பதி.
-2003-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

ஆயிரம் மலர்கள் மலர வேண்டும். அதுபோல் ஆயிரமாயிரம் அறிவுக் கருவூலங்கள் தமிழில் வெளிவர வேண்டும். அதனால் தமிழ்த்தாயின் மடியில் தவழும் மக்கள் விழிப்படைய வேண்டும். இத்தத்துவத்திற்கு சிகரம்வைத்தது போல் "சிகரம்" அமைய வேண்டுமென வாழ்த்துகிறேன். பிரதேச செயலாளர் உட்பட சிகரத்தின் அமைப்பாளர்கள் அனைவருக்கும் எனது நன்றி.

**இ. மோனகுருசாமி,**
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலாளர்.
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலாளரிடமிருந்து....



மண்முனைப்பற்று பிரதேச கலாசாரப் பேரவையால் சாகித்திய விழாவின் பொருட்டு வெளியிடப்படுகின்ற சிறப்பு மலர் இவ் வாண்டு 'சிகரம்' என்ற பெயரோடு வெளிவருகின்றது.

மட்டக்களப்பின் மையப்பகுதியாக விளங்கும் இம்மண்முனைப்பற்று பிரதேசம் வரலாற்றுப் பின்னணியுடைதாகவும், கலை, கலாசாரப் பண்பாடுகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது.

ஒரு பிரதேசத்தின் பாரம்பரியங்களை வெளிக்கொணர்வதில் பிரதேச சிறப்பு மலர்களின் பங்கு அளப்பரியதாகின்றது. அந்தவகையில் 'சிகரம்' சிறப்பு மலரும் ஓரளவு காத்திரமானதாக இருக்கவேண்டு மென்பதில் கவனம் செலுத்தப்பட்டு, பிரதேச மக்களின் பண்பாட்டி யலை முதன்மைப்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இலக்கியம் என்பது ஒரு பண்பாட்டின், கலாசாரத்தின் ஒட்டுமொத்த வெளிப்பாடு என்பதற்கிணங்க, இச்சிறப்புமலரில் பிரதேச எழுத்தா ளர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இச்சாகித்திய விழாவும், இச்சிறப்பு மலர் வெளியீடும் சிறப்புற அமைய, வாழ்த்துச்செய்தி வழங்கி, ஊக்கப்படுத்திய அரசாங்க அதிபர் அவர் கட்கும், பல்வேறு வகையிலும் ஒத்துழைத்த பேரவை உறுப்பினர்க ளுக்கும், பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும், நிதியுதவிய ளித்த நிறுவனங்களுக்கும், விழா தொடர்பாக உதவிபுரிந்த அனைவ ருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச் சியடைகின்றேன்.

**க. சிவநாதன்,**
**பிரதேச செயலாளரும்,**
**பேரவைத் தலைவரும்,**
**மண்முனைப்பற்று.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்முனைப்பற்றெழிலாள்

## (கலித்துறை)

கவிஞர் : ஆரையூர் அருள்

வங்கக்கடல் வாழ்த்துரைத்து வாரிவளம் கரைசேர் கிழக்கொளியாள்
பங்கமறமீன்பாட பாரிவாவிமகள் வளைந்தாடு மேற்கெழிலாள்
தங்கக் கணத்தலைவன் தாரிகார் காத்தான்குடி காத்திருந்த வடக்கெல்லையாள்
துங்க மின்னாள் தூரிகை கொண்டெழுதா துலங்குருககள் மடத்தெற்கெல்லையாள்

மண்முனைப்பற்று இராட்சியம் இளவரசி உலகநாச்சி கோலதோட்சி
திண்ணமுடன் சிகரம் சிறப்புற்று விளங்கிய மாட்சி
கண்கூடு கோயிலுடன் குளமிகுந்து தூர்ந்த கோயில்குளக்காட்சி
பண்டையசரிதமதில் இடமீண்டு என்பதற்கு உலகநாட்சி மாண்மீகம் சாட்சி

மருதம்மலி மண்முனை வயல்மடியில் விளைந்தபயிர் வளைந்துசதிராடும்
தருணமிதுவெனவே தவழ்ந்துவரு தென்றல் தழுவிச் சுதிசேர்க்கும்
பருவமங்கை நாணத்தோடு கதிர்கள் தலைகுனிந்து தரைவணங்கும்
பெருமையுடன் உழவர்முகம் களைமிகுந்து தினம் துலங்கும்

முல்லைநிலமுறுபு துக்குடியிருப்பு முழுமதிமுகத்தில் மலர்விரித் தெழிலளிப்பாள்
நல்லகனி நயந்தளித்து பசிகளையும் பைந் தொடியாள்
துல்லிய மலரத்தேனுண்டு வண்டினம் சிறகுலர்த்த சிரித்திருப்பாள்
பல்கனிக் காவினிலே கவியினம் கிளைதாவியாட களித்திருப்பாள்

நீடிய நெய்தல் நீலவிழிவிரித்து கருதியதையளிக்கும் கற்பகத்தாள்
கூடிக்குலாவகாதலர் ஓடி விளையாடப்பாலகர் குழலெனுமணற்றை விரித்தாள்
பாடிடு பாவலர்க்கு பசுமையளிக்கும் பாலமுனைப் பங்கயத்தாள்
நாடிய செல்வமனைத்து மயராதளித்திருக்கு மட்சய பாத்திரத்தாள்

குன்றுதோறாடு குமரன்கோயில் குறிஞ்சிநில மில்லையென்றே குறைநீக்க
கொண்டல்கள் கோலங்கண்டு குமரனூர்தி தோகை விரித்தாட
கொட்டுமுழக்கம் முழவிதனைத் திக்கெட்டு மார்த்து நிற்க
கட்டுக் கடங்கா கல்மனமுமிக் காட்சிகண்டு கசிந்திடுமே

பாலோடு தயிர் நெய்யாளிக்கும் கறவையினம் பல்கிப் பெருகும்
தேனோடு முக்கினி முந்திரி நற்கனித்தருக்கள் தழைத்து வளரும்
தேங்கோடு நுங்கு நிறை பனைகள் செறிந்துசெழித்து விளையும்
எங்கும் எத்தொழிலும் செய்திடுதீரர்கள் நிறைந்து விளங்கும்

செந்தமிழர் இஸ்லாமியர் தாய்மொழிவாலொன்றி சமத்துவமாயிருக்க தன்மடிவிரித்தாள்
இந்திஸ்லாம் கிருஸ்தவம் இன்சுவை முக்கனியாயிருக்க வுயர்வாரித்தாள்
சந்தக்கவி சீர்கல்விசெறி யறிஞர்பரிணமிக்க வளர்த்து விடு வித்தகத்தாள்
சிந்துகலை செழித்துவளர் மண்முனைப்பற்றெளிலாள் வளங்கள் நிறையொயிலாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மண்முனைப்பற்று பிரதேச தமிழ் மக்களின்

# வாழ்வியற் கிரியைகள்

ஆணோ பெண்ணோ ஒரு உயிர் பிறந்து வளர்ந்து இறக்கும் வரையும் வாழ்க்கையில் நடைபெற்றுக் கொண்டுவரும் நிகழ்வுகளிலே பல கிரியைகளும் பரம்பரை பரம்பரையாக வரும் பழக்க வழக்கங்களும் நடைபெற்றுக்கொண்டே வருகின்றன. நகரங்களில் இவை அருகிக்கொண்டு வந்தாலும் கிராமப் புறங்களில் இப்பொழுதும் நடைபெற்றுக்கொண்டே வருகின்றன. இதில் இப்பிரதேசத்தில் நடைபெறும் கிரியைகள் செயல்களைப் பற்றி சிறிது சிந்திப்பதே என் நோக்கமாகும்.

**தாய்மையடைதல்:-**

ஒரு பெண் தாய்மை அடைந்ததும் அவளை உடனிருந்து மிகக் கவனமாகப் பராமரிப்பார்கள். காரணம் இது சாவா? வாழ்வா? என்ற மறுபிறவிப் போராட்டமாகும். இக்காலத்தில் இவளுக்கு விருப்பமான உணவு வகைகளோடு கட்டாயம் கொழுக்கட்டையும் கொடுப்பார்கள். மருத்துவிச்சி இடையிடையே வந்து உடல் நிலையை அவதானித்து பல ஆலோசனைகளைக் கூறிச் செல்வாள். நல்ல சிவப்பு நிறமான குழந்தை பிறக்க வேண்டுமென்பதற்காக குங்குமப் பூவை பாலில் காய்ச்சிக் கொடுப்பார்கள். கிரகண காலங்களில் இவளை வெளியே விடாமல் வீட்டுக்குள்ளேயே இருக்க வைப்பார்கள். அங்கங்களால் ஒரு சிறிய செயலையும் செய்யவிடமாட்டார்கள். மீறிச் செய்தால் இதன் பிரதிபலிப்பு குழந்தையில் தெரியும். இது அனுபவத்தினால் ஏற்பட்ட ஒரு உண்மை. கிரகணகாலம் முடிந்ததும் முடக்கொத்தான், பூவரசம் இலைப் பழுப்பு, மஞ்சள் போன்ற கிருமிநாசினிப் பொருட்களை அரைத்து உடல்முழுக்கப் பூசிவைத்திருந்து முழுகவார்ப்பார்கள்.



**பிரசவித்த பின்:-**

பெரும்பாலும் சாதாரணமாகவே பிரசவங்கள் நடந்தாலும், சில கஷ்டமாக இருக்கக்கூடும். இதற்காக அக்காலங்களில் மந்திரவாதிகளை அழைத்து தண்ணீர் ஓதி, தேங்காய் வெட்டுவார்கள். பிள்ளை பிறந்ததும் மணிக்கூடு இல்லாத அக்காலத்தில் சூரியனுக்கு எதிர்த்திசையில் விழும நிழலை காலடியால் அளந்து சாதகம் கணிப்பதற்காகக் குறித்து வைத்துக்கொள்வார்கள். ஆண்பிள்ளை பிறந்தால் தந்தை ஓர் உலக்கையை எடுத்து "தாய்க்கும் பிள்ளைக்கும் சுகமா?" எனக்கேட்டு கூரையில் மூன்று தடவை தட்டிவிட்டு வீட்டுக்கு மேலாலே போய் கோடிப்பக்கம் விழக்கூடியதாக எறிவார்கள். பெண் குழந்தையென்றால் இவ்விதமே வாருகோலை எறிவார்கள். காரணம், எதிரியை வேல் ஏறிந்து வீழ்த்தக்கூடிய வீரம் ஆணுக்கும், வீடு

**மூனாக்கானா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசல், வளவுகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பதற்காக பெண்ணுக்கும் எறிகிறார்கள் என எண்ணத்தோன்றுகிறது. பிரசவித்த அறையின் வாசல்படியில் ஒரு இரும்புத்துண்டும், வாருகோலும் எந்த நேரமும் இருக்கும். கெட்ட பேய், பிசாசுகள், காற்றணைவுகள் வராமல் தடுப்பதற்காகவே இவை வைக்கப்படுகின்றன. தாய் வெளியே போகவேண்டுமானால், இந்த இரும்பை அவள் கையில் கொடுத்தே கூட்டிச் செல்வார்கள். திரும்பி வந்ததும் திண்ணைப்படியில் அவளை நிறுத்தி, முன்பக்கம் மூன்று தரமும் பின்பக்கம் மூன்று தரமும் துப்பி அடித்த பின்பே வீட்டுக்குள் கூட்டிச் செல்வார்கள். குழந்தையின் அசுத்தங்களைத் துடைத்த தும்பு, சீலை போன்ற பொருட்களையும் அறையைக் கூட்டிய அசுத்தங்களையும் அந்த அறையின் மூலையில் ஒதுக்கி வைப்பார்கள். குழந்தையின் தொப்பிள் கொடி அறுந்ததும், அதனுடன் மூலையில் கூட்டி வைத்திருக்கும் அசுத்தங்களையும் சேர்த்து ஒரு சுளகில் அள்ளி வளவுக்கு வெளியே கொண்டுபோய் ஒரு பாலுள்ள மரத்தின் அடியில் கொட்டி மூடிவிடுவார்கள். இதைக் "கொத்தியார் அள்ளுதல்" என்பர். மருத்து விச்சி இதைச் செய்துவிட்டு வந்து பிரசவம் நடந்த அறையைக் கூட்டி சாணத்தால் மெழுகிவிடுவாள்.

**சாதகம் கணித்தல்:-**

இதன் பின்னர் ஒரு நல்ல நாளில் ஒரு வட்டாவில் வெற்றிலை, பாக்குகளை எண்ணாமல் ஒரு குறிப்பிட்ட தொகையை வைத்து இதன் மேல் தட்சணையும் வைத்து ஒரு வெள்ளைத்துணியால் மூடி சாத்திரியார் முன் வைப்பார்கள். அவர் வெற்றிலை பாக்குகளை மும்மூன்றாக எண்ணி மிஞ்சுவதைக் கொண்டு லக்கினம் தீர்மானித்து, கெடுதியா? நினைச்ச காரியமா? என்று கேட்டுவிட்டு குழந்தை பிறந்த நேரத்தைக் கொண்டு சாதகம் கணிப்பார். பலன்களும் கூறி அனுப்புவார். சாத்திரியார் சொன்ன எழுத்தின்படி குழந்தைக்குப் பெயர் வைப்பார்கள்.

**தலைமழித்தல்:-**

வீட்டில் முப்பத்தோராவது நாளிலும் கோயிலில் மழிப்பதாயிருந்தால் நாற்பத்தோராவது நாளிலும் இதைச் செய்வார்கள். கோயிலில் செய்வதாயிருந்தால் காளிகோயிலில் செய்வார்கள். காரணம் பிரசவத்துக்குக் காளியே துணைநிற்பதாக நம்பிக்கை. சிலர் விநாயகர் கோயிலிலும் செய்வார்கள். சக்கரைப் பொங்கல் பொங்கிப் படைத்து, குழந்தையின் முடிகளைந்த தலையில் திருநீறு சந்தனம் குங்குமம் பூசி காளியின் முன்னிலையில் துணியில் குழந்தையை வளர்த்துவார்கள். சுற்றத்தார்கள் விரும்பிய நகையை அணிவார்கள்.

**தொட்டிலில் இடுதல்:-**

சுப தினத்தில் தொட்டிலை வர்ணக் கடதாசிகளால் அலங்கரித்து அதில் குழந்தையை வளர்த்தி உறவினர்கள் ஒவ்வொருவரும் ஆட்டுவார்கள். முன்பு குழந்தைக்கு நகை போடாதவர்களெல்லாரும் இப்பொழுது போடுவார்கள். விருந்துபசாரமும் நடைபெறும்.

**பல் முளைத்தல்:-**

குழந்தைக்கு முதன் முதலில் பல் முளைத்ததும், சுபவேளையில் பல்லுக்கொழுக்கட்டை, முட்டாசிகள், பிஸ்கற், நிறத்தாள் துண்டுகள், நெற்பொரி இவற்றுடன் சில்லறைக் காசுகளும் போட்டுக கலந்து கொள்வர். ஒருவர் குழந்தைக்கு மேல் குடை விரித்து அந்தக் குடைக்கு மேல் இதைச் சொரிவார்கள். ஏனைய குழந்தைகள் இவற்றைப் பொறுக்கிச் சாப்பிட்டு மகிழ்வார்கள்.

**வித்தியாரம்பம்:-**

ஐந்து வயது முடிந்ததும், ஒரு வட்டாவில் வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய், கற்பூரம், மணக்குச்சி, தேன், தட்சணை வைத்து பையனையும் கூட்டிக்கொண்டு ஆசிரியரிடம் போவார்கள். அவர் மடை வைத்து வணங்கிவிட்டு பையனுக்கு திருநீறு சந்தணம் அணிவித்து நாக்கில் தேன் தடவுவார். பின்னர் பையன் கொண்டுவந்த பச்சை அரிசியை தாம்பாளத்தில் பரவி, பக்கத்தில் கற்பூரம் கொளுத்திவிட்டு ஓலைச்சுவடியிலிருந்து எழுத்துக்களை ஆசிரியர் காட்டி ஒவ்வொரு எழுததாக முறையாக உச்சரிக்க பையனும் பின்பற்றிச் செல்வான். பின்னர் பையனின் வலது சுட்டுவிரலைக் கொண்டு பரப்பியுள்ள பச்சரிசியில் எழுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்களை எழுதுவிப்பார். பின்னர் தொடர்ந்து பாடம் தொடங்கும்.

**பெண் குழந்தை பூப்பெய்துதல்:-**

பெண் பிள்ளைகள் ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்ததும் அவர்களுக்கு முதலாவது மாதத் தீட்டு ஏற்படுகிறது. இதையே அக்காலத்தில் பெரியபிள்ளையாதல் என்றும், சமைதல் என்றும்; புத்தி அறிதல் என்றும் கூறுவர். இது தோன்றிய நேரத்தைக் குறித்து வைத்திருந்து சுபவேளையில் சாத்திரியாரிடம் சென்று பலன்கேட்டு ருது சாதகத்தையும் குறித்துக்கொள்வர். பெண்களுக்கு ஜனன சாதகத்தைவிட ருது சாதகமே பிரதானமானது என்பது சோதிடர்களின் அபிப்பிராயமாகும். ருதுவான அன்று மிக நெருங்கிய உறவினர்களை அழைத்து திரை வளைத்து முழுகவார்ப்பார்கள். இதைக் கண்ணிலே கண்ட தண்ணி என்பார்கள். இதன்பின் உறவினர்கள் அனைவரையும் அழைத்து பெரிய விழாவாக மணவறை அமைத்து புதிய உடுப்புகள் உடுக்க வைத்து, சகல நகைகளும் அணிந்து மணப்பெண்போல அலங்கரிப்பார்கள். உறவினர்கள் வாழ்த்தி பரிசளித்துச் செல்வார்கள். நீர் வார்க்கும்போது, வார்க்குமிடத்தில் உள்ள குப்பையை கூட்டி அதன்மேல் வாருகோலை வைத்து அதன்மேல் பலகை வைத்து வெள்ளை விரித்து, திரை வளைத்து நீர் வார்ப்பார்கள் நீரில் ஆற்றுநீர் கலப்பார்கள். தலைக்கு பால் தப்பி முழுகவார்ப்பார்கள். இதன் பின்னர் இவளுக்கு வீட்டார் சில கட்டுப்பாடுகளை விதிப்பார்கள். இப்பொழுது கட்டுப்பாடுகள் பல தளர்த்தப்பட்டுள்ளன.

**ஆண்கள் கடுக்கன் அணியும் விழா:-**

ஆண்கள் சிறுவனாய் இருக்கும்போது காதிலே 'மின்னி' என்ற சிறிய அணியை அணிவார்கள். அவன் வளர்ந்து அரும்பு மீசை வந்து இளந்தாரியானதும், ஒரு சுபவேளையில் உற்றார், உறவினர்களுக்குச் சொல்லி பறை அடித்து பெரு விழாவாகக் கொண்டாடுவார்கள். சவரத் தொழிலாளியை அழைத்து பால் தப்பி முதன்முதலாக முகச் சவரம் செய்தபின் காதிலே கடுக்கன் அணிவார்கள்.

**திருமணம்:-**

ஒவ்வொருவர் வாழ்விலும் இது ஓர் திருப்புமுனையாகும். பெற்றோரின் நிழலிலே வளர்ந்த ஒரு ஆணும், பெண்ணும் சொந்தக் காலில் குடும்பம் நடத்த அனுமதியளிக்கும் விழாதான் திருமணம். சீதனம் போன்ற முக்கிய விடயங்களை பெற்றோர் பேசி முடிவடைந்ததும் கொண்டான் கொடுத்தான் என்ற செயல் தொடரும். பெண் வீட்டார் மாப்பிளை வீட்டாருக்கும், மாப்பிளை வீட்டார் அதற்குப் பதிலாக பெண் வீட்டாருக்கும் பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற விசேட நாட்களில் உடுபுடவைகளும், பலகார வகைகளும் கொடுத்துக்கொண்டிருப்பார்கள். இதுதான் கொண்டான் கொடுத்தான்.

**பெட்டி கொண்டு போதல்:-**

பெண் வீட்டார் முதன்முதலாக மாப்பிள்ளை வீட்டாருக்கு, உறொட்டிப் பெட்டி கொண்டு போவார்கள். மூன்று அல்லது ஐந்து பெட்டிகளில் உறொட்டி, வாழைப்பழம் கொண்டு போவார்கள். இவற்றுள் ஒரு உறொட்டியை பெரிதாகச் சுட்டு இதற்குள் மோதிரம், அல்லது தங்கப்பவுண், போன்றவற்றில் ஒன்றை வைத்துச் சுடுவார்கள். இதை 'மாப்பிளை உறொட்டி' என்பார்கள். இவை வைக்கப்பட்ட பெட்டிகளை வெள்ளைச் சீலையால் சுற்றி மச்சாள் முறையான பெண்கள் தலையில் வைத்துச் சுமந்து போவார்கள். பெட்டிகளுக்கு மேலே குடைபிடித்து குடையின் மேல் வெள்ளைத் துணி போட்டிருப்பார்கள். உறவினர் புடைசூழ, வெடிகள் கொளுத்தி, மாப்பிள்ளை வீட்டுக்குக் கொண்டு செல்வார்கள். மாப்பிள்ளை வீட்டார் இவர்களை எதிர்கொண்டு பெட்டிகளை வாங்கி அழைத்து வந்து அமர வைத்து, வட்டா படிக்கம் வைத்து, விருந்து கொடுத்து உபசரிப்பார்கள். இதேபோல மாப்பிள்ளை வீட்டாரும் உறவினர் புடைசூழ கொழுக்கட்டைப் பெட்டி அல்லது இடியப்பப்பெட்டி கொண்டுபோவார்கள். இதிலும் ஒரு கொழுக் கட்டைக்குள் மோதிரமோ பவுணோ வைப்பார்கள்.

**திருமணம்:-**

இதற்குரிய முகூர்த்த நாளைத் தெரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ததும் ஒரு வட்டாவில் வெற்றிலையும் பாக்கும் வைத்து வெள்ளைத் துணியால் மூடி மாப்பிள்ளை வீட்டார் சார்பில் ஒருவரும் பெண் வீட்டார் சார்பில் ஒருவருமாக உறவினர் வீடுகளுக்கு கொண்டு போவார்கள். கலியாணத்துக்குவர சம்மதமென்றால் ஒரு வெற்றிலையும் ஒரு பாக்கும் எடுப்பார்கள். சம்மதமில்லாதவர்கள் எடுக்கமாட்டார்கள். (இப்போது அழைப்பிதழை அச்சடித்துக் கொடுக்கிறார்கள்). இதன் பின் திருமண ஏற்பாடுகள் இரு வீடுகளிலும் நடை பெற்றுக் கொண்டிருக்கும். சுபவேளையில் கால் நாட்டி, பந்தல்போட்டு, சலவைத் தொழிலாளரைக் கொண்டு வெள்ளை கட்டி அலங்கரிப்பார்கள்.

**தண்ணீர் வார்க்கப் போதல்:-**

திருமணத்தன்று முகூர்த்தத்துக்கு முன், முதலில் பெண்வீட்டார் மாப்பிள்ளைக்கு தண்ணீர் வார்க்கப் போவார்கள். பால், சவர்க்காரம், கண்ணாடி, சீப்பு, மணப்பொடி, துவாய் போன்ற பொருட்களுடன் மாப்பிள்ளை வீட்டுக்குப்போய் அவரைக் கிணற்றடிக்குக் கூட்டிவந்து, பலகை வைத்து, வெள்ளை விரித்து, குளிக்கும் இடத்தை திரை வளைத்து மறைத்து, மாப்பிளைத் தோழன் மணமகனை நீராட்டுவார். இவ்விதமே மாப்பிள்ளை வீட்டாரில் சிலரும் பெண் வீடு சென்று பெண்ணை முழுவார்ப்பார்கள். மாப்பிள்ளை, மணப்பெண் இவர்களுக்கு முழுகவார்க்கும்போது அவர்கள் உடுத்திருந்த உடைகளெல்லாம் சலவைத் தொழிலாளிக்கு உரியதாகும்.

**மாப்பிள்ளை ஊர்வலம்:-**

மாப்பிள்ளைக்கு தண்ணீர் வார்த்து முடிந்ததும் பட்டுவேட்டி, சட்டை, சால்வைகளால் அலங்கரித்து தலைப்பா அணிவார்கள். பின் மாப்பிள்ளை, தாய், தந்தை, உறவினர், மூத்தோர் இவர்களின் கால்களில் விழுந்து வணங்கி, ஆசீர்வாதம் பெறுவார். அவர்கள் அன்பளிப்புகள் கொடுப்பார்கள். சிலர் மோதிரம் அணிவிப்பார்கள். பெற்றோர் தகுதிக்கேற்ப பவுண், அல்லது பணத்தை ஒரு குட்டானுள் வைத்து திருநீறும் வைத்து மாப்பிள்ளை கையில் கொடுத்ததும் மாப்பிள்ளை ஊர்வலத்துக்கு மேளதாளங்களுடன் புறப்படுவார். அவருடன் மாப்பிள்ளைத் தோழன் அவருக்குக் குடை பிடித்துக் கொண்டு வருவார். குடையின் மேல் வெள்ளைத் துணி போடப்பட்டிருக்கும். இவர்களுடன் நெருங்கி உறவுப் பெண்கள், தாலியுடன் வெற்றிலை, பாக்கு, பழம், குங்குமம், திருநீறு, புஸபம் வைத்த தாம்பாளம், கூறைச்சேலை சட்டை பாவடை, கண்ணாடி, சீப்பு, சவர்க்காரம் போன்ற பொருட்களும் வைக்கப்பட்ட பெட்டி, முப்பத்தொரு பலகாரம் வைக்கப்பட்ட ஒரு பெட்டி, மேலும் பலவகைப் பலகார வகைகள் வைக்கப்பட்ட பெட்டிகளை தலையில் வைத்துக்கொண்டும், கைகளில் ஏந்திக்கொண்டும், வெள்ளைத் துணியால் மூடப்பட்ட குடைகளை பிடித்துக் கொள்வார்கள். எல்லாப்பொருட்களும் வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருக்கும். உற்றார், உறவினர்கள் புடைசூழ, மாப்பிள்ளை ஊர்வலமாகச்சென்று ஆலய தரிசனம் செய்துவிட்டு குறித்த சுபநேரம் வந்ததும் பெண் வீட்டுக்கு வருவார். அங்கே தலைவாசலில் இவர்களை வரவேற்க பூரணகும்பம், பூமாலைகள், பன்னீர், சந்தனம், குங்குமம் வைக்கப்பட்டிருக்கும். ஒரு உரலில் வெள்ளை விரித்து தேங்காயும் வைத்திருப்பார்கள். மாப்பிள்ளை வந்ததும் பெண்ணின் தந்தை தலையில் துணிகட்டி தேங்காயை உடைத்ததும் அங்கே வைக்கப்பட்டுள்ள கண்ணாடியில் மாப்பிள்ளை முகம்விழித்து, மாலை அணிந்ததும் வலது காலை முன்வைத்து பெண்ணின் வளவுக்குள் முதன்முதல் கால் வைப்பார். இதை எதிர்பார்திருந்த பெண் வீட்டு பெண்கள் அவர்கள் கொண்டுவந்த பெட்டிகளை தலைவாசலிலேயே கைமாறிக்கொண்டதும் எல்லோரும் பந்தலில் அமர்வார்கள். முதலில் வட்டாவைத்து வரவேற்று உபசரிப்பார்கள். பெண்ணின் வீட்டுக் கூரையில் ஐந்து அல்லது ஏழு கூரைமுடி வைப்பார்கள். அதன் கீழ் ஒரு பலகை வைத்து அதில் வெள்ளை விரித்து வைத்திருப்பார்கள். உரிய முகூர்த்தம் வந்ததும் மாப்பிள்ளையையும், பெண்ணையும் அதில் நிற்க வைத்து ஆராத்தி எடுப்பார்கள். மாப்பிள்ளைத் தோழன் இருவருக்கும் கால் கழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியவுடன் மாப்பிள்ளை, கால்கழுவிய தோழனுக்கு மோதிரம் அணிவார். அதன்பின் பெண்ணின் தந்தை கையைப் பிடித்துக்கொடுக்க இருவரும் கைபிடிப் பார்கள். இதன்பின் மாப்பிள்ளை பெண்ணின் கை யைப் பிடித்துக்கொண்டு இருவரும் வலது கால் களை வைத்து வீட்டுக்குள் போவார்கள்.

**வீட்டுக்குள்ளே:—**

பூரண கும்பம், மடைவைத்து கற்பூர தீபம் காட்டி ஆராதனை முடிந்ததும் மண மகன் மணமகளின் கழுத்தில் தாலியைக் கட்டி மனை வியாக்கிக் கொள்வார். பின்பு சேவரக்காலில் வட்டில் வைத்து அதில் ஏழு மரக்கறியுடனான சோற்றை இருவரும் மாறிமாறி அருந்தக் கொடுப் பார்கள். இதை "கலத்தில் போடுதல்" என்பர். பின்பு தயாராக கரைத்து வைக்கப்பட்டிருக்கும் பால், பழத்தை மாறி மாறி அருந்துவார்கள். பின்பு வெற்றிலை, பாக்கு மடித்துக்கொடுப்பார்கள். பிரா மணர்களைக்கொண்டு கலியாணம் செய்வதாயிருந் தால் அம்மி மிதித்து அருந்ததிகாட்டி, மெட்டி அணிவிப்பார்கள். இவை முடிந்ததும் மாப்பிள்ளை ஆண்கள் பகுதியிலும், மணப்பெண் பெண்கள் பகுதியிலும் அமர்ந்ததும் விருந்துபசாரம் நடை பெறும். இடையிலே தோம்பதோரைக் கொண்டு திருமணப் பதிவும், நொத்தாரிஸ் மூலம் சீதன உறுதி எழுதுதலும் நடைபெறும். விருந்துபசாரம் முடிந்ததும் உறவினர்கள் பரிசளிப்பார்கள்.

**பெண் பார்க்கப் போதல்:—**

திருமணம் முடிந்து மூன்றாவது அல் லது ஐந்தாவது நாளில் மாப்பிள்ளை வீட்டாரும் உறவினர்களும் அடங்கிய பெண்கள் குழுவொன்று தங்கள் வீடுகளிலிருந்து கொண்டுவந்த பலகாரப் பெட்டிகளுடன் பெண் வீட்டுக்குப் போவார்கள். அங்கே பெண்ணும் மாப்பிள்ளையும் மன நிறை வோடு இருக்கிறார்களா? என்பதைக் கவனிப்பார் கள். இதைப் "பெண்பார்க்கப் போதல்" என்பார் கள். திருமணத்துக்கு முன் மாப்பிள்ளையும் வீட் டாரும் பெண் பார்க்கும் வழக்கம் இங்கில்லை. வேறு விதங்களில் பார்த்துக்கொள்வார்கள்.

**கால்மாறிப் போதல்:—**

திருமணம் முடிந்ததும் வசதியான ஒரு நல்ல நாளில் பெண் வீட்டார், பெண்ணையும் மாப்பிள்ளையையும், கூட்டிக்கொண்டு பலகாரப் பெட்டிகளுடன் மாப்பிள்ளை வீட்டுக்குக் கொண்டு போய் விடுவார்கள். அங்கு அவர்கள் சில நாட்கள் தங்கி இனத்தவர்களின் வீடுகளுக்கு பலகாரங்கள் கொண்டு போய் கொடுப்பார்கள். அவர்கள் ஒவ் வொருவரும் புதுமணத் தம்பதிகளுக்கு விருந்து கொடுத்து அன்பளிப்புகளும் செய்வார்கள். தற் போது "நாலாம் சடங்கு" என்று கூறிக் கொள்வது இந்த கால்மாறும் நிகழ்ச்சியாகும். தம்பதிகள் குழந்தை பெற்றதும் தலைப் பிள்ளைக்குரிய சகல செலவுகளையும் பெண் வீட்டார் ஏற்றுக் கொள் வது வழக்கம். இத்துடன் தம்பதிகளுக்கு மூன்று மாதம் அல்லது ஆறுமாதம் அவர்களது உணவுச் செலவுகளையும் பெண் வீட்டாரே ஏற்கும் வழக் கம் உண்டு. இது சம்பிரதாயமாக இருந்தாலும் பெண் வீட்டாரின் பொருளாதார நிலையைக் கொண்டும் மணமகனின் இரக்க சிந்தனையும் இதை மறுத்து விடுவதுமுண்டு.

**மரணம்:—**

ஒரு மரணம் ஏற்பட்டதும் முதலில் செய்தி எட்ட முடியாத தூரத்திலிருப்பவர்களுக்கு அறி வித்துவிட்டு, சலவைத் தொழிலாளர்களின் தலை வன் கட்டாடி பறையறைவோர் தலைவன் மூப் பன், சவரத் தொழிலாளி, பாளை, குருத்து வெட் டும் சாணர், தீவட்டி பிடித்துச் செல்லும் நளவர் போன்ற தொழிலாளர்களுக்கு அறிவிப்பார்கள். பிணத்தை நன்றாகக் கழுவி சுத்தம் செய்து துடைத்து தென்மேற்கு மூலையில் தலையும், வட கிழக்குத் திசையில் காலும் இருக்கக் கூடியதாக கட்டிலில் வளர்த்துவர். ஆண் பிரேதமாயிருந் தால் சவரத்தொழிலாளி அவருக்குச் சவரம்செய்து முடிந்ததும் பிணத்துக்கு கூறை உடைகளை உடுத்தி, திருநீறு, குங்குமம் அணிவர். மாலைகள் போடு வர். இரண்டு கால் பெருவிரல்களையும் நூலால் கட்டுவர். கால்மாட்டிலும், தலைமாட்டிலும் விளக்கு எரியவிடுவர். பக்கத்தில் மணக்குச்சிகள் வைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவினர் சுற்றியிருந்து ஒப்பாரி வைப்பார்கள். மரணச்சடங்கில் கலந்துகொள்ள வருபவர்கள் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை இவற்றைக் கொண்டுவந்து அங்கே வைத்திருக்கும் பெட்டி ஒன்றுக்குள் வைப்பார்கள். பிரேதம் இருக்கும் அறையின் வாசல் கூரையில் ஐந்து கூரை முடி (கும்பம்) சலவைத் தொழிலாளி வைப்பார். ஒவ்வொருவரும் வரும்போது பறை, மேளம் அடிப பார்கள். இன்னொரு பகுதியில் பிணத்தைக்கொண்டு போவதற்காக சவக்கட்டில் கட்டுவார்கள். இங்கு பாடையில் கொண்டுபோகும் வழக்கம் இல்லை.

**வாய்க்கரிசியிடல்:–**

சவ ஊர்வலத்துக்குரிய நேரம் வந்ததும் உறவினர்கள் மட்டும் அங்கே தயாராக வைத் திருக்கும் அரிசி, மஞ்சள் கலவையை எடுத்து பிணத்தின் வாயில் வைப்பார்கள். இக் கிரியைகள் முடிந்ததும் தேவாரம்பாடி விட்டு பிரேதத்தைத் தூக்கி கட்டிலில் வைத்து ஊர்வலமாகக் கொண்டு செல்வார்கள். தலை வாசலில் வைத்து கட்டிலை வெளியேயும், உள்ளேயும் போகக்கூடியதாக மூன்று தரம் நகர்த்தியதும், பறைமேளத்துடன் பிரேதம் செல்லும். பெண்கள் வீதிக்கு வராமல் கடப்படியு டன் நின்றுவிடுவார்கள். நளவர் முன்னால் தீப் பந்தம் பிடித்துச் செல்வார்.

**ஊர்வலம்:–**

ஊர்வலம் சந்திக்குச் சந்தி நிற்கும் இவ் வேளையில் முன்னர் பிரேதத்தைப் பாராத மக்கள் பார்ப்பார்கள். தற்காலத்தில் சிவபுராணம், பட்டி னத்தார் பாடல் போன்றவற்றைப் பாடிக்கொண்டு செல்வார்கள். தந்தை இறந்தால் மூத்த மகனும், தாய் இறந்தால் இளைய மகனும் குடங்கொள்ளி கொண்டு பிரேதத்தின் பின்னால் செல்வார்கள். சில்லறைக்காசு, நெற்பொரி, வர்ணக்கடதாசி துண் டுகள், தென்னம் பூ இவைகளைக் கலந்து சில பணக்கார வீட்டு பிரேதப் பெட்டிகளுக்கு மேலால் எறிந்து போவார்கள். பஞ்சமித் திதியில் இறந்த வரானால் சவத்தின் மேலால் எள் எறிந்து போவ துடன், கோழி அல்லது ஒரு முட்டையும் சேர்த் துப் புதைப்பார்கள்.

**மயானத்தில்:–**

மயானத்தில் முன்னரே வெட்டித் தயா ராக வைக்கப்பட்டுள்ள குழிக்குப் பக்கத்தில் கட் டிலை இறக்கி வைத்ததும், சவத்துக்கு அணிந்துள்ள பெறுமதியான நகைகளை கழட்டிக் கொடுத்ததும் அணிந்திருந்த உடைகளை கத்தரிக் கோலால் வெட்டுவார்கள். பின் பிணத்தை மட்டும் எடுத்துக் குழிக்குள் வைத்ததும் இனத்தவர்கள், நண்பர்கள் அனைவரும் மும்மூன்று பிடி மண்ணை அள்ளி மடுவை மூடுவார்கள். பின் பூமிக்கு மேலே உயர மாக இருக்கக் கூடியதாக மண் அணைப்பார்கள். பின்னர் சவரத் தொழிலாளி நீர்க்குடங் கொள்ளி கொண்டு வந்தவரை தலைமாட்டில் நிற்கவைத்து முட்டியின் அடிப்பாகத்தில் கத்தியால் ஒரு ஓட்டை போடுவார். நீர் வழியும், அப்போது அவரை பிணத்தைச் சுற்றிவரச் சொல்வார்கள். இவ்விதம் மூன்றுமுறை செய்வார்கள். இதன் முன் சவரத் தொழிலாளி சவமேடையின் தலைக்கு மேல் மூன்று பிரண்டந் தண்டுத் துண்டுகளை வைத்து மூன்று மண்வெட்டி மண்ணும், வயிற்றுக்கு மேல் இரண்டு தண்டும், இரண்டு மண்வெட்டி மண்ணும், காலுக்கு மேல் ஒரு தண்டும் ஒரு மண்வெட்டி மண்ணும் போட்டு மூடுவார்கள் இதன்பின் கற்பூரம் கொழுத்தி மணக்குச்சி புகைப்பார்கள். பின்பு சவக்காலைக் குக் கொண்டு சென்ற பொருட்களை எல்லாம் போட்டுவிட்டு வீடு திரும்புவார்கள்.

**வீட்டில்:–**

மயானத்திலிருந்து வந்தவர்களை அமர வைத்து வெற்றிலை, பாக்குக்கொடுத்து உபசரிப் பார்கள். பின் தண்டக்காரன் ஒரு வேட்டியை எடுத்து சபையிலுள்ள ஒரு பெரியவருக்கு முன் வைத்து உடையை மாற்றும்படி கூறுவான். அதன் பின் உறவினர்கள் அனைவருக்கும் மாற்று உடை கள் கொடுக்கப்பட்டதும் அவற்றை உடுத்துக்கொண்டு வீடு திரும்புவார்கள். எட்டு நாள் துக்கம் அனுட் டிப்பார்கள். எட்டு நாளும் அவர்களுக்கு வேண் டிய உணவுகளை இனத்தவர்களும், சம்பந்திக ளும் சமைத்துக் கொடுப்பார்கள். ஒவ்வொரு நாள் இரவும் முற்றத்தில் பெரிய கட்டைகளைப்போட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பு மூட்டுவார்கள். பிணத்தை வீட்டில் வைத்திருந்த இடத்தில் தேங்காய், நெய், விட்ட விளக்கு எரியவைத்து பக்கத்திலே ஒரு செம்பில் நீரும் வைத்து வெள்ளைத்துணியால் மூடி வைப்பார்கள். எட்டு நாள் இரவும் இப்படி வைத்து வைகுந்த அம்மானை என்ற நூலைப் படிப்பார்கள். நூலின் கடைசி அங்கமான வாழி பாடுவதை முப்பத்தோராம் நாள் அமுது அன்று படித்து முடிப்பார்கள். இடையில் மூன்றாவது நாள் புதையல் பார்க்க உறவினர்கள் மட்டும் போவார்கள். புதைத்த இடத்து மண் மேடையை துப்பரவு செய்து கற்பூரம், மணக்குச்சி கொழுத்தி பூவைத்து அஞ்சலி செலுத்திவருவார்கள். மூன்றாம் நாள் இரவு சர்க்கரைப் பொங்கலுடன் பலவித சிற்றுண்டிகளும் வைப்பார்கள். மாலை நேரத்தில் வைத்து விளக்குகளையெல்லாம் அணைத்துவிட்டு எல்லோரும் மௌனமாக இருப்பார்கள். பல்லி கத்தியதும் இறந்தவரின் ஆவி வந்திருப்பதாக நம்புவார்கள். பின்னர் பல்லி கத்தியதும் அவி போய்விட்டதாக நினைத்து அதில ஒரு பகுதியை வீதியில் வைத்து தண்ணீரும் வைப் பார்கள். உறவினர்களும் சாப்பிடுவார்கள். எட்டு நாள் முடிந்ததும் வீடுவாசல் வளவுகளை துப்பரவு செய்து கழுவி விடுவார்கள்.

**அமுது:-**

சாதாரண மரணமானால் இறந்து முப்பத்தோராவது நாளிலும், அகால மரணமானால் நாற்பத்தோராவது நாளிலும் அமுது கொடுப்பார்கள். இதில் குருக்களைக் கொண்டுவந்து கிரியை செய்து ஒவ்வொருவரும் திருநீறு வைப்பார்கள். அன்று மூன்று பெரிய மடை வைத்து பலவிதமான பலகார வகைகளும், சிற்றுண்டிகளும் வைப்பார்கள். இதில் ஒரு மடை சலவைத் தொழிலாளிக்கும் இன்னொரு மடை கிரியை செய்தவருக்கும் மூன்றாவது மடையை வீட்டாரும் பங்கிட்டுச் சாப்பிடுவார்கள். பின்பு இறந்த திதியிலன்று ஒவ் வொரு வருடமும் அமுது கொடுப்பார்கள். இதை ஆண்டமுது என்பார்கள்.

# சொந்தமான மகரந்தங்கள்

**- க. மோகனதாசன் -**

எமக்குத் தரப்பட்டதான
விடிவெள்ளிகள் -இன்னும்
உதிர்ந்து விடவில்லை!

ooo

எமது
மூலை முடுக்கெங்கணும்
சமக்கான வாசனைகள்
சுவாசப்பைகளை
குளிர்ச்சிப்படுத்துகின்றன!

ooo

மற்றவனின்
சருகுகளை மென்றுவிட்டு
நமது இருப்புக்களில்
நாம்
மலங்கழித்து விடக்கூடாதல்லவா?

ooo

எமக்கான முகவரிகள்
பச்சைத் தளிராகவே இருக்கிறது
எங்கள் சூரியப் புதையலை
எந்தக் கிரகணமும் கொள்ளையிடமுடியாது
நாம்
நாமாகவே இருந்தால்!

ooo

அன்றைய
எம் காற்சதங்கை
என்றும்
தனித்துவமான -நம்
தாற்பரியங்களுக்கு
கிண்கிணி பாடட்டுமே!

ooo

நம்
சுயங்களை இழந்து
சூட்சுமச் சிலுவைகளில்
அறையப்படலாமோ?

ooo

ஏன்?
எமது இருதயங்களை விற்று
இரும்புச் சட்டங்களை
அணிந்து கொள்வான்!


ooo

எமது
வாசனைகளை
மேலும் சுவாசித்து எமக்கான
வசந்த கீதத்தினை
எப்போதுமே
மொழி பெயர்த்திடுவோம்!

ooo

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் பண்பாட்டின் தேடலுக்கான ஒரு பதிவு



பண்பாடு பற்றிய கற்பிதங்கள், வாதப்பிரதிவாதங் கள், கருத்தாடல்கள் நிலவும் இன்றைய சூழலில பண்பாடுபற்றி, அதன் இன்றைய தேவைபற்றி, நம்ஈழத்தின் தமிழர் பண்பாட்டின் தொண்மை யின் அடித்தளம் பற்றிய பிராரம்ப பதிவாக இதனை அணுகலாம் என நினைக்கின்றேன்.

உண்மையில் பண்பாடு என்பது ஒவ்வொரு தனி மனிதனும் சொந்தப் பண்பு சார்ந்தது. இது தனி மனிதப் பண்பாடு. இந்தத்தளத்தில் இருந்து தனி மனிதர்கள், ஒவ்வொருவரும் ஒன்றிணைந்த சமு தாயமாக மாறுகின்றபோது அந்தச் சமுதாயத்தால் தீர்மானிக்கப்பட்ட தலைமுறை தலைமுறை சார்ந்து குழுவாகக் கற்ற நடத்தை முறைமைகள், உயரிய விழுமியங்கள் சேர்ந்த தகைசார் தொகுதி அச்சமூ கத்தின் பண்பாடு எனக்கருதலாம். அதனால் பண் பாடு எல்லோராலும் பகிரப்படுவதாகவும் இது அனைத்துத் தனி மனிதராலும், உட்குழுவாலும் புரிந்து கொள்ளக்கூடியதாகவும் அமைகின்றது.

இந்தவகையில் "பண்பாடு அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், வழக்கம் முதலானவையும், மனி தன் சமுதாயத்தின் ஒரு உறுப்பினனாக இருந்து கற்கும் பிற திறன்களும், பழக்கங்களும் அடங் கிய முழுமைத் தொகுதி" என்ற பண்பாட்டாய் வாளர் எட்வர்ட் என்பவரின் கருத்து மனங்கொள் ளத்தக்கது எனலாம்.

பண்பாடு பற்றி குரோபரும், குழுக்கானும் தங்கள் கருத்தியலை முன்மொழியும் முறைமை உற்று நோக்கத்தக்கது. ஏனெனில் இவர்கள் கருத்தியலில் பண்பாடு என்பது உற்று நோக்குதல், உய்த் துணர்தல் என்ற இரு கட்டுமானங்களைக் கொண் டது. உற்றுநோக்குதல் என்பது உண்மையியல் சார்ந் தது என்றும் உய்த்துணர்தல் என்பது கருத் தியல் சார்ந்தது என்றும் கருதுவது. இது ஒரு முறை யான நடத்தை முறைமைக்கு மக்கள் ஏற்படுத்திக்

**எம்.பி.ரவிச்சந்திரா**
விரிவுரையாளர்,
தேசிய கல்விக் கல்லூரி, மட்டக்களப்பு.

கொள்ளும் அமைப்பு அல்லது மனத்தளவிலான விதி இந்தப் பண்பாடு எனலாம்.

இந்தவகையில் பண்பாட்டினைப் புவியியல் சார்ந் ததாக, சாதி சார்ந்ததாக, இனம் சார்ந்ததாக, மொழி சார்ந்ததாக, ஏன் நகரம், ஊர் என விசாலித்துக் கொண்டே பார்க்கலாம். இதற்கு எடுத்துக் காட் டாக மொழிப்பண்பாட்டிற்கு தமிழ்பண்பாட்டைக் கருதலாம். இப்பின்புலத்தில் இப்பண்பாட்டினது உட்கூறுகளாக இலக்கியம், கோயில், சடங்கு, கலை கள், தொழில்கள் இவற்றைக் கருதலாம். ஹேபா வின் கருத்துப்படி "பண்பாட்டின் மிகச்சிறிய அலகே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டுக்கூறு'' எனின், இவை பண்பாட்டின் மிகச் சிறிய அலகுதான்

மானிடப் பண்பாட்டை ஆய்வு செய்த மானிடவியலாளர் சிலர் இப்பண்பாட்டைப் பொருள்சார்ந்த பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு என இரு வகையில் ஆராய்ந்துள்ளனர். பொருள்சார்ந்த பண்பாடு என்பது மக்களின் தேவைக்கான பொருட்கள், கட்டடங்கள், ஓவியங்கள், சிற்பங்கள், எனத் தொட்டுணர்ந்து பயன் பெறக்கூடியவை. பொருள் சாராப்பண்பாடு என்பது மக்களின் தேவைகளில் பொருள் வடிவம் பெறாத அழகியல், கற்பனை, நடிப்பு போன்ற கூறுகளை உடையது எனலாம். மேலும் ஒரு முதன்மைப் பண்பாட்டிற்கு நேர் எதிராகச் செல்லக்கூடியவைஒரு சமுகத்தின் பல்வேறு பிரிவுகளுக்குள் நிலவும் முதன்மைப் பண்பாடும் அதனோடு இணைந்த பிரிவுகள் சார் பண்பாடும் சார்ந்தவை. இவை உட்பண்பாடு, எதிர் பண்பாடு என்ற அடிப்படையில் ஆய்வாளர்களால் அணுகப்படுகின்றது எனலாம். மேலும் மக்கள் எவற்றைச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுவது உகந்த பண்பாடு. மக்கள் சமூகத்தின் சட்டதிட்டங்களைக் கவனத்திற்கொள்ளாது, நடைமுறை வாழ்வில் நடந்துகொள்வது உண்மைப் பண்பாடு. எடுத்துக் காட்டாக நாம் இன்று உகந்த பண்பாட்டிலிருந்து விலகி உண்மைப்பண்பாட்டில் வாழ்கின்றோம். ஏனெனில் காலனித்துவ ஆதிக்கத்தில் ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேல் அடிமைப்பட்டிருந்ததும், தற்கால தொடர்பாடல் ஊடகங்களினூடான நவகாலனித்துவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருப்பதும் இந்நிலைக்கு வித்திட்டுள்ளது எனலாம்.

இவ்வகையில் மாலினோஸ்கியின் கருத்துப்படி பண பாடு என்பது மிகவும் இணக்கமுற்ற ஒருங்கிணைந்த ஓர் ஒன்றியமாகும். ஆயினும் பண்பாடு இணக்கமுற்ற ஒருங்கிணைந்த பண்புகளின் அடிப்படையில் மாறிக்கொண்டேயிருக்கும் இந்த மாற்றம் வளர்ச்சிப் போக்காக அன்றி, சிதைக்கும் நோக்காக அமைந்தால் அது பல சிக்கலான நிகழ்வுகளைத் தோற்றுவித்துவிடும் இந்த வகையில் பண்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகளாக சிலவற்றை நோக்கலாம்.

- கண்டுபிடிப்புக்கள்
- நவீன மயமாதல்
- தொழில்நுட்பமயமாதல்
- புரட்சிகள்

இவற்றிலே நம் நாட்டில் புரட்சி காரணமாக எதிர்ப் பண்பாடு திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றது. இதனால் இங்கு மௌனப்பண்பாடு முகிழ்ப்புப் பெற்றிருக்கிறது. ஏனெனில் புரட்சிகள் பல்வேறு நோக்கங்களுக்காக உலகலாவிய ரீதியில் நடைபெற்றாலும், எமது நாட்டில் புரட்சியானது ஒரு தேசிய இனத்தின் நலனுக்காக, அதன் தொன்மையான மொழிக்காக, அதன் பண்பாட்டிற்காக இன்று நடைபெறுகின்றது. ஏனெனில் ஒரு தேசிய இனத்தின் தன்னடையாளங்களுள் ஒன்றாக பண்பாடு திகழ்கின்றது.

இந்நிலத்தின் தொன்மையான தமிழர் பண்பு தனிச் சிறப்புடையது அவர் தம் வரலாறு புகழுடையது. பெருமையுடையது, அடிப்படையானது தனித்தொரு தன்மையுடையது. உலகறிய உணர்த்தும் வெற்றியுடையது. உலகத்திலே நிலவும் தொன்மைவாய்ந்த பண்பாட்டு நிலைகளில் தமிழர் வாழ்வியலும் ஒன்றாகும். அதற்கு ஆதாரமாகப் பல தமிழ் இலக்கியங்கள் எம் கையில் உள்ளன. மனிதனின் பரிணாம வளர்ச்சி நிலையை, நிலைகளை இன்று மானிடவியலாளர் பல்வேறு ஆய்வுகளிலே காட்டுகின்றனர். விஞ்ஞான அறிவினது வளர்ச்சியும் தொழில்நுட்பக் கருவிகளினது பெருக்கமும் அவர்களின் ஆய்வுகளுக்குப் பேருதவி புரிகின்றன. அகழ்வாராய்ச்சிகள் மனித வாழ்வியலில் பழம்பெரும் சினனங்களை வெளிக்கொணர்கின்றன. இந்த நவீன ஆய்வுகள் தரும் தகவல்களைச் சில வேளைகளில் வெறும் ஊகங்களாலேயே பழைய மனித வாழ்வியலோடு இணைக்கவும் வேண்டியுள்ளது. ஆனால் இத்தகைய ஊகங்களை உண்மை நிலைகளாக விளங்கிக்கொள்ளப் பழைய இலக்கியங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் உதவும் என்பதைப் பல ஆய்வாளர்கள் மறந்து விடுகிறார்கள்.

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" எனக் கலித்தொகை சங்ககாலத்திலேயே பண்பின் தகைமையை தகைமைசார் பின்புலத்தைக் குறிப்பிடுகின்றது. அது நன்னெறியின் பாற்பட்ட அனைத்து இயக்கங்களினதும் வெளிப்பாடு என்பதைத் தெளிவுறுத்த முனைகின்றது. திருக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர் "பண்புடமையாவது பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்றே எல்லோர் இயல்புகளையும் அறிந்து ஒத்து ஒழுகுதல்" என எடுத்துவிளக்கியுள்ளார் பண்பிற்குப் பொருள் விளக்கம் தரும் சென்னைப் பல்கலைக்கழக அகராதியும் 'பிறர் இயல்பை அறிந்து நடக்கும் நற்குணம்' எனக் கூறுகின்றது. இது ஏதோ ஒரு வகையில் மனிதனிடம் பண்பு பொருந்துதலே பண்பாடு எனத் தெளிவுறுத்துகின்றது எனலாம். பண்பாடு என்பது இதுதான் என உணர்த்த எடுத்துக்கூற முடியாது விடினும் பண்பாட்டால் உலகம் சிறக்கிறது. அதுவும் தமிழ் உலகம் சிறக்கின்றது என்ற உண்மையை தமிழ் உலகம் மறுக்க முடியாது. ஏனெனில்.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்ற வள்ளுவரின் வரையறையைச் சிந்திக்க வேண்டும். இதுயதார்த்தமான ஈழத்தமிழர் பண்பாட்டுத் தேடலுக்கு வித்திடும் எனக் கருதலாம்.


# போர் வீரன் எல்லைகாண நாறிப்போன நாளும்

*எல்லை காணும் பயணத்தின்*
*தொடக்க நாளன்று*
*போர்வீரன் மீண்டும் நாறிப்போனான்.*

- க.மலர்ச்செல்வன் -
21.10.2003

*அது முன் முதிர்க்காலம்*
*தூரக்கடல் இரையும்*
*சமவெளியின்,*
*அகன்ற பெருநிலப்பரப்பில்*
*விழுங்கப்பட்ட எல்லையை*
*அவன் நிமிர்த்தி விட்டபோது,*
*பொய் முகங்கள்*
*காது, மூக்கு, வாய் வைத்து*
*காலத்தின் முன் வீசியெறியப்பட்டான்.*

*காலம் துயர்நெடி கிளப்பப் -*
*பாடுகிறது,*
*"நாத்தப்பாட்டை"*
*அவன் சற்றும் கலங்காது*
*உருப்பெருத்து வானில்படர்ந்த -*
*வார்த்தைகளை*
*வெப்பங்கொண்டு கரைத்ததாய்*
*கோவில் வெட்டையில் புலம்பினார்கள்.*
*கிச்சென்ற அதிர்வும் ஏற்படாமல்*
*அழிந்து போனதாய் கலங்கினார்கள்.*



*காலம் அவன்முன்*
*கைநீட்டுகிறது.*
*சற்றும் எதற்கும் அஞ்சாமல்*
*காலத்தின் முன்குரல் எழுப்பி*
*காது, மூக்கு, வாய் செய்யும்*
*பிரமாத்மாக்களைத் -*
*தேடியலையும்*
*காட்டேறியாய்*
*போர்வீரன் வீரவாளுடன் புறப்பட்டுப் போகிறான்.*

*நீ மட்டும்*
*பல்லிடுக்கில் நாறிப் போனதாய்*
*ஏதோ ஒரு கவிதையெழுதி,*
*நீ போய்விட்டாய்*
*அவன் அமத்திக்கொண்டு திரிய....*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரையம்பதியின் அற்புதக் கலைஞர்

# அமரர் எஸ்.கந்தையா அவர்கள்

– அன்புமணி –



**1. பொது**

சினிமா முக்கியத்துவம் பெறுவதற்கு முன் விலாச நாடகங்கள் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தன. புராண, இதிகாசக் கதைகளை மையமாகக் கொண்ட இந்நாடகங்கள் மிக நீளமானதாகவும், பாட்டும், வசனமும் கலந்ததாகவும் அமைந்திருக்கும்.

தமிழகத்தில் இத்தகைய நாடகங்கள் தொழில் முறையிலும் அமெச்சூர்ஸ்பெஷல் நாடகங்களாகவும் மேடை ஏற்றப்பட்டன. 1900களில் தமிழகத்தில் இத்தகைய பல நாடகக் கம்பெனிகள் இருந்தன.

பம்மல் கே.சம்பந்த முதலியார், கந்தசாமி முதலியார், நவாப்ராஜமாணிக்கம், டி.கே.எஸ்.சகோதரர்கள் முதலியோரின் நாடகக் கம்பெனிகள் தமிழகத்தில் புகழ்பெற்றவை. (இவர்களைப் பின்பற்றிப் பிற்காலத்தில், சினிமா நடிகர் மனோகர் T.R.மகாலிங்கம் முதலியோர் இத்த கைய நாடகக் கம்பெனிகளை நிறுவி, மரபு ரீதியான நாடகப் பணியைத் தொடர்ந்தனர் என்பது மற்றொரு தகவல்)

1930களில் தமிழகத்திலிருந்து சில நாடகக்கம்பெனிகள் இலங்கைக்குவந்து, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு முதலிய இடங்களில் இத்தகைய நாடகங்களை அரங்கேற்றின. இவற்றினால் ஊககுவிக்கப்பட்ட இப்பிரதேசக் கலைஞர்கள் தாமும் இவ்வாறான நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்ற முனைந்தனர். யாழ்ப்பாணத்தில் கலையரசு சொர்ணலிங்கம், மட்டக்களப்பில் வித்துவான் அ.சரவணமுத்தன் ஆகியோர் இவ்வகையில் நினைவுகூரத்தக்கவர்கள்.

மட்டக்களப்பில் தற்போது சுபராஜ் தியேட்டர் இருக்கும் அரங்கத்தில் தமிழகத்திலிருந்து வந்த நாடகங்கள் அரங்கேறின. பிற்காலத்தில் மட்டக்களப்பிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள ஆரையம்பதியில் இதே வகையான நாடகங்கள் மேடையேறின. அதற்குக் காரணமாக இருந்தவர் சங்கீத ஆசிரியர் அமரர் எஸ்.கந்தையா ஆசிரியர் அவர்கள்.

**2. சகல கலாவல்லவர்**

யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் நாடக சாபாக்களால் மேற்கொள்ளப்பட்ட பணியை ஆரையம்பதியில் நமது சங்கீத மாஸ்டர் தனி ஒருவனாக மேற்கொண்டார்.

ஆரையம்பதியில் இந்நாடகங்கள், பொதுவாக ஆலயத் திருவிழாக்களை ஒட்டி அல்லது சித்திரை வருஷப்பிறப்பு, தைப்பொங்கல், தீபாவளி போன்ற விசேட தினங்களை ஒட்டி அரங்கேறும்.

ஆலய நிர்வாகிகள் அல்லது ஒரு குழுவினர் இவ்வாறான நாடக அரங்கேற்றத்துக்கு ஏற்பாடு செய்வார்கள். நாடக ஏற்பாட்டாளர்கள் சங்கீத மாஸ்ரரிடம் பொறுப்பைக் கொடுத்துவிட்டால் அதன்பின் சங்கீத மாஸ்ரரே நடிகர் தேர்வு, வசனப் பயிற்சி, சங்கீதப்பயிற்சி, நடிப்பு ஒத்திகை, ஆடையணித்தேர்வு, திரைச்சீலை வரைதல் முதலிய சகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளையும் மேற்கொள்வார். ஒத்திகை நடக்கும் இடத்துக்கு உதவியாளர்கள். ஹார்மோனியத்தையும தபேலா, சல்லாரியையும் கொண்டு வந்து சேர்ப்பார்கள்.

சங்கீத மாஸ்ரரும், தபேலாக் கலைஞரும், மாலை 5 மணியளவில் வந்து சேர்வார்கள். வசனப்பயிற்சி சங்கீதப் பயிற்சி, ஒத்திகை என்பன இரவு 10 அல்லது 12 மணிவரை நீடிக்கும்.

இவ்வாறு 3 மாதங்களுக்கு மேல் பயிற்சி நடைபெறும். அதன்பின் நாடக அரங்கேற்றத்துக் கான கொட்டகை கட்டப்படும். நாடகம் அரங்கேறுவதற்கு இரண்டு நாள் முன்பாகவே "அடுக்குப் பார்த்தல்" (வெள்ளுடுப்பு ஒத்திகை) இடம்பெறும். இக்காலம் முழுவதும் ஆரையம்பதி ஒரே கலப்பாக இருக்கும். முதியவர், இளைஞர், சிறுவர் முதலிய அனைவரது வாயிலும் நாடக வசனம் அல்லது பாட்டு ஒலித்துக்கொண்டேயிருக்கும்.

### 3. வசனப் பயிற்சி, பாடல் பயிற்சி, ஒத்திகை

ஆரையம்பதியில் மேற்குறித்தவாறான விலாச நாடகங்கள் நான்கு அரங்கேறின. அவை

(i) சத்தியவான் சாவித்திரி (1938) முகத்துவாரத் தெருவார் ஏற்பாடு.
(ii) அல்லி அர்ஜுனா (1940) ஆரைப்பற்றைத் தெருவார் ஏற்பாடு.
(iii) பவளக்கொடி (1942) நடுத்தெருவார் ஏற்பாடு
(iv) துருவன் (1944) நடுத்தெருவார் ஏற்பாடு

ஆரையம்பதியில் ஊரவர் மத்தியில் மூன்று பிரிவுகள் உள. அவை

(i) ஆரைப்பற்றைத் தெரு
(ii) நடுத்தெரு
(iii) முகத்துவாரத்தெரு என்பன தெருவாரியாக ஏற்பாடு செய்யப்படும் நாடகத்தில் அந்தத் தெருவைச் சேர்ந்தவர்கள் மட்டுமே நடிக்கலாம். அந்தத் தெருவிலேயே நாடக அரங்கேற்றமும் இடம்பெறும்.

ஒரு தெருவுக்குள் நடிகர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படி நடிப்பதற்காக முன்வந்த பலர் படிப்பறிவு குறைந்தவர்களாக இருந்தனர். இதனால் அவர்களுக்கு வசனப் பயிற்சி, பாடல் பயிற்சி அனைத்தும் நேர்முகமாக வாய்மொழி மூலமாகவே சொல்லிக்கொடுக்கவேண்டும். இந்தச் சங்கடமான பயிற்சியை சங்கீத மாஸ்ரர் மிக வெற்றிகரமாக நிறைவேற்றினார். நாடக அரங்கேற்றத்தின்போது படித்தவர்களைவிட படியாதவர்கள் மிக அனாயாசமாக நடித்தனர்.

அக்காலத்தில் பெண் பாத்திரங்களையும் ஆண்களே ஏற்று நடித்தனர். (தமிழகத்திலும் இதே நிலைதான். அங்கு பெண் வேஷம் "அயன்ஸ் திரீபார்ட்" எனப்படும். நடிகர் சிவாஜிகணேசன் நாடகங்களில் 'நூர்ஜஹான்' முதலிய பல்வேறு பெண் பாத்திரங்களில் நடித்தார் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது).

ஆரையம்பதி நாடகங்களில் இவ்வாறு பெண் பாத்திரம் ஏற்பவரை அப்பாத்திரத்துக்கு ஏற்றவாறு பயிற்றுவிப்பது என்பது சிரம சாத்திய மான காரியமாகும். அதையெல்லாம் நமது சங்கீத மாஸ்டர் மிக இலகுவாக நிறைவேற் றினார்.

### 4. ஆரையம்பதியில் அரங்கேறிய 4 விலாச நாடகங்கள்

(i) "சத்தியவான் சாவித்திரி" நாடகம் 1938 அரங்கேறியது. சம்பூநாதன் சத்தியவானாக நடித்தார்

(ii) "அல்லி அர்ஜுனா" என்ற நாடகம் 1940ல் அரங்கேற்றப்பட்டது. இந்நாடகத்தில் நாகமணி ஆசிரியர் (தற்போது வாழைச்சேனை) அல்லியாகவும் த.பூபாலபிள்ளை (விதானையார்) அர்ஜுனனாகவும் நடித்தனர். அல்லி என்னும் வீராவேசமான பாத்திரத்தை நாகமணி ஆசிரியர் மிகவும் கச்சிதமாகச் செய்தார். அவ்வாறே அர்ஜுனன் பாத்திரமேற்ற பூபாலப்பிள்ளையும் கிருஷ்ணர் வேஷம் ஏற்ற மற்றொரு பூபாலபிள்ளையும் மிகச் சிறப்பாக நடித்தார்கள்.

(iii) "பவளக்கொடி" (1942) நாடகமும் இதே கதையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கியதுதான். இதில் பவளக்கொடியாக திரு.எஸ்.தம்பிராசா ஆசிரியர், அல்லியாக சு.பரசுராமன் ஆசிரியர், அர்ஜுனனாக, நடிக முன்னோடி சின்னவர் கணபதிப்பிள்ளை முதலியோர் சிறப்பாக நடித்தனர். வீராவேசம் கொண்ட 'அல்லி' பாத்திரத்தை சு.பரசுராமன் ஆசிரியர் மிகச் சிறப்பாகச் செய்தார். அவர் இன்றும் ஜீவிய வந்தராக உள்ளனர். சாமித்தம்பி என்பவர் கிருஷ்ணர் வேஷம் ஏற்றார்.

(iv) 'துருவன்'' (1944) நாடகத்தில் துருவனாக தம்பி ஐயாவும், கிருஷ்ணனாக தம்பிராசா ஓவசியரும் நடித்தனர். பிற்காலத்தில் தம்பி ஐயா மட்/கச்சேரியில் தேர்தல் கிளையில் இலிகிதராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார். திரு.தம்பிராசா ஓவசியர் மிக நீண்டகாலம் இளமை மாறாது வாழ்ந்திருந்தார்.

இதில் ஒரு சோகம் என்னவென்றால், மேற்படி நாடகங்களில் பிரதான பாத்திரங்களில் நடித்த எவருமே பிற்காலத்தில் வேறு நாடகங்களில் நடிக்காமற்போனதுதான். ஆனால் இந்நாடகங்களைப் பழக்கிய சங்கீத மாஸ்டர் மட்டும் தொடர்ந்து பல நாடகங்களைப் பழக்கியும், வேறு வழிகளில் பங்களிப்புச் செய்தும் தனது நாடகப் பணியைத் தொடர்ந்தார்.

**5. சங்கீத மாஸ்டர் பழக்கிய இரு சினிமாப் பாணி நாடகங்கள்.**

1950 க்குப்பின் விலாச நாடகப்பாணி மாறி, சினிமா பாணி நாடகங்கள் ஆரம்பமாகிவிட்டன. இவ்வகையில் ஆரையம்பதி முகத்து வாரத் தெருவில் இரு நாடகங்கள் அரங் கேறின. அவை,

(i) தூக்குமேடை

(ii) அந்தமான் கைதி

(i) **தூக்குமேடை** - கலைஞர் கருணாநிதி யின் பிரசித்தி பெற்றநாடகம். இது நூலாக வெளிவந்தது. அடுக்குமொழி வசனங்களும், அட்டகாசக் காட்சிகளும் நிறைந்தது. ஆரையம்பதியின் ஏழத்தாள முன்னோடி நவம் (சங்கீத மாஸ்டரின் தம்பியார்) இதை மேடையேற்றுவதில் முன்னின்று உழைத்தார்.

இதில் மு.சோமசுந்தரம் ஆசிரியர் கதாநாயகனாக நடித்தார். ந.தங்கராசா முதலியார் பாத்திரமேற்றிருந்தார். இந்த நாடகத்தைப் பழக்குவதிலும், சங்கீதப் பயிற்சி அளிப்பதிலும் சங்கீத மாஸ்டர் பெரும் பங்களிப்புச் செய்தார்.

(ii) **அந்தமான் கைதி** - 1950களில் சினிமாப் படமாக வெளிவந்தது (''கைதி'' என்ற பெயரில் மற்றொரு சினிமாப்படமும் வெளிவந்தது. அதற்கும் இதற்கும் சம்மந்தமில்லை) இதன் திரைக் கதை நூலாக வெளிவந்தது. அதையே சிலர் நாடகமாக நடித்தனர். மட்டக்களப்பு நகரில் முதலியார் தெருவைச் சேர்ந்த சில அன்பர்கள் இதை நாடகமாக மேடை யேற்றினர். ஆரையம்பதியிலும் முகத்துவாரத் தெருவில் இது நாடகமாக மேடையேறியது. சீ.கந்தசாமி (காகிதத் தொழிற்சாலை ஊழியர்) இதில் கதாநாயகியாக நடித்தார். (''வாழ்வின் ஜீவன் காதலே'' பாடலைப்பாடி அப்ளாஸ் வாங்கினார்) இந்த நாடகத்தைப் பழக்குவதி லும், மேடையேற்றுவதிலும் சங்கீத மாஸ்டர் பெரும் பங்களிப்புச் செய்தார். பாடல் பயிற்சியும் இவருடையதே

இவையாவும் ஞாபகத்திலிருந்தே எழுதப்படுகின்றன. அதனால் சிலருடைய பெயர்கள் தவறவிடப் பட்டுள்ளன.

**6. கத்தான்குடி மத்திய கல்லூரி**

அக்காலத்தில் (1940களில்) சங்கீத மாஸ்டர் காத்தான்குடி மத்திய கால்லூரியில் ஆசிரியராக கடமையாற்றினார். சங்கீதம், இந்து சமயம், தமிழ், சித்திரம் முதலிய பாடங்கள் இவருக்கு ஒதுக்கப் பட்டிருந்தன. நான் 5ம் வகுப்பு ஸ்கொ லர்ஷிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை சித்தி எய்தி 1945ல் இக்கல்லூரியில் 6ம் வகுப்பில் மாணவனாகச் சேர்ந்தேன்.

நான் மாணவனாகச் சேரும் முன் இக்கல்லூரியில் "சத்தியவான் சாவித்தரி" என்னும் நாடகம் மேடையேற்றப்பட்டது. இதில் பிரபல கலைஞர் "மூனாக்கானா" சத்தியவ்வான் பாத்திரம் ஏற்று நடித்தார். S.H.M இஸ்மாயில் சுமாலி பாத்திரம் ஏற்றார். தாளங்குடா ஆசிரியர் கந்தையா சாவித் திரியாக நடித்தார்.

நான் மாணவனாகச் சேர்ந்தபின் கல்லூரி நிதிக் காக "இரு சகோதரர்கள்" என்னும் நாடகம் பழக் கப்பட்டது. இதில் அடியேனுக்கு கதாநாயகியின் தோழிப் பெண் வேஷம் ("ஆடுவோம் வாங்கள் பாங்கியரே" என்று அந்தக் காலத்து சினிமாப் பாடல் ஒன்றைப்பாடி நடனமாடுவோம். இதில் S.H.M இஸ்மாயில் ஆரையம்பதியைச் சேர்ந்த எஸ்.கோணாமலை ஆசிரியர், நவம் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்தனர். "குமணன்" கதையை அடிப்படையாகக்கொண்ட இந்நாடகத் தில், அண்ணன் குமணன், தம்பியிடம் ராச்சி யத்தை ஒப்படைத்துவிட்டு வெளியேறும் சமயத்தில் "இந்தா தம்பி ரமணா என்னுயிர் பொன்ராச்சியம்" என்றுபாடுவார். குமணனாக நடித்த கோணாமலை ஆசிரியர். அவர் இப்போதும் எம்மத்தியில் உள் ளார்.

இதிலும் ஒரு பெரிய சோகம். நாடகம் வெற்றி கரமாகத் தயாரிக்கப்பட்டு துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு டிக்கட்டுகளும் விற்கப்பட்டி ருந்தபோது 'நாடகம்' நடிப்பது இஸ்லாம் மதத் துக்கு விரோதமானது என்னும் சர்ச்சை எழுந்து நாடகம் அரங்கேறாமல் தடுத்துவிட்டனர். (இதற்கு முன் மூனாக்கானா நடித்த "சத்தியவான் சாவித்திரி" நாடகம் மேடையேற எப்படி இட மளிக்கப்பட்டது என்பது புரியவில்லை).

**7. பன்முகத்திறமை**

காத்தான்குடி மத்திய கல்லூரியில் சங்கீத மாஸ்ரர் ஆசிரியராகப் பணியாற்றியபோது, 6ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை (எஸ். எஸ்.சி) அத்தனை வகுப்புக்களுக்கும், சங்கீதம், ஓவியம் ஆகிய பாடங்களைக் கற்பித்தார். சுர வரிசை 12 வரையும் கர்நாடகப் பாடல்களும் அவர் பயிற்றுவித்தார். சமய பாடவகுப்புக்களில், பஞ்சபுராணம், திருப்புகழ் முதலியவற்றை அவ்வவற்றுக்குரிய பண்ணுடன் பாடி, முறையாகப் பயிற்றுவிப்பார். வாத்தியங்க ளைப் பொறுத்தவரை, ஹார்மோனியம், வயலின், புல்லாங்குழல், மிருதங்கம், தபேலா முதலிய வற்றை மிக அனாயாசமாக வாசிப்பார்.

கல்லூரியில் நடைபெறும் எந்த விழாவாக இருந் தாலும் அதில் சங்கீத மாஸ்ரர் கதாநாயகனாக விளங்குவார். ஓவியத்தட்டி வரைதல், வரவேற்புப் பாடல் பயிற்றுவித்தல், பாடசாலைவளாக அலங் காரம் எனப்பல அம்சங்களில் அவர் பங்களிப்புச் செய்வார். மாவட்ட மட்டத்தில் நடைபெறும் பல போட்டிகளுக்கும் அவர் நிகழ்ச்சிகளைத் தயாரிப் பார். பல நிகழ்ச்சிகள் பரிசுகளையும் பெற்றன.

இத்தனைக்கும் அவருடைய பதவி 'தராதரப் பத் திரமற்ற ஆசிரியர்' என இருந்தது. குறைந்த சம்ப ளமே கிடைத்தது. (மட்டக்களப்பு அரசினர் கல் லூரியில், தமிழ் விரிவுரையாளராகக் கடமை ஆற் றிய புலவர்மணி ஏ.பெரியதம்பிப் பிள்ளை அவர் களுக்கும் இதே நிலைமை தான் என்பது இங்கு நினைவுகூறத்தக்கது)

சங்கீத மாஸ்ரரை ஆதர்சமாகக் கொண்டு ஆரை யம்பதியில் பல நாடகக் கலைஞர்களும், நாடக மன்றங்களும் உருவாகின. ஆரையூர் இளவல் அன்பு மணி, ஐ.சிவசுந்தரம் முதலிய கலைஞர்கள் உரு வாகினர். கவின்கலை மன்றம், இளங்கதிர் நாடக மன்றம் 'இலங்கேஸ்வரன் இசைக் குழு' முதலிய மன்றங்கள் தோன்றின. 30.6.62ல் மட்/நகர மண்ட பத்தில் இடம்பெற்ற அன்புமணியின் "திரைகடல் தீபம்" நாடகம் சங்கீத மாஸ்ரர் கந்தையா அவர்க ளின் தலைமையில் நடைபெற்றது. அவரும் கௌரவிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8. வாழ்க்கைக் குறிப்பு**

இவரது முழுப்பெயர் சீனித்தம்பி கந்தையா இவர் ஆரையம்பதியில் 17.07.1909ல் சீனித்தம்பி, வன்ன மணி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். மனைவி பெயர் இரத்தினம் கணேஸ்வரி. (மங்களேஸ்வரி, சத்தியேஸ்வரி, தர்மவதி, மோகன், கலாதரன், கல்யாணி, செந் தூரன் ஆகியோர் இவரது மக்கட் செல்வம்)


மட்/கத்தான்குடி மத்திய கல்லூரியிலும் பின்பு மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயத்திலும் ஆசிரியராக பணியாற்றிய இவர் ஓய்வுபெற்ற பின் சமயப்பணிகளில் ஈடுபட்டார்.

இவரது தம்பியார் நவம் (தற்போது இந்தியா) இவருக்கு அனுசரணையாக இருந்ததுடன் நாட காசிரியராகவும், நாவலாசிரியராகவும் விளங்கி னார்.

இவரது குடும்பத்தைச் சேர்ந்த செல்லையா, அழ கையா முதலியோர் சிறந்த தபேலாக் கலைஞராக விளங்கினர். இவரது குடும்பத்தைச் சேர்ந்த அனைவருமே சிறந்த பாடகர்களாக விளங்கினர். இந்த சங்கீதக் குடும்பத்தில் சேர்ந்து கொண்ட த.நல்லலிங்கம் ஆசிரியரும் ஒரு சிறந்த இசைக் கலைஞர் ஆவார்.

1940களில் நாடக உலக ஜாம்பவனாக விளங்கிய சங்கீத மாஸ்ரர் கந்தையா, தனது வாழ்நாள் முழுதையும் நாடகத்திற்கும், சங்கீதத்திற்கும் அர்ப்பணித்தவர். இவ்விரண்டும் தனது இரு கண் களாக வாழ்ந்தவர். ஆரையம்பதியிலும், அயல் கிராமங்களிலும், தனது கலைச்சேவையை வழங் கியவர். அன்னாரது நினைவாக அவர் வசித்த வீட்டு ஒழுங்கை 'சங்கீத மாஸ்ரர் கந்தையா ஒழுங்கை' எனப் பெயரிடப்படவேண்டும். ஆனால இதைவிடவும் வேறு ஒரு சிறந்த நினைவுச்சின்னம் இவர் பெயரில் எழவேண்டும்.

## ஊடுபாயும் வெப்பக்குவியல்



என்னைக்காத்திராத -
தனித்தீவில் நிற்கிறேன்.
அம்புகள் இழந்து
வில்லுகள் உடைந்து
என் தைரியம் ஒன்றை யாரும் -
உடைத்துவிட முடியாது.

ஊடுபாயும் வெப்பக்குவியலில்,
கருகித்தீர்ந்திராது
ஒரு தீ நாக்காய் இணைவேன்.
இடியும், மழையும் வருமெனயெண்ணி
தனித்தீவில் நிலாக்காய்கிறேன்.

மீண்டும் தீ
சுழலாய், -
வெப்பக் காற்றையள்ளிவீசி
வேகம்கொண்டு
பறைகிறது.
உயிர் மூச்சியிலிருந்து
கிளைபரப்பித்தாவும் அம்பு
எம்மண் துளிர்த்திட ,
விதைகளைத் தூவும்.

-மாசெ-
20.09.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை**

# சீர்வரிசை

**-அ.சுரேந்தினி -**

வழமையான கொட்டாவியுடன் கண்ணகியின் அன்றையப் பொழுது புலர்ந்தது. ஆதவன் தன் ஒளிக்கதிர்களை உலகுக்குவீசி உயிர் காக்கும் தன் பணியினை மேற்கொள்கிறான். காகம் கரைந்து கரைந்து கண்ணகியின் வாசலில் கூடிக் குவிகின்றன. கண்ணகி வீட்டுக்குள்ளிலிருந்து வாசலுக்கு வருகிறாள். கா! கா!! என்று கத்திக்கொண்டு நின்ற காகங்களைத் துரத்துகிறாள். காகங்கள் பறக்கும் பின்னர் வாசலில் நின்று கத்தும் இப்படியாக கண்ணகியிடம் உணவு கேட்டு காகங்கள் தொல்லைப் படுத்துகிறன. காகங்களின் நிலைமையை உணர்ந்த கண்ணகி - மீண்டும் வீட்டுக்குள் நுழைகிறாள்.

“மகள் எழும்புங்கம்மா! வாசலைக் கூட்டி, குளிச்சித்துப் படத்துக்குப் பூ வையுங்கோ! நான் தேத்தண்ணிய வைக்கிறன்’.
சொல்லிக்கொண்டே கண்ணகி பழஞ்சோற்றுப் பானைக்குள் அகப்பையை விட்டுச் சோற்றை அள்ளிக் கொத்து கோப்பையில் எடுத்துக்கொண்டு - வெளியே வந்தாள்.




“விடியற்சாமத்தில் வந்திருங்கள் இந்தக் காக்கா கௌயள் இதுகளுக்கு ஒவ்வொரு நாளும் பழஞ் சோறு குடுத்துக் குடுத்து நான் பழுதாக்கிப்போட்டன். திண்டுத்து ஓடுங்கோ”
கண்ணகி சோற்றைப் போடுகிறாள். காகங்கள். கோழிகள் எல்லாம் சேர்ந்து சாப்பிடுகின்றன. கண்ணகியின் மகள் மணிமேகலை கிணற்றடியைக் கூட்டி- முகத்தைக் கழுவிக்கொண்டு பூக்களைப் பறித்துக் கழுவிக்கொண்டு வீட்டுக்குள் செல்கிறாள்.

“என்ன இந்த சனியன் காக்கா! விரசிக் கொத்துது. சோறுபோட்டும் நண்டி இல்ல. இந்தக் காக்காய்க்கு. சூய்ச்சூய் - சனியன்”

கண்ணகியும் இப்படிச் சொல்லிக்கொண்டு காகத்தைத் துரத்த, கடப்படியில் கணபதிப்பிள்ளை அண்ணனும் கணணகியைக் கூப்பிட்டு விடயத்தைச் சொல்லவும் சரியாக இருநதது.

“ராவு அடிச்ச மின்னல் ஒளியில உங்கட புருசனாரு செத்துப் போயித்தாருபுள்ள - வட்டைக்குள்ளதான் சவம் கிடக்குது”

கணபதிப்பிள்ளை அணணனுடைய வார்த்தைகள் கண்ணகியைத் தூக்கி வாரிப்போட்டது. தான் உயிராக மதித்த தலைவன் செத்துவிட்ட செய்தி கேட்டு கண்ணகி துடித்தாள். தன்னுடைய மகளின் வாழ்க்கையை நினைத்துக் கருகினாள். தன் மகனுடைய பல்கலைக்கழகப் படிப்புக்கு உதவி செய்ய யார் முன் வருவார்கள் எனக் கதறினாள். தன்னுடைய கணவனுடைய அன்புக்கு அடிமையாய்ப்போன கண்ணகி, தன்னுடைய மகள் மணிமேகலையிடம் விடயத்தைச் சொன்னாள். மணிமேகலை தன்னு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய இனிய தந்தையை இழந்து இதயம் வெடிக்கக் கதறினாள்.

"அப்பா! அப்பா! இனி எங்களுக்கு யாரப்பா துணை - எங்களுக்கு வழிகாட்டி யாரப்பா - எங்களுக்குச் சோறு போடுவது யாரப்பா" கணபதிப் பிள்ளை அண்ணன் குறுக்கிட்டார்.

"கண்ணகி அழுது பயனில்லை. ஆவதைக் கவனிக்கவேண்டும். மரணம் நிச்சயம் அம்மா! அது பல வடிவத்திலும் வரலாம். ஆண்டவன் தீர்ப்பின் படி. நான் அவன்ர கோபால் அண்ணன்ர மெசினையும் ஆக்களையும் எடுத்துற்றுப் போய் சவத்தைக் கொண்டுவாறான்"

கண்ணகியினுடைய கணவனின் நல்லடக்கம் மிக்க சிறப்பாக நடந்தேறிற்று. நாட்களும் ஓடி - வருடங்களும் ஓடிக் கொண்டிருக்கிறது. மணிமேகலையும் வளர்ந்து - படிப்பை க.பொ.சா.தரத்துடன் நிறுத்திவிட்டு வீட்டிலேயே அம்மாவுக்குத் துணையாக இருக்கிறாள். வீட்டுவேலைகளை முடித்து விட்டு, வீட்டு முற்றத்தில் நிற்கும் "விளாட்" மாமரத்தின் கீழ் ஏதோ படித்து கொண்டே இருப்பாள். பத்திரிகைகள், நாவல்கள், இதிகாச புராணங்கள் எல்லா புத்தக்களையும் மிக்க ரசனையுடன் படித்துச் சுவைப்பாள். கவிதைகள், கட்டுரைகள் எழுதி மாணவர்களுக்குக் கொடுப்பாள். பிஞ்சிக் குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பாள். குழந்தைகளோடும், உறவினர்களோடும் தனது அன்பைச் செலுத்தி வாழ்ந்து கொண்டிருக்கின்ற 'மணிமேகலை' தனது அண்ணன் பல்கலைக் கழக கலைப்பீட மணவன் 'வசந்தனிடம்' முழு உயிரையே கொடுத்து நிற்கிறாள். வீட்டையும் வாசல் வளவையும் புனிதமாக வைத்திருப்பது போல் தன் உடலையும் -உளத்தையும் மணிமேகலை புனிதமாகப் பேணினாள். வெளிக்குச் செல்லும் போது பின்னலும் வீட்டில் இருக்கும்போது கொண்டையும் கட்டிக்கொள்வாள். கூந்தலில் அணியும் பூச்சரங்கள் மணிமேகலையினுடைய மெல்லிய பேரழகுக்கு வாசம் ஊட்டி நின்றது. ஒட்டு மொத்தமாக தமிழ் கலாசாரம் நிரம்பிய பேரிளம் பெண்ணாக மணிமேகலை திகழ்ந்தாள்.

ஒருநாள் பிற்பகல் வேளை, ஊரெல்லாம் மாலைக் கடன்களை நிறைவேற்றுவதில் மக்களெல்லாம் கிடுகிடுப்பாகத் திரிகின்றார்கள். தென்னை மரங்களாலும், வாழை, மா, பலா, தோடை மரங்களாலும் பூச்செடிகளின் வாசத்தாலும் நிரம்பி இயற்கையின் எழிலை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்ற அவ்வூரின் சிறப்பை ரசித்தவண்ணமே பல்கலைக்கழக மாணவன் வசந்தனுடன் - அவனுடைய நண்பன் "மணிமாறனும்' வீட்டுக்கு வருகிறார்கள்.

"வசந்தன் உங்கட ஊர் வளம் எனக்கு நன்றாகப் புடிச்சி இருக்குடா"மணிமாறன் வசந்தனைப் பார்த்துக் கூறுகிறான். மணிமாறனுடைய இயற்கை ரசனையை உணர்ந்த வசந்தன்,

"எங்கட ஊர் எப்பொழுதும் அப்படித்தான் மச்சான், வியூட்டியாத்தான் இருக்கும். எதுக்கும் வீட்ட .போவம் வாவன்"

வசந்தனும் மணிமாறனும் வசந்தனுடைய வீட்டுக்கு வருகிறார்கள். அண்ணன் வசந்தனையும் நண்பன் மணிமாறனையும் மணிமேகலை அன்புடன் வரவேற்கிறாள். சிற்றுண்டி, தேனீர் முதல் சாப்பாடுவரை நன்றாக சமைத்துப்போட்டு அண்ணனுடனும், மணிமாறனுடனும் மனம்விட்டுக் கதைத்துச் சிரித்து மகிழ்ந்தாள் மணிமேகலை.

மணிமேகலையின் நடவடிக்கைகளையும், அழகையும் - அன்பையும் மணிமாறன் கவனித்து உள்ளூரச் சமித்துக் கொள்கிறான். அடுத்தநாள் வசந்தனும், மணிமாறனும் மணிமேகலைக்கு நன்றி கூறிவிட்டு பல்கலைக்கழகம் நோக்கிப் பயணமாகின்றார்கள்.

மனிதனுடைய வாழ்வியல் அரங்கம் அங்கம் அங்கமாக இவ்வாழ்க்கையைப் பகுத்துப் பிரித்துக் காட்டுவதன் மூலந்தான் மானிட வளர்ச்சி எவ்வாறானது என்பது புரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தனுடைய பட்டப்படிப்பை தாய் கண்ணகி கஷ்டங்கள் வந்தாலும் தோள் கொடுத்து முடித்து வைக்கிறாள். ஆனாலும் கண்ணகியின் மனோ நிலை மகள் மேகலையின் பக்கமே உருகிச் செல்கிறது. "நல்ல ஒரு மாப்பிள்ளையாக கடவுள் கொடுக்கவேணும். என்ர மகளுற வடிவுக்கும், பண்புக்கும் ஏத்த புருஷன் வரவேனும். சீதனக் கொடுமைக்காரனுகளிட்ட என்ற மகள் மாட்டிரப் போடாது அம்மாளே! மகமாரி!

யாரோ கடப்பில் செருமும் சத்தம் கண்ணகியின் காதில் விழுகிறது. எட்டிப்பார்க்கிறாள்.

"அடியே கண்ணகி! நீ என்ற மகன மாப்பிள்ளைக்கு எடுக்கிரெண்டா எத்தனை தவம் இருக்க வேணும். என்ற மகன் டகுத்திரடி. காசு 15 லட்சம் வரவேணும். காறு வரவேனும் - குச்சிக்குடிலுக்குள்ள இருந்திற்று கணபதி அண்ணனிட்ட மாப்பிள்ளை கேட்டு அனுப்பித்தாவு" கண்ணகிக்கு தன்னுடைய மச்சாளின் வார்த்தைகள் ஈயத்தைக் காய்ச்சி இருதயத்தில் ஊற்றியது போன்றிருந்தது. மணிமேகலை தனது சொந்த மாமியின் அதிரடிப் பேச்சுக்களைக் கேட்டு அதிர்ந்தவளாய் காதுகளைப் பொத்திக் கொண்டு வீட்டுக்குள்ளேயே இருந்தாள்.

"இஞ்ச மச்சாள் கணபதி அண்ணன் என்னிட்டக் கதைச்சவரே தவிர - உங்கட்ட மாப்பிளை கேட்டு வந்தது எனக்குத் தெரியாது. அண்ணன்ர மகன் என்ர புள்ளைக்கு முறைமாப்பிளை என்று உன்னிட்ட கதைச்சிருப்பாரு! அதுக்காக பண்பாடு இல்லாம றோட்டில நீ வந்து சத்தம் போடுறது உனக்கும் கௌரவமில்லை. எனக்கும் கௌரவம் இல்லை. கண்ணகியும் லேசாக நியாயத்தைச் சொல்லி விளக்கிக் கூறினார். "எங்கெருந்து வந்த துடி உனக்குக் கௌரவம். என்ர புள்ளய விலை குடுத்து வாங்க உன்னால் ஏலுமாடி சீதனம் கொடுக்க வக்கில்லாதவள் மாப்பிள்ளை கேட்டு அனுப்பிற்றாவு.

முந்தானையை இழுத்துச் சொருகிக்கொண்டு கண்ணகியின் மச்சாள் திடும்திடும் என்று நடந்துசென்று கொண்டிருக்கிறாள். தாயும் பிள்ளையும் மிக்க வேதனைப்பட்டவர்களாக வசந்தனுக்கு இவ்விடயம் பற்றிக் கடிதத்தின் மூலம் தெரிவிக்கிறார்கள். அன்று அவன் குழம்பிப் போயிருந்தான். படிக்கவும்கூட மனமில்லாமல் புத்தகத்தைக் கையில் வைதுக்கொண்டு தனது தங்கையின் நிலையைப் பற்றிவசந்தன் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

"டேய் வசந்தன் நானும் பாக்கிற நேரமெல்லாம் ஏதோ பறிகொடுத்தவன் போன்று சிந்தித்துக் கொண்டே இருக்கிறாய்"

"வசந்தன் உன்னுடைய தங்கை மணி மேகலையிடமுள்ள சீர்வரிசைகளுக்கு மேலானா சீதனமும், ஆதனமும் என்னடா இருக்கு. நான் அன்றொரு நாள் அவளைக் கண்டதும் பழகியதும் அவளுடைய பண்பாடுகளை வெளிப்படுத்தியது. இந்தச் சமூகம் நினைப்பதும் வாங்குவதும் சீர்வரிசை இல்ல மச்சான். அது ஏலம் மச்சான். மனிதப் பண்புகளை ஏலத்தில் விற்றுப் பணம் வாங்கி திருமணம் என்ற புனிதமான சொல்லுக்கும் சீர்வரிசை என்ற சிறப்புப் பதத்துக்கும் களங்கம் விளைவிப்பதை நம்மைப் போன்ற படித்தவர்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. சீர்வரிசை என்றால் என்ன? என்பதை வாழ்ந்துகாட்டி நான் நிரூபிக்கிறன். கலியாணத்தை ஏற்பாடு செய்" வசந்தன் திகைத்துப் போய்விட்டான்.

"டேய்! டேய் மணிமாறன் யாருக்குடா கலியாணம்! யாருடா என்ர தங்கச்சிக்கு மாப்பிள்ளை" வசந்தன் திணறிக் கொள்கிறான். "மணிமாறனுக்கும் மணிமேகலைக்கும் திருமணம் என்று நம்மட நண்பர்களுக்கெல்லாம் சொல்லி ஏற்பாடு செய்"

சொல்லி முடிப்பதற்கிடையில் வசந்தன் மணிமாறனை பாய்ந்து கட்டிப்பிடித்து முத்தங்களைப் பகிர்ந்து கொள்கிறான்.

**பிரதேச சாகித்தியவிழா -2003 ஐயொட்டி மண்முனைப்பற்றுப் பிரதேச செயலகம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்முனைப்பற்றுப் பிரதேச நாடக முயற்சிகள்

- ஆரையூர் இளவல் -

"உயிர்க்கு உறுதி பயக்கும் மருந்தினை உண்ண விரும்பாத ஒரு மகனுக்குச் சர்க்கரையினுள் அம்மருந்தினைப் பொதிந்து வைத்து உதவுகின்ற அன்புடையாளன் போல் உயிர்க்கு உறுதி பயக்கும் உண்மையினை நவரசங்களுள் செறிந்து வைத்து உதவும் நீர்மையது நாடகம்" என அருட்திரு சுவாமி விபுலாநந்த அடிகளார் கூறியுள்ளனர்.

தமிழ் மொழியின் தொடக்கத்திலிருந்தே நாடகத் தமிழ் வளர்ந்து வந்துள்ளது. மக்கள் அறிந்த முதற கல்வி நாடகக் கல்வியாகும். அகத்தியத்தில் நாடகத் தமிழுக்கும் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. முதல் இடைச் சங்கங்களில் பல நாடக நூல்களும், நாடக இலக்கண நூல்களும் தோன்றின. அவற்றில் பஞ்ச பாரதீயம், பரதம், முறுவல், சயந்தம், செயற்றியம், குணநூல், மதிவாணர் நாடகத் தமிழ்நூல் என்பன சிலவாகும்.

"பாடலோர்த்தும் நாடக நயந்தும்" எனப் பட்டிணப் பாலையில் வருகின்றது. "கூத்தாட்டலைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம் போக்கும் அது விளிந்தற்று" எனக் குறள் கூறுகின்றது.

"நடமே நாடகம் கண்ணுள் நட்டம்
படிதம் ஆடல் தாண்டவம் பரதம்
ஆறுதல் தூங்கல் வாணி குரவை
நிலையம் நிரூத்தம் கூத்தெனப்படுமே"

எனத் திருவாசகம் செப்புகின்றது.

சங்க காலத்திலும் அதனை அடுத்த காலத்திலும் நாடகங்கள் நடிக்கப்பட்டனவென்பதும், பலர் திரள் திரளாக அவற்றைப் பார்த்து மகிழ்ந்தனர் என்பது இன்னும் பல செய்திகளும் தமிழ் நூல்களால் அறியப்படுகின்றன.

இவ்வாறு தோன்றி வளர்ந்த நாடகத் தமிழ் வீழ்நிலையை அடையப்புகுந்தது. அதற்கான காரணம் என்ன?

ஒழுக்கநிலை வகுக்கப் புகுந்த ஆரியரும், சைனரும் நாடகக் காட்சியால் காமமே அறிவினும் மிகப் பெருகின்றதென்ற போலிக் கொள்கையுடையவராய்த் தம் நூல்களிற் கண்டிக்கப்படுவற்றுள் நாடகத்தையும் சேர்த்துக் கூறினர். அக்காலத்திலிருந்த அரசர்களுக்குத் துர்போதனை செய்து நாடகத் தமிழை தலையெழவொட்டாது அடக்கி வந்தனர்.

இந்த உண்மைகளையும், சங்ககாலத்தில் நாடகம் வளர்ந்த வரலாற்றையும் அறியாதவர் பலர் நாடகம் தமிழுக்குப் புதியது என்று கருதவும், கூறவும் முற்பட்டு இடர்பட்டுள்ளனர்.

தமிழ் மொழியின் தனித்தன்மைகளையும், தமிழ்ப் பண்பாட்டின் தனித்தன்மைகளையும் பாதுகாப்பதோடு, பிற மொழியாளர்களுக்கும், பிற பண்பாட்டினருக்கும், தமிழ் மொழியைப் பற்றியும், தமிழ் பண்பாட்டைப் பற்றியும் உணர்த்துகின்ற நோக்கில் உருவானதே "தொல்காப்பியம்" எனும் நூலாகும். இந்நூலில்

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்"

என வருதலால் தொல்காப்பியர் காலத்திலேயே (கி.மு.5ம் நூற்றாண்டு) தமிழ் நாடகக்கலை சிறப்புற்றிருந்தன என்பது அறியப்படுகின்றது.

சோழர் பெரு மன்னர் ஆட்சிக் காலத்தில் "இராசராசேஸ்வர" நாடகம் முதலியவற்றை மக்கள் கோவில்களில் நடித்து வந்தனர். அந்நாடகங்களும் இக்காலத்தில் கிடைத்தில. நாயக்க மன்னர் காலந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் மக்களால் நாடகத் தமிழ் போற்றப் பட்டுவந்துள்ளது. அரிச்சந்திர நாடகம், கிருஷ் ணன் தூது நாடகம், மார்க்கண்டேயர் நாடகம், சிறுத்தொண்டர் நாடகம், அல்லி நாடகம், பவளக் கொடி நாடகம், கோவல நாடகம், காத்தவராயன் நாடகம், இராவணச்சமார நாடகம், ஆதி நாடகம், கண்டி நாடகம், பூதத்தம்பி நாடகம் முதலிய பல நாடகங்கள் தமிழில் எழுதப்பட்டன. அவை தமிழ் முறைகளைத் தழுவி நடிக்கப்பட்டு வருகின்றன.

ஆங்கில நாடக நூல்களைக் கற்ற பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, சூரிய நாராயண சாஸ்திரியார் (பரிதிமாற் கலைஞர்) முதலிய ஆசிரியர்கள் சேக்ஸ்பியர் முதலிய ஆங்கில நாடக ஆசிரியர் கள் இயற்றிய நாடகங்களைப் பின்பற்றி தமிழில் நாடக நூல்களை இயற்றத் தொடங்கினர். பேராசி ரியர் சுந்தரம்பிள்ளை இயற்றிய "மனோண்மணி யம்" எனும் நாடகத்தில் தீந்தமிழ்த் தேன் சிந்தும் பல பாடல்கள் நிறைந்துள்ளன.

பேராசிரியர் சூரிய நாராயண சாஸ்திரியார் கலா வதி, ரூபாவதி மானவிதையம் எனும் நாடகங் களை இயற்றியுள்ளனர். இவர்கள் காட்டிய வழி யைப் பின்பற்றி இருபதாம் நூற்றாண்டில் பல நாடகங்கள் இயற்றப்பட்டுள்ளன.

ஆங்கில நாடக ஆசிரியர்களுள் சேக்ஸ்பியர் புகழ் பெற்றவர். இவர் கி.பி. 1564 முதல் 1617 வரை வாழ்ந்தவர். தமது 27வது வயது முதல் நாடக நூல் இயற்றி வந்த இப்புலவர் 45 நாடக நூல்கள் இயற்றியுள்ளனர். இவரது நாடக நூல் களை ஆராய்ந்த வித்தகர் விபுலானந்த அடிக ளார் சங்க காலத்தமிழ் அறிஞர்கள் வகுத்துரைத்த நாடக உறுப்புகள் அனைத்தும் செகசிற்பியரது நாடகங்களில் செறிந்து நிறைந்திருப்பது கண்டு வியப்புற்றனர். அவரது நாடகங்களை அனுப வித்த அடிகளார் செகசிற்பியருக்கு "மதங்க சூளா மணி" என நாமஞ்சூட்டி "மதங்கசூளாமணி" எனும் நாடகத் தமிழ் நூலைத் தமிழுலகுக்கு மகிழ்வுடன் வழங்கியுள்ளனர்.

தற்போது நாம் காணக் கிடைக்கின்ற ஒரேயொரு தமிழ் நாடக இலக்கண நூல் இதுவாகும். இந்நூ லில் ஒரு நாடகத்தின் கதையமைப்பு, காட்சிய மைப்பு, கதாபாத்திரங்கள், நடிப்பு, ஒப்பனை, ஒளி யமைப்பு, திரையமைப்பு, இசையமைப்பு, அரங்க மைப்பு என்பனவெல்லாம் எவ்வாறு அமைக்கப்ப டல் வேண்டும் என்பதைப் பண்டைய தமிழ் நாட கங்களிலிருந்து ஆராய்ந்து தெளிவாக விளக்கி யுள்ளனர்.

மதுரைத் தமிழ் சங்கத்தினால் இந்நூல் 1926ல் பதிப்பிக்கப்பட்டதாகும். இளந்தலைமுறையின ரின் தேவை கருதி இந்நூல் பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் 1987 ஜுலை 19ல் மறு வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நூற்றாண்டில் தமிழ் நாடகக் கலையைத் தமிழ் நாட்டில் வளர்ப்பதற்குப் பெரிதும் முயன்றவர்க ளுள் பி.சம்பந்த முதலியார் சிறப்பிடம் பெறுகின் றார். அவர் நடிகராயிருந்து நாடகங்களில் பங்கு பற்றியும், புதிய நாடகங்களை இயற்றியும், நாட கத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள் பலவற்றைச் செய் தும் நாடகக் கலைக்குப் புத்துயிர் அளிக்கப் பல வாறு முயன்றனர்.

மேலும் பல நாடகங்கள் தமிழில் வெளிவந்துள் ளன. அவற்றை இயற்றியவர்களுட் பாரதிதாசன் இயற்றிய இரணியன், நல்ல தீர்ப்பு, சேரதாண்ட வம், படித்த பெண்கள் எனும் நாடகங்களும், சுத்தானந்த பாரதியார் இயற்றிய வசந்த சுந்தரி, புதுமையும் பழமையும், காலத்தேர் எனும் நாட கங்களும், கி.ரா. எழுதிய தந்தையின் காதல், முல் லைக்கொடி எனும் நாடகங்களும், நாடோடி இயற்றிய குடும்ப இரகசியம் எனும் நாடகமும், அறிஞர் அண்ணா இயற்றிய காதல் ஜோதி, செல் லப்பிள்ளை எனும் நாடகங்களும், மு.கருணாநிதி இயற்றிய நச்சுக் கோட்டை, தூக்குமேடை முதலிய நாடகங்களும், ரஞ்சன் இயற்றிய மாப்பிள்ளை வேட்டை, புதுமைப்பித்தன் இயற்றிய 'வாக்கும் வக்கும்' எனும் நாடகமும் பாராட்டப்படும் நாட கங்களாகும். யாழ்ப்பாணத்து வழக்கு மொழியில் எழுதப்பட்டவற்றுள் க.கணபதிப்பிள்ளை எழுதிய நானாடகம், இரு நாடகங்கள், சங்கிலி என்பனவும் சோமசுந்தரப் புலவர் இயற்றிய உயிரிழங்குமரன் எனும் நாடகமும், பண்டிதர் சோ.இளமுருகனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய தமயந்தி திருமணம் எனும் நாடகமும், ஆரையூர் இளவல் எழுதிய நீறு பூத்த நெருப்பு எனும் நாடகங்களும் வெ.தவராசா இயற்றிய மங்கையராய் பிறப்பதற்கே எனும் நாாடகமும் பாராட்டுப் பெற்றுள்ளன. மேலும் சில நாடக நூல்கள் வெளிவந்துள்ளன. தமிழத்தினப் போட்டி களுக்காக எழுதப்பட்ட நாடகங்களும் வானொலி நிலையங்களில் நடித்தற் பொருட்டு இக்காலத்தில் எழுதப்பட்ட நாடகங்களும், பிறநாடகங்களும் பலவுள.

## மண்முனைப்பற்றுப் பிரதேச நாடகச் செயற்பாடுகள்

### மேடை நாடகங்கள் (விலாச நாடகம்)

விலாச நாடகங்கள் மரபுவழி நாடகங்களாகவே கூறப்படுகின்றன. இந்நாடகப் பாத்திரங்கள், வாத்திய இசையின் பின்னணியுடன் தாங்களாகவே பாடி நடிக்கும் ஆற்றலுள்ளவர்களாகவும், இனிமையான குரல் வளம் நிறைந்தவர்களாகவும் இருப்பர். இத்தகைய நாடகங்கள் பலவற்றை ஆரையம்பதியின் சகலகலா வல்லவர் எனப் போற்றப்படும் சங்கீத ஆசிரியர் சீனித்தம்பி கந்தையா அவர்கள் மட்டக்களப்பில் வித்துவான் சரவணமுத்தன் நாடகக் கலையை வளர்த்த அதே காலகட்டத்தில் ஆரையம்பதியிலும் அதன் சுற்றுப் புறக் கிராமங்களிலும் விலாச நாடகங்களை இசையமைத்து நெறிப்படுத்தி தயாரித்து மேடையேற்றினார். கதாபாத்திரங்களின் உடையமைப்பும், காட்சிகளுக்குப் பொருத்தமான பல்வேறு வகைத் திரைகளும் தேர், யானை, குதிரை போன்ற பொம்மை வாகனங்களும் கந்தையா ஆசிரியர் அவர்களால் தயாரிக்கப்பட்டன. இவரால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்ட நாடகங்களில் புகழ்பெற்ற நாடகங்கள் வருமாறு. "அல்லி அர்ஜுனா" (1940), "பவளக்கொடி" (1942), துருவன் (1944) சத்தியவான் சாவித்திரி (1949) "இரு சகோதரர்கள்" (1950).

இவர் பிற்காலத்தில் பிறர் தயாரித்த நாடகங்கள் பலவற்றுக்கு வாத்திய இசை வழங்கிச் சிறப்பித்ததுடன் காட்சித் திரைகளும் வழங்கி ஊக்குவித்தனர்.

பவளக்கொடி நாடகத்தில் "அல்லி" பாத்திரமேற்று நடித்து பாரதக் கதையில் விபரிக்கப்படும் அல்லியை ரசிகர்கள் மனக்கண்முன் நிறுத்தியவர் முன்னால் அதிபரும், ஆரையம்பதி ஸ்ரீகந்த சுவாமி ஆலய பரிபாலன சபை முன்னாள் தலைவருமான சு.பரசுராமன் அவர்கள் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பது எமக்குப் பெருமையையும் மனமகிழ்ச்சியையும் அளிக்கின்றது.

ஆசிரியர் சீ.கந்தையா அவர்கள் அன்புமணியின் "திரைகடல் தீபம்" வரலாற்று நாடகம் 30.06.1962ல மட்டக்களப்பு நகர மண்டபத்தில் மேடையேற்றம் செய்யப்பட்ட போது பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

### நவீன மேடை நாடகங்கள்.

இத்துறையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி தலைமைக் கலையகமாகத் திகழ்கின்றது. கலாபூஷணம் அன்புமணி இரா.நாகலிங்கம், கலாபூஷணம் ஆரையூர் இளவல் க.செல்லத்தம்பி, கலாபூஷணம் மு.கணபதிப்பிள்ளை (மூனாக்கானா) கலாபூஷணம் தங்கம்மா சந்திரசேகரம், த.தங்கவடிவேல் (பா.உ) ஐ.சிவசுந்தரம், ஆரையூர் அமரன க.அமரசிங்கம், நவம் சு.ஆறுமுகம், இரா.நல்லரெத்தினம் (நல்லையா), சி.சந்திரசேகரம் (ஆசிரியர்), ப.ஜீவானந்தம் (அதிபர்), சிவ.விவேகானந்த முதலியார், சீ.செல்வநாயகம், க.சபாரெத்தினம், சீ.செல்லத்தம்பி (ஆங்கில ஆசிரியர்), ஐ.சிவானந்தராசா, ஐ.மகேசானந்தம், க.கார்த்திகேசு தங்கராசா, க.நல்லரெத்தினம் அதிபர் ம.கனகரெத்தினம் (முன்னாள் அதிபர்), த.நல்லலிங்கம் (அதிபர்), மூ.அருளம்பலம் (அதிபர்), க.மயில்வாகனம், செ.அரசரெத்தினம், ஏ.தவராசா, சீ.குழந்தைவேல், க.சுந்தரலிங்கம் போன்றோரும் மேலும் சிலரும் ஆரையம்பதி நவீன நாடக வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்புச் செய்தவர்களாவர்.

#### (அ) கலாபூசணம் அன்புமணி இரா. நாகலிங்கம்

இவரது "திரைகடல் தீபம்" (வரலாறு) புகழ்பெற்ற நாடகமாகும். இந்நாடகம் இலங்கைக் கலைக்கழக நாடக எழுத்துப்போட்டியில் (1962) முதற்பரிசு பெற்ற நாடகமாகும். இந்நாடகத்தில் கதாநாயகனாக நடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப் புகழ்பெற்றவர் இலங்கையில் தயாரிக்கப்பட்ட "நிர்மலா" சினிமாப் படத்தில் கதாநாயகனாக நடித்துப் புகழ்பெற்றவரும் முன்னை நாள் மண் வள ஆய்வு அறிஞரும் இந்நாள் மட்டக்களப்பு முதலாவது பாராளுமன்ற உறுப்பினருமான திரு.தம்பிராசா தங்கவடிவேல் அவர்கள்.

30.06.1962ல் திரை கடல்தீபம் நாடகம் மட்டக் களப்பு நகர மண்டபத்தில் மேடையேற்றம் செய் யப்பட்டபோது பிரதம அதிதியாகக் கலந்து சிறப் பித்த மட்டக்களப்பு முன்னாள் பராளுமன்ற உறுப் பினரும், பிரதேச அபிவிருத்தி முன்னாள் அமைச சருமான திரு.செல்லையா இராசதுரை அவர்கள் "திரைகடல் தீபம்" நாடகக் கலைஞர்களை அரங்கில் வைத்து வாழ்த்தியபோது எடுக்கப் பட்ட படத்தை இங்கு காணலாம்.

கராசா அவர்கள் இந்நாடகத்தில் கதாநாயகனாக நடித்துப் பாராட்டுப் பெற்றமை குறிப்பிடத்தக்க தாகும்.

மேலும் "மனோகரா", "சூழ்ச்சிவலை", "குகைக் கோயில்", கலை உள்ளம்" முதலிய நாடகங்களை யும் இவர் எழுதி, இயக்கி, நடித்துத் தயாரித்து மேடையேற்றியுள்ளனர்.

**ஆ. கலாபூசணம் ஆரையூர் இளவல் க.செல்லத்தம்பி**

நாடகக் கலைத்துறை பணிகளுக்காகக் கலாபூஷ ணம் விருதுபெற்ற இவர் எழுதிய முதலாவது நாடகம் "வாழ்ந்தது போதுமா?" (சமூகம்) இந் நாடகம் 1952ல் இவரது 17வது வயதில் எழுதப்



அன்பு மணியின் 'திரைக் கடல் தீபம்' வரலாற்று நாடகத்தில் மட்டக்களப்பு முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் திரு.தங்கவடிவேல் அவர்கள் கதாநாயகனாக நடித்தனர். 30.06.1962 மாலை இந்நாடகம் மட்/நகரசபைக் கலையரங்கில் மேடையேற்றஞ் செய்யப்பட்டபோது பிரதேச அபி விருத்தி முன்னாள் அமைச்சர்திரு.செ.இராசதுரை அவர்கள் கலையரங்கில் வைத்து நாடகக் கலைஞர்களை வாழ்த்தியபோது எடுக்கப்பட்ட படம் இது. இப்படத்தில் முன்னாள் அமைச்சர் திரு.செ.இராசதுரை அவர்களுடன் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.த.தங்கவடிவேல் அவர்களும், அன்புமணி அவர்களும், ஆரையூர் இளவல் அவர்களும் மற்றும் கலைஞர்களும் காணப்படுகின்றனர்.

அன்புமணியின் "ஆத்ம திருப்தி" (சமூகம்) புகழ் பெற்ற நாடகமாகும். வடக்குக் கிழக்கு மகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளரும், மட்டக்க ளப்பு மாநகர முன்னாள் மேயருமான திரு.கதியா

பட்ட நாடகமாகும். 1986ல் இந்நாடகம் கொழும்பு வாழ் அறிஞர் ஒருவரால் திரைப்படமாக தயா ரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனா லும் அடுத்த ஆண்டில் கொழும்பில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக அம்முயற்சி பின்போடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. விரைவில் இந்நாடகம் நூல்வடிவம் பெற விருக்கின்றது.

புராணம், இதிகாசம், இலக்கியம், வரலாறு சமூகம், நகைச்சுவை என எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட நாடகங்கள் இவரால் எழுதப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டு மேடையேற்றப்பட்டுள்ளன. (சில நாடகங்களில் நடித்தும் புகழ்பெற்றுள்ளார்) இவரது நாடகங்களில் இடம்பெற்ற பாடல்கள் யாவும் இவராலேயே இயற்றப்பட்டன. கிழக்கிலங்கையில் பல ஊர்களிலும் மேடையேறிய இவரது நாடகங்கள் 1008 தடவைகளுக்கும் மேல் மேடையேற்றப்பட்டுள்ளன.

ஆரையம்பதி இந்து சமய இலக்கிய அபிவிருத்திச சங்கம், ஆரையம்பதி ஜோதி கலைக்கழகம், (இக் கலைக்கழகத்தினால் அதிபர்.சி.கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் தலைமையில் தயாரிக்கப்பட்ட ஆரையூர் இளவலின் "கலிகொண்ட காவலன்" (இலக்கிய நாடகம்) 26.08.1972ல் அமரர் அருளம்பலம் அரங்கில் மேடையேற்றம் செய்யப்பட்டபோது, பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு.எம்.சண்முகலிங்கம் அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. இந்நாடகத்தில் சைப்புலவர் கா.சோமசுந்தரம் அவர்கள் நளமகாராசன் பாத்திரமேற்று நடித்துப் புகழ்பெற்றனர்) ஆரையம்பதி இந்து இளைஞர் நாடக மன்றம், ஆரையம்பதி கல்வீட்டுத் திண்ணையடி கலைக்கழகம், ஆரையம்பதி நெசவுப் பயிற்சிப் பாடசாலை முத்தமிழ்மன்றம், மஞ்சந்தொடுவாய் இந்து இளைஞர் கலைக்கழகம், கல்லடி - உப்போடை வளர்மதி இலக்கியமன்றம், மட்டுநகர் இளங்கதிர் நாடக மன்றம் (கட்டுரை ஆசிரியர் இம்மன்றத்தின் தாபகர் ஆவர்), கன்னன்குடா இந்து இளைஞர்மன்றம், கன்னன்குடா மகா வித்தியாலய முத்தமிழ்மன்றம், தேத்தாத்தீவு பாரதிதாசன் நாடக மன்றம், ஆகிய கலாவிருத்திக் கழகங்கள் மூலம் இவரின் நாடக இலக்கியப் பணி தொடர்ந்தன.

இவரது நாடகங்கள் பல இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டன. இவற்றுள் "குடும்பம் ஒரு கோயில்" (சமூகம்), மாமியார் வீடு (சமூகம்), பொழுது விடிஞ்சாத் தீபாவளி (சமூகம்) என்பன வற்றைக் குறிப்பிடலாம். இவை மூன்றும் மட்டக்களப்புப் பேச்சு வழக்கு (மண்வாசனை) நாடகங்களாகும்.

1981ல் கல்லடி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்ட இவரது "சேவை செய்தாலே வாழலாம்" (சமூகம்) நாடகம் அதிஉத்தம சனாதிபதி அவர்களின் "தங்கமயில் விருது" பெற்றது.

**'போர்ப்புயல்' (சரித்திர நாடகம்)**



18.05.1968 மாலை மட்/புனித மிக்கேல் கல்லூரிக் கலையரங்கில் மேடையேற்றப்பட்ட ஆரையூர் இளவலின் 'போர்ப்புயல்' வரலாற்று நாடகத்தில் அசோகச் சக்கரவர்த்தி தியாக ஆரையூர் இளவலும், மகாராணியாக ஓவியக் கலைஞர் ஜெயாவும் தோன்றும் ஓர் உணர்ச்சி மிக்க காட்சி இது.

இவரால் எழுதப்பட்டு மேடையேற்றப்பட்ட நாடகங்களுள் சில வருமாறு. கண்கள் செய்த குற்றம் (சமூகம் -1963) போர்ப்புயல் (வரலாறு- 1966) இதுதான் முடிவா? (வரலாறு -1967), வினை தீர்க்கும் விநாயகன் (புராணம் 1968), "சிங்களத்துச் சிங்காரி" (வரலாறு -1969) (மட்டக்கப்பு மாவட்ட அரச அதிபர் தேவநேசன் நேசையா அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையில் இயங்கிய மட்டக்களப்புப் பிரதேச கலாமன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட நாடகப் போட்டியில் மட்டுநகர் இளங்கதிர் நாடகமன்றத்தினால் தயாரிக்கப்பட்ட மேற்படி நாடகம் பிரதேச வாரியாகத் தெரிவு செய்யப்பட்டு இறுதித் தெரிவு மட்டக்களப்பு திறந்த வெளியரங்கில் நடைபெற்ற போது முதற் பரிசும், பாராட்டும் பெற்றது. அமைச்சர் எம்.எச்.முகம்மது அவர்கள் மட் திறந்த வெளியரங்கில் வைத்துப் பரிசு வழங்கிப் பாராட்டினர்.

அன்றைய விழாவிலே முதற் தடவையாக நாட்டுக் கூத்து அண்ணாவிமார் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுப் பொற்கிளியும் வழங்கப்பட்டது. அத்துடன் அனுருத்திர நாடகம் (தென்மோடி), இராம நாடகம் (வடமோடி) ஆகிய கூத்து நூல்கள் இரண்டும் பிரதேச கலாமன்றத்தினால் வெளியிடப்பட்டன. வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வு இதுவாகும். பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் இந்நிகழ்விற்கு அனுசரனையாயிருந்தார்)

நிலவறையிலே (வரலாறு -1969), பிட்டுக்கு மண் (புராணம் -1970), மாமியார் வீடு (சமூகம், நகைச்சுவை -1970), மாமியார் வீடு, பொழுது விடிஞ்சா தீபாவளி ஆகிய இரு நாடகங்களும் மட்டக்களப்பு மண்வாசனை நாடகங்களாகும். இவ்விரு நாடகங்களும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் நாடகக் கலைத்துறைக்குப் பொறுப்பாளராயிருந்த திரு.சண்முகநாதன் (சானா) அவர்களால் மட்/ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் வைத்து ஒத்திகை பார்க்கப்பட்டு மட்/நகர மண்டபத்தில் மேடையேற்றப்படட்டு ஒலிப்பதிவு செய்யப்பட்டது. பின்னர் வானொலியில் இரு தடவைகள் ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

தேடி வந்த தெய்வங்கள் (சமூகம் -1971), நீறு பூத்த நெருப்பு (இதிகாசம்- 1972), மானம் காத்த மாவீரன் (இதிகாசம் -1972), தர்மம் காத்த தலைவன் (வரலாறு -1976), "குடும்பம் ஒரு கோயில்" (சமூகம் -1977) (இதுவும் மட்டக்களப்பு மண்வாசனை நாடகமாகும். ஆசிரியர் திரு.சி.சந்திரசேகரம் அவர்களும் அவரது துணைவியார் திருமதி. தங்கம்மா சந்திரசேகரம் அவர்களும் பிரதம பாத்திரத்தில் தோன்றி நடித்த இந்நாடகம் மட்டு மாவட்ட முன்னாள் அரச அதிபரும், சர்வதேச திட்டமிடட பெற்றோர் சம்மேளனத்தின் இந்து சமுத்திர இயக்குனருமான பிராந்திய முன்னால் இலக்கியமான திருபிரட்மன் வீரக்கோன் அவர்களின் வேண்டுகோள் படி குடும்ப சுகநலத்திட்ட விளம்பரத்துக்காக எழுதித் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டதாகும். பின்னர் இந்நாடகம் இலங்கை வானொலி நிலைய நடிகர்களாலும் நடிக்கப்பட்டு வானொலியில் இரு தடவைகள் வெவ்வேறு தினங்களில் ஒலிபரப்புச் செய்யப்பட்டது). "கடன்படு திரவியங்கள்" (சமூகம் -1978) விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு.ஞானப்பிரகாசம் அவர்களின் வேண்டுகோள் படி எழுதித் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்ட மண்வாசனை நாடகமாகும். திரு.சி.சந்திரசேகரம் ஆசிரியர் தம்பதியினர் பிரதம பாத்திரங்களில் நடித்துப் பாராட்டுப் பெற்றனர். கொடைவள்ளல் குமணன் (இலக்கியம -1980), "ஆனந்தக் கூத்தன்" (சமூகம் -1981), "தெய்வங்கள் வாழும் பூமி" (சமூகம் -1982) இந்நாடகத்தில் "பட்டமரம் தழைக்க வேண்டும்..." என ஓர் பாடல் வருகின்றது. புகழ்பெற்ற இசைவாணர் "ஆரையூர் அரசன்" அமரர் த.தங்கராசா அவர்கள் சொந்தக் குரலில் அற்புதமாகப்பாடி, அருமையாக நடித்துள்ளனர். மட்டுநகர கிராமங்க ளில் வாழும் வயோதிப மகளிர் மாண்பு போற்றும் மண்வாசனை நாடகம் இது. திரு.சி.சந்திரசேகரம் ஆசிரியர் தம்பதியினர் பிரதம பாத்திரங்களில் தத்ரூபமாக நடித்துப் பாராட்டுப் பெற்றனர். இந்து கலாசார அமைச்சின் பாராட்டுப் பெற்ற நாடகம் இது."தெய்வப் பிரசாதம்" (இதிகாசம் -1989).

மேற்குறிப்பிட்ட நாடகங்கள் தேசிய, கிழக்கிலங்கை மாவட்ட, பிரதேச மட்டங்களில் பரிசில்களும், பாராட்டுக்களும் பெற்ற நாடகங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னத்திரை**

ஒரு தமிழ் நாடகம் கிழக்கு இலங்கையிலே முதன் முதலாக வெளிப்புறக் கட்சியமைப்புகளுடன் சின்னத்திரை (வீடியோ) வடிவம் பெற்றது ஆரையம்பதியில்தான் என்று சொல்லப்படுகின்றது. ஆரையம்பதி நாடகக் கலைஞர் திரு.சீனித்தம்பி செல்வநாயகம் அவர்களின் அனுசரணையுடன் ஆரையம்பதி இந்து சமய இலக்கிய அபிவிருத்தி சங்கத்தினால் மாணிக்கவாசக சுவாமி குருபூசை தினமான 27.06.1980ல் ஆரையம்பதியிலும் மண்முனையிலும் வைத்து ஆரையூர் இளவலின் "மண் சுமந்த மகேசன்" (மாணிக்கவாசக சுவாமிகளின் வரலாறு) நாடகம் படமாக்கப்பட்டது. சி.சந்திரசேகரம் (ஆசிரியர்) திருமதி.தங்கம்மா சந்திரசேகரம் (ஆசிரியை), த.பரமக்குட்டி (ஆசிரியர்) இவர்கள் மூவரும் செந்தக்குரலில் பாடிச் சிறப்பாக நடித்துள்ளனர். மற்றும் மு.கணபதிப்பிள்ளை (அதிபர்), கா.சோமசுந்தரம்(அதிபர்), சொ.அரசரெத்தினம் (கி.சே), கா.கார்த்திகேசு (தங்கராசா) அ.அரிச்சந்திர குமார், சா.கனகசுந்தரம், க.தம்பிராசா, க.சுந்தரலிங்கம் என்பவர்களும் செல்விகள், கலாதேவி கோணாமலை, தயாராணி சாமித்தம்பி, புனித மலர் சாமித்தம்பி, ஆகியோரும் இப்படத்தில் நடித்துப் பாராட்டுப் பெற்றனர். ஒலி, ஒளியமைப்பு, கமரா, கலைஞர் சீ.செல்வநாயகம் அரங்க அமைப்பு ந.கோணாமலை (ஆசிரியர்) இசையமைப்பு, க.சுந்தரலிங்கம், ஒப்பனை, செ.அரசரெத்தினம், செ.அம்பலவாணன், திருமதி.ந.கோணாமலை, கதை, வசனம், பாடல்கள், நெறியாள்கை, "ஆரையூர் இளவல்" உதவி அன்புமணி.

மக்களின் அமோக வரவேற்புடன் இப்படம் பல மாதங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சில நாடகக் கலைஞர்களின் நாடகங்கள்.

**ஐ.சிவசுந்தரம்**

தாது கோபுரம் (வரலாறு), சாளுவப்புயல் (வரலாறு), குந்தியின் மடியில் (இதிகாசம்), பார்கொண்ட பகடை (இதிகாசம்) என்பன இவரது பரிசில் பெற்ற நாடகங்களாகும். மேலும் சில நாடகங்கள இவரால் எழுதி, நெறிப்படுத்தி மேடையேற்றப்பட்டுள்ளன.

**ஆரையூர் அமரர் க.அமரசிங்கம்.**

"மட்டுநகர் மன்னன்" (வரலாறு) இவரது புகழ் பெற்ற நாடகமாகும். மேலும் சில நாடகங்கள் இவரால் எழுதி, நெறிப்படுத்தப்பட்டு மேடையேற்றப்பட்டுள்ளன.

**'நவம்' சீ.ஆறுமுகம்**

தூக்கு மேடை (சமூகம்). இவரது புகழ்பெற்ற நாடகமாகும். மேலும் சில நாடகங்கள் இவரால் எழுதி நெறிப்படுத்தப்பட்டு மேடையேற்றப்பட்டுள்ளன.

**கலாபூஷணம் மு.கணபதிப்பிள்ளை (மூனாக்கானா)**

முத்தமிழ் கலைஞரான இவர். ஓர் சிறந்த நகைச்சுவைக் கலைஞராவர். "இருரேகா" (சமூகம்) இவரது புகழ்பெற்ற நாடகமாகும். மேலும் "சம்பந்தி" (சமூகம்) போன்ற சில நகைச்சுவை நாடகங்கள் இவரால் எழுதித் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டுள்ளன.

**இரா.நல்லரெத்தினம் (நல்லையா)**

இவரால் எழுதித் தயாரிக்கப்பட்டு இலங்கேஸ்வரன் இன்னிசைக் குழுவினரால் மேடையேற்றப்பட்ட "எதிர்பார்த்தது", "இவர் இப்படித்தான்" சமூக நகைச்சுவை நாடகங்கள் மக்களின் அமோக பாராட்டுக்களைப் பெற்றுப் புகழ்பெற்றவையாகும். மேலும் சில நகைச்சுவை நாடகங்கள் இவரால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டுள்ளன. இவரது நாடகங்களில் பிரதம பாத்திரங்களில் இவரே நடித்துப் புகழ்பெற்றுள்ளனர்.

**சிவ.விவேகானந்த முதலியார்**

இவரது "தருமர் பொய் சொன்னாரா?" இதிகாச நாடகமும், இன்னும் சில இலக்கிய நாடகங்களும் வானொலியில் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீ.செல்லத்தம்பி (ஆங்கில ஆசிரியர்)**

இவரால் சில நாடகங்கள் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டுள்ளன. "சோக்கிறட்டீஸ்" நாடகத்திலும் சோக்கிறட்டீஸ் பாத்திரத்திலும் "முதல் முழக்கம்" நாடகத்தில் எல்லாளன் பாத்திரத்திலும் நடிப்புக் கலைக்கு உயிரூட்டியவர் இவர்.

**க.நல்லரெத்தினம்**

இவர் ஆரையம்பதி ஸ்ரீ முருகன் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் சில நாடகங்கள் தயாரித்து நடித்து மேடையேற்றிப் பாராட்டுப் பெற்றுள்ளார்.

**மா.கனகரெத்தினம்**

ஆரையம்பதி கலைமகள் கலாமன்றத்தின் தலைவராயிருந்த இவர் "அதே உருவம்" (சமூகம்), "மாமிக்கேற்ற மருமகள்" (சமூகம்-நகைச்சுவை-1974) போன்ற சில நாடகங்களைத் தயாரித்து நடித்துப் புகழ் பெற்றுள்ளனர்.

**ப.ஜீவானந்தம்**

ஆரையம்பதி கூழாவடி இளைஞர் நாடகமன்றத்தின் மூலம் சில நாடகங்கள் எழுதித் தயாரித்து மேடையேற்றிப் பாராட்டுப் பெற்றுள்ளார்.

**க.சபாரெத்தினம்**

இவரது "சிலவேளைகளில் சில அதிகாரிகள்" (சமூகம்) தற்கால அலுவலக நடைமுறைகளைப் படம் பிடித்துக் காட்டும் சிறந்த நாடகமாகும். இன்னும் சில நாடகங்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன.

**சீ.குழந்தைவேல் (சிப்பாய்)**

நாடகங்கள் சிலவற்றில் சிப்பாய் வேடத்தில் தோன்றிய இவரது நடிப்பு மக்கள் மனதைக் கவர்ந்தமையால் ஆரையம்பதி வாழ் கலைஞர்கள் இவரைச் "சிப்பாய்" என்றே செல்லப் பெயரால் அழைப்பர். "காதலா பாசமா?" எனும் சமூக நாடகம் இவரால் எழுதித் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டதாகும்.

**சில புகழ் பெற்ற நடிகர்கள்**

1960, 70களில் ஏராளமான நவீன (சினிமாப்பாணி) நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்ற கலைஞர்கள் சிலர் நம்மத்தியில் வாழ்கின்றனர். ஐ.சிவானந்தராஜா, ஐ.மகேசானந்தம், க.கார்த்திகேசு, ஏ.தவராசா, செ.அரசரெத்தினம் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்களேயாவர்.

இவைதவிர தமிழ்த் தினப்போட்டிகளுக்காகவும், தமிழ் இலக்கிய விழா (சாகித்திய விழா)ப் போட்டிகளுக்காகவும், கூட்டுறவுத்தினப் போட்டிகளுக்காகவும், ஆரையம்பதி, தாளங்குடா, புதுக்குடியிருப்பு, கிரான்குளம், காங்கேயன்ஓடை ஆகிய கிராமங்களிலுள்ள பாடசாலைகளினாலும், கலைக் கழகங்களினாலும் பல நாடகங்கள் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டுள்ளன.

**ஒலி, ஒளியமைப்பு**

ஆரையம்பதியிலும், மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் நவீன ஒலி, ஒளியமைப்பின் மூலம் ஒளிரச் செய்தவர்களில் முதன்மை பெறுபவர்கள் ஆரையம்பதி "சுந்தரம்ஸ்", தாபனத்தாரும், ஆரையம்பதி "கங்கா" தாபனத்தாருமாவார். இருவரும் சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை**


1. மதங்க சூளாமணி - விபுலானந்த சுவாமிகள்
2. தமிழ்மொழி வரலாறு - சூரிய நாராயண சாத்திரியார்
3. தமிழ் இலக்கிய வரலாறு - பேராசிரியர் வி.செல்வநாயகம் M.A
4. ஆரையூர்க் கந்தன் - ஆரையம்பதி ஸ்ரீ கந்தசுவாமி கோயில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேக மலர் 1999
5. தொல்காப்பிய அறிமுகம் - டாக்டர் பொற்கோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அது,
அங்கு வாழ்ந்து
அங்குமிங்கும் மகதிகளாய்
அலைந்து திரிந்து
களைத்து விட்ட
ஒரு ஜோடிக் கால்கள்

இன்று,
பேச்சுவார்த்தைகள்
புரிந்துணர்வின் சுகப்பிரசவம் -அதன்
'மருங்கை' விழாவை
மண்ணே கொண்டாட
கல்லறையின் பாதி

# ஒரு ஜோடிக் கால்கள்

-செ.தாமரைச்செல்வி-

தன்
மனைவியின் கல்லறை முன்னே
மண்டியிட்டுக் கிடக்கும்
ஒரு ஜோடிக் கால்கள்
அன்று,
துப்பாக்கிச் சேவல்களின்
கூவல்களில் விடியும் -அதன்
அப்பாவிக் கிராமம் -அங்கு
பள்ளிக் கூடங்கள்
படைவீரர்களின்
பயிற்சிக் கூடங்கள்
போர் மழையில்
செந்நிறமாகிவிட்ட
நீலக்கடல்கள்
கோலக்குயில்கள் ஒப்பாரி பாட
நீலாம்பரிக்காக ஏங்கும்
ஈர இரவுகள் -அதில்
தூங்கமறுக்கும் விழிகளுக்குத்
தூளிகட்ட நினைக்கும்
கனவுகள் -அந்தக்
கனவுகளைக்கூட நிரந்தரமாய்
காணமுடியாது போரிலிறந்து
போனாள்
அவள்.
அவள்தான் அந்த
ஒரு ஜோடிக் கால்களின் துணைவி



உடைந்து விட்டதை யெண்ணி
தொலைத்து விட்ட
அன்பை யெண்ணி
இவர்கள் மீட்டும்
குச்சியில் செய்வீணை
கச்சபியாக வேண்டும்
என
விம்முகின்றது -அந்த
ஒரு ஜோடிக் கால்கள்.

பிரதேச சாகித்திய விழா 2003 ஐயொட்டி, மண்முனைப்பற்று பிரதேச செயலகம் நடாத்திய கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்முனைப்பற்று - உள்ளூராட்சி ஒரு கண்ணோட்டம்

- க. இராசரெத்தினம் -

1872 முதல் கிழக்கு மாகாணத்தின் தலைநகராக மட்டக்களப்பு விளங்குகின்றது. இந்நகருக்குத் தெற்கே நான்கு கல் தொலைவில் அமைந்துள்ளது மண்முனைப்பற்று என்னும் பிரதேசம். இப்பிரதேசம் மிகவும் பழமைவாய்ந்தது. இப்பிரதேசத்தின் வடக்கு எல்லையாக காத்தான்குடி என்னும் நகரமும், தெற்கே குருக்கள்மடம் என்னும் கிராமமும் அமைந்துள்ளது. கிழக்கு எல்லையாக வங் காளவிரிகுடாக் கடலும், மேற்கு எல்லையாக மீன் பாடும் வாவியும் உண்டு. இப்பிரதேசத்தின் கிரா மங்களாக ஆரையம்பதி, காங்கேயனோடை, தாளங் குடா, மண்முனை, பாலமுனை, புதுக்குடியிருப்பு கிரான்குளம் ஆகியன உள்ளன.

இப்பிரதேசம் கி.பி13ல் உலகநாச்சி என்னும் கலிங்க தேச அரசகுமாரியின் ராசதானியாக விளங்கிற்று இவள் இப்பிரதேசத்தில் பல குடியேற்றங்களைச் செய்துள்ளாள். இம்மக்களை கமச்செய்கை, கால் நடை வளர்த்தல், சிறு கைத்தொழில் ஆகியவைகளில் ஊக்கப்படுத்தினாள். மண்முனையில்தான் கலிங்கத்தினின்றும் கொண்டுவந்த சிறிய லிங்கத்தைப் பிரதிவிடை செய்து ஒரு கோயிலையும் உருவாக்கினாள். மக்கள் மீது மிகவும் பற்றுள்ளவளாகவும் வாழ்ந்து வந்துள்ளாள்.

இவ்வரசிக்கு வாரிசு இன்மையினால் இவளுக்குப் பின் இந்த மண்முனைப்பற்று மட்டக்களப்பு நகரின் அதிகாரத்திற்குள் வந்தது.

இப்பற்று சிலகாலம், மன்னர்களின் பரிபாலனத்தின் கீழும், வன்னியர் ஆட்சிக்கும், கண்டி அரசன் ஆட்சிக்கும் உட்பட்டிருந்தது. கண்டியரசர்கள் சில அதிகாரிகளை நியமித்து இப்பிரதேசத்தையும் ஏனைய தங்களின் பிரதேசங்களையும் ஆட்சிபுரிந்துவந்தனர். இவ் அதிகாரிகள் ஒற்றர்கள் வருகையையும், அன்னியர்களின் வருகைகளையும் கண்காணித்து வந்ததுடன் அரச வரிகளையும் அறவிட்டு வந்தனர். கிராம வாசிகளுக்கிடையில் ஏற்படும் பிணக்குகளையும் தீர்த்து வைத்தனர்.

கண்டியரசர்களுக்குப் பின் போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் இலங்கையைக் கைப்பற்றி ஆண்டு வந்த பொழுது மண்முனைப்பற்றும் அவர்களின் பரிபாலனத்திற்குட்பட்டிருந்தது. போர்த்துக்கேயரின் ஆட்சியின்போது கிராமமக்கள் பெரும் துன்பத்துக்குள்ளானார்கள். ஒல்லாந்தரின் ஆட்சி சற்று நெகிழ்வாக விருந்தபொழுதும் காணிவரி, மீன்வரி, பூணாரவரி, தலைவரி முதலான வரிகளை விதிப்பதிலும் அறவிடுவதிலும் தவறவில்லை. அவர்களது பிற்கால ஆட்சியில் சமய வழிபாடுகளிலும், வரி அறவிடுதலிலும் சில விட்டுக்கொடுப் புக்கள் நிகழ்ந்தன.

ஒல்லாந்தர் தங்களது பரிபாலனத்தை இலகுபடுத்துமுகமாக மட்டக்களப்பை (பழையது) வடக்கு, தெற்கு என இரு பிரிவுகளாகப் பிரித்தனர். ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு தலைமை நிலைமைப் போடியை நியமித்தனர். மண்முனைப்பற்று மட்டக்களப்பு தென்பகுதியில் அடங்கிற்று. இப்பகுதிக்கு 1766ல் அருமைக்குட்டிப்போடி என்பவரை ஒல்லாந்தர் நியமனம் செய்தனர். இவர் மணல் வீதிகளைத் திறந்தார். விவசாயம் தோட்டச் செய்கை, கால்நடை வளர்ப்பு ஆகியவைகளுக்கு ஊக்கமளித்தார். தலைமை நிலைமைப் போடி எனனும் பதவி "திசாவை" என்னும் பதவிக்குச் சம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னானது. இவரே ஆரையம்பதியில் பரமநயினார் ஆலயத்தையும், செட்டிபாளயத்தில் கண்ணகை அம்மன் கோயிலையும் தோற்றுவித்தார்கள்.

15/12/1796 (கி.பி.18) இலங்கையின் கரையோரப் பகுதிகள் பிரித்தானியரினால் கைப்பற்றப்பட்டது. இக்காலத்தில் மண்முனைப்பற்று பிரித்தானியரின் அதிகாரத்தின் கீழ் வந்தது. போத்துக்கீசரினாலும், ஒல்லாந்தரினாலும் விதிக்கப் பெற்றிருந்த வரிகளை நீக்கினார்கள். பாடசாலைகள் திறக்க அனுமதித்தார்கள். அவரவர் சமய நெறிகளுக்கிருந்த தடைகளை நீக்கினார்கள். நீர்ப்பாசனக் குளங்களைத் திருத்தினார்கள். விவசாயத்தை ஊக்கப்படுத்தினார்கள். தென்னந் தோட்டங்களை உண்டாக்கினார்கள்.

நிர்வாகத்தைச் சீர்படுத்தும்முகமாக மாகாணங்களுக்கு மாகாண அதிபர்களை (Govt. Agent) நியமனம் செய்தார்கள். முண்முனைப்பற்று கிழக்கு மாகாண அரசாங்க அதிபரின் பரிபாலனத்திற்குட்பட்டது.

1856ல் அப்பொதிருந்த தேசாதிபதி (Governor) ஹென்றி உவாட் என்பவர் கிராமச் சங்க சட்டமொன்றை நிறைவேற்றினார். இச்சட்டம் கிராமச் சங்கங்களை உண்டாக்கவும் அவைகளுக்கு அரசாங்க அதிபர் தலைமை தாங்கவும் வழி வகுத்தது. இதனடிப்படையில் அப்போதிருந்த மாகாண அரசாங்க அதிபர் கிராமச் சங்கங்களை ஏற்படுத்தி மண்முனைப் பற்றைப் பரிபாலித்து வந்தார்.

1871ல் எக்ஸ்.கியூ .சி. ஆர். றொபின்சன் தேசாதிபதி கிராமச் சங்கங்களின் அதிகாரங்களை அதிகரித்தார். மீன்பிடித் தொழில் அபிவிருத்தி, கிராமப் பாடசாலைகள், கிராம வீதிகளை அமைத்தல், கிராமங்களைச் சுத்தமாக வைத்திருத்தல், கமச் செய்கை, தோட்டத் தொழில் ஆகியவற்றை ஊக்கப்படுத்துதல் இச்சங்கங்களின் கடமைகளாக இருந்தன. குற்றமிளைப்போருக்கு இரண்டு பவுனுக்கு ($ 2-0-0) மேற்படாத அபராதம் விதிக்கவும், அதிகாரம் வழக்கப்பட்டிருந்தது.

கிராமச் சங்கம் கமக்காரர் ஐந்து பேரைக் கொண்டது. அவைகளுக்கு உறுப்பினர்களை திருவுளச் சீட்டு மூலம் அல்லது கை உயர்த்தல் மூலம் தெரிவு செய்ய வேண்டியிருந்தது. உறுப்பினர்கள் களவான்களாகவும் கல்வியறிவுள்ளோராகவும் இருந்தனர்.

கிராம வாசிகள் பழைய வழக்கங்களுக்கு மாறாக நடந்து கொண்டால் அல்லது சிறிய குற்றங்கள் புரிந்தால் அவர்களுக்கு இரண்டு பவுனுக்கு மேலாகாத அபராதம் வதிக்க கிராமச் சங்கங்களுக்கு அதிகாரம் இருந்தது. விசாரணைகள் நியாயவாதிகள் இல்லாமல் சுருக்கமாக நடத்தப்பட்டன. மேல் முறையீடு (அப்பீல்) செய்யவேண்டுமானால் மாகாண அரசாங்க அதிபர்களுக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். அன்னாரின் அனுமதி பெற்றபின்பே மேன்முறையீடு செய்ய முடியும். அக்காலங்களில் கிராம அதிகாரிகளும் மாகாண அதிபர்களினால் நியமனம் செய்யப் பெற்றிருந்தனர்.

1874ல் கிராமச் சங்கங்களின் தலைவராக தலைமைக்காரர்கள் நியமிக்கப்பெற்றனர். கிராமங்களில் இடம்பெறும் செயல்களுக்கெல்லாம் இத் தலைமைக்காரரே பொறுப்பாக இருந்தார்.

முண்முனைப்பற்றுக் கிராமங்கள் 1911 வரையும் தலைமைக்காரரின் கீழ் இருந்தன. இக்காலத்தில் பதவிவகித்தவர்களின் பூரண விபரம் அறிய முடியவில்லை.

1911ல் கூட்டுறவு ஐக்கிய நாணயசங்கம் ஒன்றை அரசாங்கம் கிராமங்கள் தோறும் உண்டாக்கியது. அக் காலத்தில் மண்முனைப் பற்று, மண்முனை வடக்குக் கிழக்கு தெற்குப் (ம.வ.கி.தெ.ப) பகுதியென்ற பெயரில் விளங்கிற்று.

ஆரையம்பதி 1ம், 2ம், 3ம், குறிச்சிகளிலிருந்தும், பாலமுனை, கிரான்குளம், தாளங்குடா, புதுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியிருப்பு, காங்கேயனோடைக் கிராமங்களிலிருந்தும் உறுப்பினர்களைத் தெரிவு செய்து ஒரு கூட்டுறவு ஐக்கிய நாணய சபையை உண்டாக்கினார்கள். ஆரையம்பதி முதலாம் குறிச்சியின் பிரதிநிதி தம்பிமுத்து, சின்னத்தம்பி (தானாச் சீனாபோடியார்) தலைவராக தெரிவுசெய்யப் பெற்றார்.

இச்சங்கம் விவசாயிகளுக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் கடன் வழங்குவது, அவற்றை வட்டியுடன் அறவிடுவதும் தமது தலையாய பணியாகக் கொண்டிருந்தது. கிராம அபிவிருத்திகளிலும் ஈடுபாடாக இருந்தது.

1926ல் இவ் ஐக்கிய நாணய சங்கம் கலைக்கப்பெற்று அந்த இடத்தில் கிராமச் சங்கம் ஏற்படுத்தப்பெற்றது: ஐக்கிய நாணய சங்க உறுப்பினர்கள் அனைரும் கிராமச் சங்க உறுப்பினர்களானார்கள். கிராமச் சங்கமும் உதயமாயிற்று. தம்பிமுத்து சின்னத்தம்பி அவர்களே அக்கிராசனராகத் தெரிவுசெய்யப்பெற்றார். இவர் இப்பதவியில் 1946 வரையும் இருந்து ஓய்வுபெற்றார்.

கிராமச் சங்கம், சுகாதாரம் சந்தை நடத்துதல், பாதைகள் திறத்தல் அவைகளைப் பராமரித்தல் மயானங்களைக் கண்காணித்தல் ஆகிய பணிகளைச் செய்து வந்தது. 18 வயதிற்கு மேற்பட்டவர்களிடமிருந்து தலை வரியும் அறவிடப்பட்டது.

இச் சங்கத்திற்குத் தனியான கட்டிடவசதி இன்மையால் அக்கிராசனரின் இல்லமே சங்கத்தின் காரியாலயமாகச் செயல்பட்டது.

அக்காலத்தில் சவம் அடக்கம் செய்வதற்கு தனியான குறிப்பிட்ட இடம் ஒன்றிருக்கவில்லை. கண்ட கண்ட இடங்களில் சவம் அடக்கம் செய்யப்பட்டு வரலாயின. இவ் அவலச்செயலை உணர்ந்த கிராமச் சங்க அக்கிராசனர் த.சின்னத்தம்பியவர்கள் பத்து ஏக்கர் பூமியை ஆரையம்பதி மக்களுக்கு சவ அடக்கத்திற்காக ஒதுக்கிக் கொடுத்தார். தற்போது இயங்கும் பிரதேச சபைக் கட்டிடமும், விளையாட்டு மைதானமும் சந்தையும் இந்தப் பூமியில் நிலைகொண்டுள்ளன. கிரான்குளம், புதுக்குடியிருப்பு, தாளங்குடாக் கிராமங்களுக்கும் மயான நிலம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டன.

1946ல் திரு.த.சின்னத்தம்பியவர்கள் அக்கிராசனர் பதவியினின்று ஓய்வெடுத்தபின் அவரது மகன் த.சி.பூபாலரெத்தினம் சிலகாலம் அக்கிராசனராகப் பதவி வகுத்தார். இக்காலத்தில் உறுப்பினர்கள் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யும் நிலை அமுலில் இருந்தது.

திரு.த.சி.பூபாலரெத்தினத்தின் பின்பு க.சாமித்தம்பி (இருமுறை) திரு.க.அமரசிங்கம், திரு.மா.சுப்பிரமணியம் ஆகியோர் அக்கிராசனர்களாகயிருந்தனர்.

திரு.த.சி.பூபாலரெத்தின் காலத்தில் புதிய வீதிகள் திறக்கப்பெற்றன. மதகுகள் திருத்தப்பெற்றன. திரு.க.சாமித்தம்பியவர்களின் காலத்தில் கிராமச் சங்கத்திற்கென ஒரு கட்டிடம் கட்டப் பெற்றது. கிராமங்களுக்கு மின்சாரம் கிடைத்தது. வீடுகள் தோறும் மலசல கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. தலைவரி நீக்கப்பெற்றிருந்தது. இக்காலத்தில் மலசல கூடவரியும், குப்பை வரியும் இருந்தன.

திரு.க.அமரசிங்கமவர்களின் காலத்தில் செல்வா நகர் என்னும் புதிய குடியேற்றம் ஏற்படுத்தப் பெறறது. கிராமத்துக்கு மின்சாரம் பெற கடினமுயற்சியெடுத்தார். இவரது முயற்சியைப் பலனாக திரு.க.சாமித்தம்பியவர்களின் காலத்தில் மின்சாரம் கிடைத்தது.

திரு.மா.சுப்பிரமணியம் அவர்களின் காலத்தில் வீதிகள் செப்பனிடப் பெற்றன. சுகாதாரம் பேணபட்டது. வீதிகளில் குப்பைகள் ஒழுங்காக அகற்றப்பெற்று வந்தன.

தாளங்குடா, புதுக்குடியிருப்பு, கிரான்குளமக்கள் தங்களுக்குத் தனிமையான கிராமசபை வேண்டுமென தொடர்ந்து அழுத்தம் கொடுத்துவந்ததன் காரணமாக 1967ல் இக்கிராம சபை இரண்டாகப் பிரிவுபெற்றது. பாலமுனை, காங்கேயனோடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரையம்பதியை உள்ளடக்கிய ஒரு கிராமச் சபையும் கிரான்குளம். புதுக்குடியிருப்பு தாளங் குடாவை உள்ளடக்கியதாக ஒரு கிராமசபையும் உதயமாயிற்று.

1981 ஜூன் மாதம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிவந்த 22 கிராம சபைகளும் கலைக்கப்பெற்று அச்சபைகளை உள்ளடக்கிய மாவட்ட சபை ஒன்று ஸ்தாபிக்கப்பெற்றது. இச்சபை மட்/கச்சேரியில் இயங்கிற்று. இச்சபையில் தெரிவுசெய்யப் பெற்ற மூன்று உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். திரு.சம்மந்த மூர்த்தியவர்கள் தலைவராக பதவி வகுத்தார். முண்முனைப்பற்று மக்களின் வசதி கருதி இச்சபையின் உப அலுவலகம் ஒன்றும் ஆரையம்பதியில் கிராமச்சபைக் கட்டிடத்தில் திறக்கப்பட்டது.

01/01/1994 மாவட்ட சபை கலைக்கப் பெற்று பிரதேச சபைகள் உருவாக்கப்பெற்றன. மண்முனைப் பற்றுக்குத் தனிமையான பிரதேசசபை உருவாகிற்று ஆரம்பத்தில்- இச்சபை விசேட ஆணையாளர்களினால் நிர்வகிக்கப்பெற்று வந்தது. விசேட ஆணையாளர்களாக திரு.சாம்பசிவம் ஐயர் திரு.செல்வநாயகம். திரு.டிலிமா. திரு.தங்கவடிவேல். திரு.கருணாகரன் ஆகியோர் கடமையாற்றினார்.

பின்னர் இச்சபைக்கு தேர்தல் மூலம் ஒன்பது உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பெற்றனர். இச்சபையின் தவிசாளராக திரு.க.நவரட்ணம் (றொபட்) என்பவர் தெரிவு செய்யப்பெற்றார்.


இச்சபை 1997ல் தற்போதைய சந்தையை 05 லட்சம் 40,000/- ரூபாச் செலவில் கட்டி நடத்தத் தொடங்கிற்று நூலகம் விஸ்தாரிக்கப்பெற்றும். புனரமைக்கவும் பெற்றது. இரண்டு ஆரம்ப பாடசாலைகளைத் திறந்தது. விளையாட்டு மைதானம் புனரமைக்கப் பெற்றது. இச்சபை எல்லைக்குள் ஏற்பட்ட சட்டவிரோதப் பிரவேசங்கள் உடன் நிறுத்தப் பெற்றன. இச்சபையின் எல்லைக் கோடுகளைப் 'பொன்னம் பெரும' ஆணைக்குழுவிடம் சாட்சிகூறி உறுதிசெய்யப் பெற்றது.

1999ல் இச்சபையின் நூலகம் சிறந்த நூலகமாகத் தெரிவு செய்யப் பெற்றது. (25/02/99 வீரகேசரி)

இச்சபையின் காலம் 2000வது ஆண்டில் காலாவதியாகிற்று. தற்போது இச்சபை விசேட ஆணையாளர் பிரதேச. செயலாளர் க.சிவநாதனின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

நாட்டில் நிலவிய போர்க்காரணங்களினாலும். அரசியல் தலையீடுகளினாலும் இச்சபைக்கு உரிய காலத்தில் தேர்தல் நடத்த இயலவில்லை. இத்தேர்தல் 2004ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு ஒத்திவைக்கப் பெற்றுள்ளது.

## அழிக!




நான் காலத்தின் முன்
எழுகிறேன்.
ஒரு மதத்தை,
ஒரு மொழியை,
ஒரு சாதியை,

உ[illegible]
நான் தீக்கனாய் எழுகிறேன்.

அழிந்து போக மதங்கள்.
வீழ்ந்து போக மொழிகள்.
சரிந்து போக சாதிகள்.

- மாசெ-
21.10.2003


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புப் பிரதேச தமிழ், முஸ்லிம் மக்களின் வாழ்வியற் சடங்குகள்

## (ஆரையம்பதி, கத்தான்குடி ஓர் ஆய்வு)

செல்வி. வி. விஸ்வராணி

சடங்கு என்பது ஒரு இனக்குழுமம் அல்லது மக்கள் குழுமம் தங்கள் வாழ்க்கையில் சமுகத்தின் இருப்பையும், ஒற்றுமையையும் ஒழுங்கமைத்துக் கொள்ளவும் தங்கள் மனதைச் சாந்தப்படுத்திக் கொள்ளவும் ஏற்படுத்திக்கொண்ட கரணங்களே சடங்குகளாகும். இதைக் கருத்திற்கொண்டே (Ruth Benedict) ருத் பெனடிக் என்ற ஆய்வாளர "கரணமென்பது நிர்ணயிக்கப்பட்ட விரிவான நடத்தைகளின் வடிவமாகும். இது தனி மனிதனின் சுயமான ஆக்கமாகவோ பண்பாட்டினுடைய தனிச் சிறப்புக் கூறாகவோ அமையும். பண்பாடடின் ஏனைய அம்சங்களை விட கரணங்களிலேயே வெவ்வேறு நாகரிகங்களின் நம்பிக்கைளும், இலட்சியங்களும் மிகத் தெளிவாக வெளிப் படுகின்றன" என்று கூறுகின்றார். சடங்குகள் எவ்வகையானதாக அமையினும் அவை தாம் தோன்றும் சமூகப் பொருளாதாரச் சூழலுடன் இயைபு கொண்டிருக்கும் என்பதைக் காணக்கூடியதாய் இருக்கும்.



சடங்கின் போது சமயம் முககியம் பெறுகின்றது. ஒவ்வொரு சமயத்திற்கும் தனித்துவமான சடங்குகள் உண்டு. "அனால்டுவான் கென்னப்" என்னும் மானிடவியல் அறிஞர் மக்களின் வாழ்வியல் சடங்கு முறைகளை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து அவற்றைத் தகுதிப் பெயர்ச்சிச் சடங்குகள் என வரையறை செய்தார். ஒவ்வொரு தகுதிப் பெயர்ச்சிச் சடங்கும் மக்களை ஒரு நிலையில இருந்து பிரித்து மறு நிலைக்கு அறிமுகப்படுத்துகின்றன என முடிவு செய்தார்"

வாழ்வியற் சடங்கு என்பது மனிதன் பிறந்தது முதல் இறந்த பின்னுமாகச் செய்யப்படும் சடங்குகள் ஆகும். இதில் வளச் சடங்குகள் மனித வாழ்வில் பிரதானமானவை. அந்த வகையில் பூப்புச் சடங்கு, திருமணச் சடங்கு, பிறப்புச்சடங்கு, சுன்னத்துச் சடங்கு போன்றவை வளச்சடங்குகள் ஆகும். அத்துடன் மரணச்சடங்கும் வாழ்வியற் சடங்கில் முக்கியமானதொன்றாக இடம் பெறுகின்றது. இவ்வாறான சடங்குகள் சமூகச் சூழ்நிலைக்கேற்பவும், பண்பாடுகளுக்கேற் பவும் பின்பற்றப்படுகின்றது.

மட்டக்களப்புப் பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்தில் தமிழர்களின் வரலாற்றுக்குப் பின்தான் முஸ்லிம்களின் வரலாறு தொடங்குகின்றது. திமிலர்களுக்கும், முற்குகர்களுக்கும் இடையே ஏற்பட்ட சண்டையில் முஸ்லிம்கள் முற்குகர்களுக்குத் துணை நின்றதால் இதற்குப் பதிலாக தமது குடியிலிருந்து ஏழு பெண்களைக் கொடுத்தனர். இதனால் தமிழ் முஸ்லிம் கலப்பு ஏற்பட்டது. இதனால் முஸ்லிம்கள் தமிழ் மக்களின் கலாசாரங்களைப் பின்பற்றினர். இந்த இரு சமூகங்களுக்கிடையேயும் சமய விடயம் தவிர்ந்த ஏனைய விடயங்களில் குறிப்பிடத்தக்க ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

## குழந்தை பிறப்புச் சடங்கு

வாழ்க்கையிலே குழந்தை ஒரு முக்கிய சொத்தாகக் காணப்படுகிறது. ஒரு பெண்ணுக்குத் திருமணமானதும் அடுத்ததாக பெற்றோர்கள், உறவினர்கள் எதிர்பார்ப்பது குழந்தைப் பேறைத்தான்.

" மலடி மலடி என்று - மாணிலத்தோர் பேசாமல் மலடிக்கொரு
குழந்தை மாயவனார் தந்ததல்லோ"

என்று கிராமத்துத் தாய் பாடுகின்ற மகிழ்ச்சிக்குரல் இதனாலேயே ஏற்படுகின்றது.

ஒரு பெண் கருத்தரித்து குழந்தை பிறப்பதற்கான நாள் நெருங்கிவந்ததும் அறிகுறி எதுவும் தென்படாவிட்டால் தமிழ்ப் பரிகாரி அல்லது கோயில் பூசாரி போன்றோரை அழைத்து வந்து வைத்தியம் செய்து ஆடு, கோழி என்பவற்றை நேர்ந்து விடுவர். இம்மரபுகளை அருகிவரும் ஆசாரம் என செய்நம்புநாச்சியார் மான்மியம் கூறுகின்றது. தமிழர்கள் குழந்தை பிறந்ததும் உலக்கை, விளக்குமாறு என்பவற்றை வீட்டுக் கூரைக்கு மேலால் எறிவதுண்டு. இச்சடங்குகள் முஸ்லிம்கள் மத்தியில் இல்லை. குழந்தை பிறந்து முப்பது அல்லது நாற்பதாம் நாள் தமிழர்கள் மருங்கைச் சடங்கு செய்து உறவினர்களுக்கு விருந்து கொடுப்பார்கள். முஸ்லிம்கள் குழந்தை பிறந்து நாற்பதாம் நாள் மௌலூது ஓதி விருந்து வைப்பார்கள். இதில் இருந்து இருசமூகங்களும் மருங்கைச் சடங்கு செய்வது புலப்படுகிறது.

தமிழர்களிடமும், முஸ்லிம்களிடமும் சாணைக் கூறைபோடும் வழக்கம் இருக்கின்றது. அண்ணன், தங்கை போன்ற உறவுமுறைக்குள் குழந்தை பிறந்தால் இக்குழந்தைகளுக்கிடையே திருமண முன் ஏற்பாடாக சாணைக்கூறை போடப்படும். இந்த முறை இன்று அநேகமாக மருவி விட்டதென்றே கூறவேண்டும். இந்த திருமண முன் ஏற்பாட்டினால் பிள்ளைகளின் சுதந்திரம் கட்டுப்படுத்தப் படுகின்றதுடன், பிற்காலங்களில் பல பிரச்சினைகளும் இடம் பெறுகின்றன. இன்று பெரும்பாலும் இம்முறை மருவிவிட்டதென்றே கூறவேண்டும். தமிழர்கள் குழந்தை பிறந்து ஒரு மாதத்திற்குப் பின் நாவிதனைக்கொண்டு முடி வழிப்பார்கள். அநேகமாக முடிவழிப்பது கோயில்களில்தான். ஒரு சிலர் வீட்டில் வழிப்பதுமுண்டு. முஸ்லிம்கள் இச் சடங்கினை வீட்டிலேயே செய்வதுண்டு.

## ஆண்களுக்கு வாலிபப் பருவத்தில் செய்யப்படும் சடங்கும், விருத்தசேதனச் சடங்கும்

தமிழர்களிடையே பெண்களுக்கு நடைபெறும் பருவச் சடங்குபோல் ஆண்களுக்கும் நடைபெறுவதுண்டு. சிறுவனாக இருக்கும் ஆண் வாலிவப் பருவம் அடைந்ததும் உடலில் சில மாற்றங்கள் ஏற்படுவ்து இயற்கை. இக்காலத்தில் இவர்கள் தாடி, மீசை சவரம் செய்யாமல் கன்னத்தில் கொண்டைபோட்டிருப்பார்கள். பெற்றோர்கள், உறவினர்கள் கூடிப்பேசி கடுக்கண் அணிவதற்கு நாள் பார்த்து சுபவேளையை தீர்மானித்து இச் சடங்கை நடத்துவர். அன்றைய தினம் நாவிதனால் முகச்சவரம் செய்யப்பட்டு கடுக்கண் அணிந்து தலைமுடியைப்பின்பக்கமாக எடுத்துக் கொண்டை போடுவார்கள். இன்று இவ்வாறான சடங்குகள் மருவிவிட்டபோதும், வயது வந்த ஆண்கள் அவர்களின் விருப்பப்படி ஒருகாதில் தோடு போடுவதும் பின்பக்கமாக முடிவளர்த்து கொண்டைபோடுவதும் நாகரிகமாகக் கருதிச் செய்கின்றனர்.

முஸ்லிம்களின் வாழ்க்கையில் சுன்னத்து எனப்படும் விருத்தசேதனம் முக்கியமான ஒன்றாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றது. இது ஆண், பெண் ஆகிய இருபாலாருக்கும் செய்யப்படுகின்றது. பெண்களுக்குச் செய்யப்படும் இச்சடங்கு பெரிய வைபவமாகக் கொண்டாடப்படுவதில்லை. பெண் குழந்தை பிறந்து நாற்பதாவது நாள் விருத்தசேதனம் செய்வார்கள். ஆண்களின் விருத்தசேதனச்சடங்கு திருமணச் சடங்கு போன்று அழைப்பிதழ்கள் கொடுத்து பெருவைபவமாகக் காத்தான்குடியில் செய்வதுண்டு. இது தென்னிந்திய முஸ்லிம்களிடம் இருந்து ஊடுருவிய ஒரு கலாசாரமாகும். இந்திய ஆபிரிக்கப் பழங்குடி மக்களிடம் இச் சடங்கு காணப்படுகின்றது. இதனை ஏற்புச் சடங்கு என்று மானிடவியலாளர்கள் கூறுகின்றார்கள்.

விருத்தசேதனம் நடைபெறுவதற்கு முன் அச் சிறுவன் அலங்கரிக்கப்பட்டு அழைத்து செல்லப் படுவான். ஊர்வலத்துக்கு முன் சீனடி, சிலம்படி, களிக்கம்பு, றபாண், பறையடிப்பவர்கள் என ஒரு கலைஞர்கள் குழு முன்னால் செல்லும். இவை முன்நாட்களில் இடம்பெற்ற சடங்கும் சம்பிரதாயமுமாகும். ஆனால் இன்று சில நடைமுறைகள் தவிர்க்கப்பட்டு விட்டன. ஆனால் இப்பொழுது சில வீடுகளில் பெரிய சடங்காக நடை பெறுவது மில்லை. இது வீட்டில் செய்யப்படுவதுமில்லை. குழந்தையின் நன்மை கருதியும், பாதுகாப்பு கருதியும் வைத்தியசாலையில் செய்வதுண்டு.

**பூப்புச் சடங்கு**

தமிழர்கள் வாழ்வில் பூப்பு நீராட்டு ஒரு முக்கிய நடைமுறையாக பண்டைக்காலம் தொட்டு வழக்கமாக இருந்து வருகின்றது. பெண்குழந்தை பருவமடைதலை பலரும் அறியும்படி விழா நிலையில் தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர். இச் சடங்கு இன்று இடத்திற்கிடம் சற்று வேறுபட்டு இருந்தாலும் அடிப்படையில் ஒற்றுமையான பண்புடையதாகவேயுள்ளது. பூப்புச்சடங்கு நடைமுறைகள் எல்லோருக்கும் தேவையான விளக்கங்களைக் கொடுக்கும் வகையிலே கையாளப்பட்டு வந்துள்ளது. தமிழரது பூப்பு நடைமுறையிலே அடிப்படையாக அமைந்த விளக்கம் ஒன்று உண்டு. பெண் வளமான நிலத்தைப் போன்றவள். அவளது உடல்வளத்துக்கேற்ப நிறையக் குழந்தைகளைப் பெறும் தன்மைகளை உடையவள். இன்று விஞ்ஞான வளர்ச்சியினால் மனிதபலத்தைவிட கருவிக்கையாட்சி நாளாந்த வாழ்வில் நன்கு தொழிற்பட்டு வருவதனால் தமிழர்கள் வாழ்விலும் பூப்பு நடைமுறைகள் அடிப்படை விளக்க நிலையில் இருந்து வழுவி அழகியல் நடைமுறைகளாக மாறிவருகின்றன.

பருவமடைந்த பெண்ணுக்கு சுபநேர மாலைப் பொழுதில் நீராட்டல் இடம்பெறும். நீராட்டுவதற்கு முன்னர் கிணற்றடியில் குப்பை கூட்டி, விளக்குமாற்றுடன் இருக்க அதன்மேல் ஒரு பலகைபோட்டு வெள்ளைத்துணி விரித்து இரண்டு பக்கமும் நிறைகுடம், குத்துவிளக்கு என்பன வைக்கப்பட்டு பூப்படைந்த பெண்ணை முக்காடிட்டு ஒரு சுமங்கலிப் பெண் அழைத்து வந்து இந்த விரிப்பின் மேல் இருக்கவைப்பர். இதன்பின் உறவினர்கள் அப்பெண்ணின் தலைமீது அறுகம்புல், பால் என்பவற்றை வைத்து ஆற்று நீர், கடல்நீர் என்பவற்றைத் தலையில் ஊற்றியபின் நீராட்டல் இடம்பெறும். இந்த நேரத்தில் பெண்கள் முக்கியமாக குரவை இடுவார்கள். இவ்வேளையில், மச்சான், மச்சாள் உறவுமுறையான பெண்களும், ஆண்களும் மஞ்சள் நீரை ஊற்றி விளையாடுவார்கள்.

பருவமடைந்த பெண்ணுக்கெனத் தனியான அறை ஒன்றினுள் முகம்பார்க்கும் கண்ணாடியின் முன் வெண்கலக் குடத்தில் விரிந்த தென்னம்பாளையும் அருகில் குத்துவிளக்கும் சிறிய பானையில் நிறையச் சோறும் சமைத்து இருக்கம். பூப்படைந்த பெண் நீராடி முடிந்ததும் நிறைவான பொருட்களை தரிசனம் செய்தபின் புத்தாடை அணிந்து பெற்றோர், உறவினரிடம் ஆசீர்வாதம் பெறுவாள். இதன்பிறகு குறிப்பிட்ட சில நாட்களின் பின் ஒரு நல்ல நாளில் சாமத்தியச் சடங்கினைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

பூப்பு நீராட்டு விழாவிலே பெண்ணை மணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் போல அலங்காரம் செய்வது. நடை முறையாக உள்ளது. பெற்றோரிடம் ஆசீர்வாதம் பெற்றபின் மணவறைக்கு அழைத்துவரப்பட்ட பெண்ணுக்கு ஆராத்தி எடுக்கப்படும். அவற்றின் வகை, எண்ணிக்கை, ஒழுங்கு என்பவற்றில் இடத்திற்கிடம் வேறுபாடுகள் காணப்பட்டபோதிலும் அடிப படையில் ஒன்றாகக் காணப்படுகின்றன. இதன்பின் கண்ணூறு கழித்தல் இடம்பெறும். பிட்டு, உழுத்தங்களி என்பன பெரிய ஓலைப் பெட்டிகளில் வைத்து பூப்படைந்த பெண்ணின் தலையைச் சுற்றிய பின் வண்ணானிடம் கொடுக்கப்படும். இன்றைய சம்பிரதாயங்களில்' சில சடங்குகள் மாறிவிட்டதென்றே கூறவேண்டும். இதற்குக் காரணம் சினிமாவின் வருகையும் பண்பாட்டுக் கலப்புமாகும்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை பூப்படைந்த பெண்ணுக்கென எந்தவிதமான சடங்குகளும் செய்யப்படுவதில்லை. இதனை ஆடம்பரமாகச் செய்வது அவர்களது கலாசாரத்தில் இடம் பெறவில்லை. பருவமடைந்த பெண்ணை தாய், சகோதரிகள் அழைத்துச் சென்று கிணற்றடியில் வைத்து தலையில் நீரூற்றி முழுகவார்ப்பார்கள். இந்த நேரத்தில் எதுவிதமான சம்பிரதாயச் சடங்குகளும் நடைபெறமாட்டாது. கிட்டத்தட்ட முப்பது, நாற்பது வருடங்களுக்குமுன் ஒரு சில சடங்குகள் செய்யப்பட்டன.

**திருமணச் சடங்கு**

மனித இனம் தன்பாலுந்துதலை ஒரு நிறுவன அமைப்புக்குள் நிறைவு செய்துகொள்ள ஏற்படுத்திய முறையே திருமணமாகும். "உயர் பாலூட்டிகளிடமும் பிறகீழின விலங்குகளிடமும் பாலுறவு ஓர் உயிரியற்ச் செயலாக மட்டுமே நிகழ்கிறது. ஆனால் மனிதர்கள் அடிப்படையில் சமுதாய பண்பாட்டு விலங்காதலால் அவ்வுயிரியற் செயலைத் திருமணம் எனும் நிறுவனச் செயலாக்கி அவர்கள் தம் உள - உயிரியற் உந்துதல்களை நிறைவு செய்து கொள்கின்றனர்". இதன்படி ஓர் ஆணும் பெண்ணும் கணவன் மனைவி எனும் தகுதி பெறுகின்றனர்.

ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் நிச்சயமானதும் மாப்பிளை கேட்டுப் போதல் சடங்கு இடம்பெறும். இது பெட்டி கொண்டுபோதல் என அழைக்கப்படுகின்றது. அன்று திருமணத்திற்கும், தாலிக்கும் பொன் உருக்குவதற்கும் நாள் குறிக்கப்படும். இங்குள்ள மக்கள் தமது அந்தஸ்து வசதி கருதி இரு முறைகளில் செய்கின்றனர்.

I. பழைய மரபுப்படி செய்வது அதாவது குடும்ப உறவினர்கள் சகிதம் இருக்க நடைபெறும் திருமணம்.

II. பிராமண ஐயர் ஓமம் வளர்த்து கிரியைகள் செய்து திருமணத்தை நடத்தி வைப்பர்.

திருமண நாளன்று மணமகனுக்கு மணமகளின் சகோதரனும் மணமகளிற்கு மணமகனின் சகோதரியும் தலையில் பால் வைத்த பின் நீராட்டல் இடம்பெறும். மாப்பிள்ளையின் சகோதரிகளில் சுமங்கலிப் பெண்ணொருவர் தாலி கூறைப் பெட்டி ஏந்திச் செல்ல ஏனைய பெட்டிகளையும், மங்களப் பொருட்களையும் ஏனைய சுமங்கலிப் பெண்கள் எடுத்துச்செல்வர். மாப்பிள்ளைத் தோழன் குடைபிடித்து மாப்பிள்ளையை அழைத்துச் செல்வார். பெண்ணின் சகோதரி கூறை, தாலிப் பெட்டியை வாங்கிக்கொள்ள வரும்போது இழுபறி நடைபெற்று பெட்டி வாங்கியதும் பெண்ணின் தாயார் மாப்பிளையின் தாய்க்கு தண்ணீர் செம்பு கொடுத்து அதன்பின் மங்களப் பொருட்கள் கொடுத்து அழைத்துச் செல்வார்.

மாப்பிள்ளைத் தோழன் மாப்பிளையின் காலைக் கழுவியபின் தோழனுக்கு மாப்பிள்ளை மோதிரம் அணிவித்து விடுவார். மாப்பிள்ளை அமர்ந்த பின் பெண்ணை அழைத்து வந்து அமரவைப்பார்கள். இதன்பின் ஆசீர்வதிக்கப்பட்ட கூறையை மணமகள் உடுத்து வந்தபின் மணமகளின் கழுத்தில் மணமகன் தாலி கட்டுவார். பிறகு இருவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதிரம் மாற்றிக் கொள்வார்கள். பெற்றோர்கள் இவர்களின் கையைப்பிடித்துக் கொடுத்ததும் இருவரும் மாலை மாற்றிக்கொள்வார்கள். இதன்பின் கண்ணூறு கழித்ததும், கலத்தில் போடுதலும் இடம் பெறும். இதுதான் பழைய மரபு வழிபட்ட சடங்காகக் காணப்படுகின்றது.

ஆனால் பிராமண ஐயர் வந்து செய்யும் சடங்குகளில் இதனுடன் சில புதிய சடங்குகளும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. ஓமம் வளர்த்தல், மண மக்களுக்கு மஞ்சள் காப்புக் கட்டல், ஓம குண்டத்தைச் சுற்றி ஏழு முறை வலம் வரல், அம்மி மிதித்தல், மெட்டி போடல் போன்ற சடங்குகளும் இடம்பெறும். பழைய மரபுப்படியும் சரி ஐயர் வந்து செய்யும் திருமணத்திலும் சரி பதிவுத் திருமணம் முக்கியமாக இடம் பெறும். திருமணமாகி மூன்றாம் நாள் மாப்பிள்ளைச் சாப்பாடு நடைபெறும். இதன்பின் மாப்பிள்ளை வீட்டிற்கு கால் மாறிப் போதல் இடம்பெறும்.

முஸ்லிம்களின் திருமணத்திலும் மாப்பிள்ளை கேட்டுப் போதல், பெட்டி கொண்டுபோதல் என்பன இடம்பெறும். திருமணததிற்கு முன் பெண் வீட் டில் மருதாணி போடும் சடங்கொன்று இடம் பெறும். மாப்பிள்ளையின் வீட்டிலிருந்து மருதாணி கொண்டு போய் பெண்ணுக்கு கையில் போட்டு விடுவார்கள். பெண்கள் மட்டுமே அச்சடங்கில கலந்து கொள்வதைக் காணக்கூடியதாய் உள்ளது. இம்மருதாணி கொண்டு போதலை "பரசம்" என்றும் சொல்வார்கள். இதனை செய் நம்பு நாச்சியார் மாண்மியமும் கூறுகின்றது. இதே போல் இந்தியாவிலும் "பரிசம்" போடல் எனும் ஒரு சடங்கு இடம் பெறுகின்றது. இதில் மணப் பெண்ணுக்குத் தேவையான மங்களப் பொருட்கள், சேலை என்பன இருக்கும். இதேபோல் "நலுங்கு" எனும் ஒரு சடங்கும் இந்தியா, மொரீசியஸ் ஆகிய இடங்களில் இடம் பெறுகின்றது. இதில் மணப் பெண்ணுக்கு மஞ்சள், குங்குமம் பூசிச் செல்வார்கள்.

முஸ்லிம்களின் திருமணம் மாலைப்பொழுதிலேயே இடம்பெறும். வீட்டின் நடுவறையில் மணவறை கட்டி இருப்பார்கள். மணப்பெண்ணை அலங்கரித்து அதில் உட்கார வைப்பார்கள். இவ்வறையின் இடதுபக்கம் கட்டில் போடப்பட்டிருக்கும். அதன்மேல் ஏழு பாய் போடப்பட்டிருக்கும். மணமகன் அவரது வீட்டில் ஆயத்தமானதும் "காவின் எழுதுதல் இடம்பெறும். காவின் எழுதும் சடங்கு நிறைவேறியதும் மணமகன் பெண் வீட்டை அடைவார்.

மணமகளின் சகோதரன் மாப்பிள்ளையின் காலைக் கழுவி மாப்பிள்ளை தோழனுக்கு மோதிரம் போடுவார். அல்லது பணம் கொடுப்பார். இதன் பின் மாப்பிள்ளை உள் அறையில் இருக்கும் மணவறைக்கு அழைத்துச் செல்லப்படுவார். தாலி கட்டி முடித்ததும் பெண்ணின் தகப்பனார் பெண்ணின் தலைமுடிகளில் சிலவற்றைப் பிடித்து மணமகனின் கையில் கொடுப்பார். பின் பால், பழம் அருந்தி திருமணச்சடங்குகள் முடிந்ததும் மணமகன் வெளியே வந்து அமர்ந்து விடுவார். மூன்றாம் நாள் இரவு மணமகனின் வீட்டிற்கு கால் மாறிப் போகும் சம்பிரதாயம் இடம் பெறும்.

**மரணச் சடங்கு**

ஒரு மனிதன் பிறந்து இறக்கும் வரை பல சடங்குகளைக் கடந்து வருகிறான் தமிழர் மரபில் அன்றிலிருந்து இன்றுவரை இறந்தவர்களை வணங்கும் வழக்கம் உண்டு. இந்துமதம் மறுபிறவியில் நம்பிக்கை கொண்டுள்ளது. இதனாலேயே தமிழர்கள் இறந்த உடலுக்கு பல வகையான சடங்குகளைச் செய்கின்றனர்.

முதலில் இறந்தவரின் உடல் நீராட்டுவதற்காக எடுத்துச் செல்லப்படும். ஆணாக இருந்தால் நாவிதன் முகச்சவரம் செய்வார். திருமணமானவராக இருந் தால் கூறைச்சேலை, கூறைவேட்டி என்பன பயன்படுத்தப்படும். இறந்தவரின் குடியினைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்து வண்ணான் கூரை முடிவைப்பார். நாவி தன் வாய்க்கரிசியும், அரப்பு எண்ணையும் தயாரித்து வைப்பார். இறந்தவரின் வீட்டில் பறையன் அடித்துக் கொண்டிருக்க உடல் அலங்கரிக்கப்பட்டு பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும். தலைமகனே உடலுக்கு முதலில் கடமைகள் செய்வார். இதில் இருவகையான சடங்குகள் உண்டு.

1. புதைப்பதற்கான சடங்கு
2. எரிப்பதற்கான சடங்கு

உடலை அடக்கம் செய்வதற்கு முன்னர் மஞ்சள், அறுகு கலந்த நீரினால் இறந்தவரின் காலைக் கழுவி தலையில் அரப்பு வைத்து அதன்பின் வாயில் அரிசி இடப்படும். எரிப்பதற்கான உடல் என்றால் இத்தோடு ஐயர் வந்து முற்றத்திலே ஓமம் வளர்த்துக் கிரியைகள் செய்து பொற்சுண்ணம் இடிப்பதுடன் உடலுக்கு தீவைப்பதற்கு உரிமை உடையவருக்கு பல கிரியைகளும் செய்யப்படும். இங்கு அனேகமாக புதைக்கும் வழக்கமே உண்டு வீட்டில் செய்யப்படும் சடங்குகள் முடிவடைந்ததும், இறந்தவரின் உடல் பாடையினுள் வைக்கப்படும். "வெள்ளிக்கிழமைகளில் இறந்தால் பிரேதத்துடன் ஒரு முட்டையும், சனி, புதன் கிழமைகளில் அடக்கம் செய்வதென்றால் கூடவே தென்னம் பிள்ளை ஒன்றையும் எடுத்துச் செல்வார்கள்".

பிரேதம் மயானத்திற்குச் செல்லும் போது புதைப்பதென்றாலும்சரி, எரிப்பதென்றாலும்சரி இறந்தவரின் மூத்த மகன் தோழில் ஆற்று நீர் நிறைந்த மண்குடத்தையும் அதன்மேல் எரிந்த விறகையும் எடுத்துச் செல்வார். புதைக்கும் உடல் என்றால் மடுவில் வைத்து மூடப்பட்டதும் மண்ணைக் குவித்து விடுவார்கள். இதன்பின் நீர், நெருப்பை எடுத்து வந்தவர் புதைத்த இடத்தில் மூன்றுமுறை சுற்றி வந்து தலைப்பகுதியில் அதனை உடைத்து விட்டு திரும்பிப் பார்க்காமல் செல்வார். பிரேதத்தை அடக்கம் செய்துவிட்டு வரும்போது வாசலில் நீர் நிரப்பப்பட்ட பாத்திரமும், உலக்கையும் இருக்கும். நீரை தலை கால்களில் ஊற்றியபின் உலக்கையைக் கடந்து உள்ளே வருவார்கள்.

இதன்பின் முழுகி வண்ணானால் வழங்கப்பட்ட மாற்று ஆடைகளை அணிவார்கள். "மாலையானதும் மயானத்திற்கு எடுத்துச்சென்ற கத்தி, மண்வெட்டி என்பன கழுவி வீட்டு மூலையில் வைக்கப்பட்டு அவ்விடத்தில் குத்துவிளக்கும், தண்ணீர் செம்பும் வைக்கப்படும். இந்த இடத்தில் இருந்து ஒரு பெரியவர் வைகுந்த அம்மானை பாடுவார். வீட்டிற்கு அருகில் உள்ள சந்தியில் இளநீர் மூன்று நாளைக்கு தொடர்ந்து வைப்பார்கள்.

மூன்றாம் நாள் மயானத்தக்குச் சென்று புதைக்கப்பட்ட இடத்தின் மேல் குவிந்திருக்கும் மண்ணைச் சமப்படுத்தி சுற்றிவர பால் ஊற்றி பூக்கள் வைத்து வணங்குவார்கள். அன்று மயானத்துக்கு ஆண், பெண் ஆகிய இருபாலரும் செல்வார்கள். எரிந்தபிணம் என்றால் பாலை ஊற்றியபின் எலும்பு, சாம்பல் என்பன புதிய மண்பாத்திரம் ஒன்றில் எடுத்து ஆற்றில் அல்லது கடலில் கரைத்துவிடுவார்கள். இதில் கொஞ்சம் அந்தியெட்டி சடங்கு செய்வதற்கு எடுத்து வைபபார்கள். அன்று இரவு கல்லைக்கு வைத்தல் இடம்பெறும். இதனை "மூன்றுக்கு புக்கை வைத்தல்" என்றும் கூறுவார்கள். இத்துடன் எட்டாம் நாள் "கல்லைக்கு வைக்கும் சடங்கும்" இடம்பெறும். இன்று சில இடங்களில் எட்டாம் நாள் செய்யும் சடங்கு மருவிவிட்டது.

இதன்பின் அந்தியெட்டி சடங்கு செய்யப்படும். இது முப்பத்தோராம் நாள் அல்லது நாற்பத்தோராம் நாள் செய்யப்படும். அன்று பிராமண ஐயர் வீட்டில் கிரியைகள் செய்து உணவுப் பொருட்களைப் படைத்து பூசை செய்வார். ஐயரை அழையாமல் இச்சடங்கினைச் செய்பவர்களும் உண்டு. தங்கள் வசதிக்கேற்ப இதனைச் செய்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர். அன்று மரக்கறி சமையலும், இனிப்புப் பண்டங்களும், பழவகைகளும் படையலில் வைப்பார்கள். இறந்தவரின் ஆவி இதனை ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கை மக்களிடம் உள்ளது. இவற்றைப் படைத்து பல்லி சொல்லும் வரை காத்து இருப்பார்கள். இதனை எல்லா தமிழ் மக்களும் சில சில மாற்றங்களுடன் செய்து வருகின்றனர்.

ஒரு முஸ்லிம் மரணமடைந்தால் உடனடியாக அவரது உடலை அடக்கம் செய்ய வேண்டும் என்பது இஸ்லாமிய மதச் சட்டமாகும். "மரணமடைந்தவரின் உடலை குளிப்பாட்டி கபனிட்டு, தொழுகை நடத்தி, நல்லடக்கம் செய்தல்" எனும் இந்த நான்கு கடமையும் கட்டாயமாகச் செய்ய வேண்டும். "இங்குயார் மரணம் அடைந்தாலும் வெள்ளைத் துணியே பயன்படுத்தப்படும்". மரணமடைந்தவருக்கான ஆடைகள் ஊசி, நூல் கொண்டு அவ்விடத்திலே தைக்கப்படும். ஒரு பாயின் மேல் ஆறடி வெள்ளைத் துணி விரிக்கப்பட்டு அதன்மேல் இறந்தவரின் உடல் வளர்த்தப்படும். குறிப்பிட்ட சில மணிநேரம் பார்வைக்காகவும் இறுதி மரியாதைக்காகவும் வைக்கப்படும். இதன்பின் "தலையணை உறைபோல் தைக்கப்பட்ட வெள்ளைப் பையினுள் இறந்தவரின் உடலைப் புகுத்திக் கட்டுவார்கள்".

இதன்பின் "சந்தூக்கு" எனும் சவப்பாடையினுள் அந்த உடலைவைத்து பள்ளி வாசலுக்கு தூக்கிச் செல்வார்கள்.இறந்தவர் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி பள்ளிவாசலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவருக்காகத் தொழுகை இடம்பெறும். வடக்குப் பக்கம் தலையும் தெற்குப் பக்கம் காலும் இருக்கத்தக்க வகையில் இடப் பக்கம் திரும்பியவாறு கிழக்குப் பக்கம் நோக்கிய வண்ணம் இருக்கத் தக்கதாகப் புதைக்கப்படும். இதன்பின் கால், தலை ஆகிய இருபகுதிகளிலும் இரு மரக்குற்றிகள் நடப்படும். ரொட்டி, வாழைப் பழம் என்பன இறந்தவரின் வீட்டில் இருந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு உடலைப் புதைத்து முடிந்ததும் அவற்றை உண்டு விட்டு வீடு திரும்புவார்கள்.

கணவனை இழந்த ஒரு மனைவி மூன்று மாதங்கள் பத்து நாட்கள் அல்லது நான்கு மாதங்கள் "இத்தா" இருப்பார். தன்னைத் திருமணம் செய்யக்கூடிய உறவில் உள்ள ஆண்களின் தொடர்பின்றி இருக்க வேண்டும் என்ற கலாசாரம் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஒருவர் மரணமாகி 3ம், 7ம், 40ம், 100ம் தினங்களிலும் ஆண்டு முடிவிலும் கத்தம் ஓதி அதாவது இறைமறை வசனங்கள் ஓதி விருந்து வைப்பர். கத்தம் ஓதும் மரபு தென்னிந்திய முஸ்லிம்களிடம் இருந்து இங்கு ஊடுருவியுயள்ளதைக் காணலாம். இஸ்லாமிய மதம் கோட்பாடுகளினால் மக்களை மிகவும் இறுகப்பற்றி வைத்துள்ளது. இதனால் சடங்கு என்பதுடன் சட்டமும் முக்கியம் பெறுவதனைக் காணக்கூடியதாய் உள்ளது.

மனித வாழ்வில் சடங்குகளும், ஆசாரங்களும் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. இந்தச் சடங்குகள் மூலம் ஒரு சமூக இணைப்பினைக் காணக்கூடியவாறு உள்ளது. தனித்தனியே பிளவு பட்டிருக்கும் சாதிகள் ஒரு சடங்கு நடைபெறும் போது ஒன்றிணைவதையும் பல சமூகங்கள் ஒன்றிணைவதையும் காணக்கூடியதாயுள்ளது. அதே நேரம் சடங்குகள் சில மூடநம்பிக்கைகளையும், மூட பழக்கவழக்கங்களையும் பாமரமக்கள் மத்தியிலேயே ஏற்படுத்துகின்றன. இதனை முளையிலே கிள்ளி எறிய வேண்டும். சடங்கு என்பது கடந்தகால வரலாறுகளின் மதிப்பீடுகளைக்கொண்டு நிகழ்காலத்துக்கு ஏற்றவகையில் தன்னை வடிவமைத்துக் கொண்டு எதிர்காலம் பற்றிய தீர்க்கமான தரிசனம் நோக்கி இயங்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


1. அப்துல் காதர் லெப்பை — செய்நம்பு நாச்சியார் மாண்மியம், மணிக்குரல் பதிப்பகம், கல்வரின்ன - இலங்கை. 1ம் பதிப்பு - 1967.
2. கந்தையா வீ.சி — மட்டக்களப்புத் தமிழகம், யாழ்ப்பாணம், 1967.
3. சலீம் ஏயாரெம் — கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கல்யாணச் சடங்குகள, ஹிராப்பளிகேஷன்ஸ், அக்கரைப்பற்று, 18.11.1992
4. சிவசுப்பிரமணியம்.ஆ — மந்திரமும், சடங்குகளும், மக்கள் வெளியீடு, சென்னை. செப்டம்பர் 1999.
5. சிவசண்முகம்.ஞா — மட்டக்களப்பு குகன் குல முற்குகர், வரலாறும் மரபுகளும், விபுலம் வெளியீடு, ஏப்ரல் 2000.
6. தேவ்நாத.சி.எஸ் — அனைத்து மதத்திருமணச் சட்டங்கள், நர்மதா பதிப்பகம், சென்னை. மே 1991.
7. நடராசா F.X.C வித்தவான் — மட்டக்களப்பு மாண்மியம், மட்டக்களப்புக் கலாசாரப் பேரவை. 1998.
8. முஹம்மத் சமீம்.ஏ — இலங்கை முஸ்லிம்களின் திருமணச் சம்பிரதாயங்கள் நான்காவது அனைத்துலக இஸ்லாமிய இலக்கிய மாநாட்டு வெளியீடு. 1979.

**கட்டுரைகள் :-**

சித்திரலேகா மௌனகுரு — மட்டக்களப்பு தமிழர்களின் நாட்டார் மரபும், கரணங்களும், யாழ்.பல்கலைக்கழகம், 13, 14. யூன் 1980.

சொர்ணம்.கே — மொரீசியஸ் தமிழ்த் திருமண முறைகள், ஓர் ஒப்பியல் பார்வை, 7வது உலகத் தமிழ் மாநாடு, மொரீசியஸ். டிசம்பர் 1989.

சடங்குகள், வாழ்வியற் கழஞ்சியம், தொகுதி -8.

**சஞ்சிகைகள் :-**

மனோன்மணி சண்முகதாஸ் — தமிழர் பூப்பு நீராட்டு நடைமுறைகள். பண்பாடு 1997

.மௌனகுரு.சி.போராசிரியர் — மரணவீடுகளில் இருவிளக்கங்கள், கிழக்கொளி 2000 ஐப்பசி, மார்கழி.

**பத்திரிகை:-**

அருள் செல்வநாயகம் — மட்டக்களப்புத் தமிழரின் திருமணச் சம்பிரதாயங்கள். தினகரன், வாரமஞ்சரி 1802.1973.

தாழை செல்வநாயகம் — மட்டக்களப்பு வாழ்வில் மறையாத கிரியைகள், வீரகேசரி 22.02.1981

மஹ்றூப் கரீம்.M.M.M — மட்டக்களப்புத் தமிழகத்தில் முஸ்லீம்கள் திருமணங்களில் பின்பற்றப்படும் சம்பிரதாயங்கள். ஈழ நாடு வாரமலர் 23.05.1976.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர்கள் கௌரவம்



**இயற்பெயர் :- செல்லத்தம்பி - தம்பிப்பிள்ளை**
**பிறந்த திகதி :- 13.10.1929**
**முகவரி :- ஆரையம்பதி**
**கௌரவிக்கப்படும் துறை :- கூத்து (கலைஞர்)**

* இவர் ஆடிப் புகழ்பெற்ற கூத்துக்கள் அலங்காரரூபன் நாடகம் (தென்மோடி), வாளவீமன் நாடகம் (தென்மோடி) என்பவையாகும்.
* அலங்காரரூபன் நாடகம் (தென்மோடி) 1953ம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து 18 ஆண்டுகள் கிழக்கிலங்கையில் பல ஊர்களிலும் 18 தடவைகள் ஆடப்பட்டன.
* வாளவீமன் நாடகம் (தென்மோடி) 1963ம் ஆண்டிலும் 1964ம் ஆண்டிலும் ஆக இரண்டு அரங்கேற்றங்களைக் கண்டிருக்கிறது.
* இக்கூத்துக்கள் இரண்டிலும் கதாநாயகர் வேடம் புனைந்து மிகச்சிறப்பாக நடித்துப் பாராட்டுப் பெற்றுள்ளார்.
* மேலும் இவர் சிவபுராணம், அம்மானை போன்ற இசைப் பாடல்கள் பாடுவதிலும் வல்லவராவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

**இயற்பெயர் :- செல்லப்பா இரத்தினசிங்கம்**
**பிறந்த திகதி :- 03.04.1937**
**முகவரி :- தாழங்குடா -02**
**கௌரவிக்கப்படும் துறை :- கூத்து (அண்ணாவியார்)**



* தமது 22 ஆவது வயதில் ஆடிய பப்பரவாகன் (வடமோடி) கூத்தின் மூலம் இத்துறையில் நுழைந்தார்.
* இவர் ஆடிய பல்வேறு கூத்துக்களுள் குருக்கேத்திரன் போர் (வடமோடி), வாளவீமன் (தென் மோடி) இவை இரண்டும் மிகவும் பிரசித்தமானவை. இவற்றில் வாளவீமன் கூத்தில் இவர் சுபத்திரையாக பெண்வேடம் ஏற்று சிறப்பாக நடித்துப் பேர் எடுத்தார்.
* பிற்காலத்தில் சிறந்ததொரு அண்ணாவியாக வளர்ந்த இவர் பல்வேறு கூத்துக்களைப் பழக்கி அரங்கேற்றினார். அவற்றில் குருக்கேத்திரன் போர்(வடமோடி), கண்ணகை சிலம்பு(வடமோடி), றெபேகால் திருமணம்(கிறிஸ்தவக்கூத்து), சிக்கல் கல்யாணம்(நவீன நாட்டுக்கூத்து), வாளவீமன் (தென்மோடி), அலங்காரரூபன்(தென்மோடி) போன்றகூத்துக்கள் குறிப்பிடத்தக்கவை.
* கிட்டத்தட்ட 15கூத்துக்கள் வரை பழக்கியுள்ள இவர் வடமோடி, தென்மோடி இரண்டுக்குமான சிறந்த மத்தள அடிக் கலைஞருமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இயற்பெயர் :- அகமது லெப்பை முகைதீன் பாபா**
**பிறந்த திகதி :- 16.08.1917**
**முகவரி :- காங்கேயனோடை**
**கௌவிக்கப்படும் துறை :- நாட்டுவைத்தியம்**

* கடந்த 20 வருடங்களாக நாட்டு வைத்தியத்துறையில் ஈடுபட்டு வருபவர்.
* குறிப்பாக தலையிடி, விடாத காய்ச்சல், காதுகுத்து, பல்வலி போன்றவற்றிற்கு சிறப்பாக வைத்தியம் செய்யக் கூடியவர்.
* கிட்டத்தட்ட 1000க்கு மேற்பட்டோர்ருக்கு இதுவரை இவர் சிகிச்சையளித்துள்ளார். வைத்தியசாலையில் கைவிடப்பட்ட பலர் இவரது சிகிச்சையால் குணமடைந்துள்ளனர்.
* ஊதிபார்த்தல் மந்திரம் போன்றவற்றிலும் வல்லவர்.
* கிராமிய கலை இலக்கியத்திலும் மிகுந்த ஈடுபாடு உடையவர்.
* கப்பல் பாட்டு, காவியங்கள் போன்றவற்றை சிறப்பாகப் பாடக்கூடியவராவார்.

---

**இயற்பெயர் :- ஐயம்பிள்ளை-சிவானந்தராசா**
**பிறந்த திகதி :- 01.01.1936**
**முகவரி :- ஆரையம்பதி - 02.**
**கௌரவிக்கப்படும் துறை :- சாண்டோக்கலை**



* சிறுவயதில் சாண்டோக்கலையை அவர் குருவாகிய சாண்டோ தியாகராஜா அவர்களிடம் கற்று தமது 23வது வயது முதல் இக்கலையில் ஈடுபட்டு வருகின்றார்.
* முதன்முதலாக 2 2 L இரும்புக் கேடரை 4 நிமிடங்களில் இரண்டாக உடைத்தார்.
* அதன்பின் அவரால் பல்வேறு சாகசங்கள் நிகழ்த்தப்பட்டன. யானைகட்டும் சங்கிலியை இரண்டாக உடைத்தல், இரும்புக் கம்பியை புயத்தில் அடித்து வளைத்தல், வார்த்தடியை புயத்தில் அடித்து உடைத்தல், ஓடும் வாகனத்தை இழுத்து நிறுத்துதல், வாகனத்தை மார்பின்மேல் ஏற்றல் 56 இறாத்தல் இரும்புக்குண்டை வயிற்றில் போடுதல் முதலியன குறிப்பிடத்தக்கவையாகும்.
* இவர் ஆரையம்பதி, காத்தான்குடி, மட்டக்களப்பு, நீர்கொழும்பு முதலிய பல இடங்களில் பல பல தடவைகளில் சாகசங்களை நிகழ்த்தியுள்ளார்.
* சாண்டோக்கலை மட்டுமன்றி இவர் பல்வேறு நாடகங்களில் 'ஸ்டன்ட்' மாஸ்டராகப் பணிபுரிந்துள்ளார். இவரது நாடகச் சண்டைகள் திரைப்படச் சண்டைக் காட்சிகளை மேடையில் பார்க்கும் வாய்ப்பை ஏற்படுத்தியதாக முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான திரு.செ.இராசதுரை அவர்களால் பாராட்டுப் பெற்றுள்ளார்.
* பல நாடகங்களில் வில்லன் பாத்திரத்தில் நடித்தப் புகழ்பெற்றவர்.
* நூற்றுக்கனக்கான நாடகங்களுக்கு ஒப்பனையாளராகயிருந்து ஈழத்துக்கரிபாபு என்னும் பட்டத்தையும் பெற்றுள்ளார்.
* இவற்றுடன் நாட்டு வைத்தியம் குறிப்பாக முறிவு வைத்தியத்தில் தேர்ச்சி பெற்றதோடு நூற்றுக்கு மேற்பட்டோருக்கு முறிவு வைத்தியமும் செய்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இயற்பெயர் :- சின்னத்தம்பி சந்திரசேகரம்**
**பிறந்ததிகதி :- 12.08.1923**
**முகவரி :- ஆரையம்பதி**
**கௌரவிக்கப்படும்துறை :- நாடகம் (நடிகர்)**

* இவர் குணச்சித்திர பாத்திரமேற்று நடித்த பல நாடகங்களில் குறிப்பிடத்தக்கவை. 'நீறுபூத்த நெருப்பு' (இதிகாசம் 1972) குடும்பம் ஒரு கோயில் (சமூகம் -1972), கடன்படுதிரவியங்கள் (சமூகம்-1973), மானம் காத்த மாவீரன் (இதிகாசம் -1973), தெய்வங்கள் வாழும் பூமி (சமூகம் -1981) என்பனவையாகும். இந்நாடகங்கள் இவரை சிறந்த நடிகராக வெளியுலகிற்கு இனம் காட்டிய நாடகங்களாகும்.
* கிழக்கிலங்கையில் தயாரிக்கப்பட்ட முதலாவது வீடியோப் படம் எனக் கருதப்படும் ஆரையம்பதி இந்து சமய இலக்கிய அபிவிருத்திச் சபையினால் தயாரிக்கப்பட்ட "மண்சுமந்த மகேசன்" என்னும் வீடியோப் படத்தில் பிரதான பாத்திரமேற்று சிறப்பாக நடித்துப் பாடிப் புகழ்பெற்றுள்ளார்.
* நடிப்பு மாத்திரமின்றி பல சமூக, சமய, காலப்பணிகளில் சேவையாற்றிவரும் சிறந்த சேவையாளருமாகும்.

---

**இயற்பெயர் :- கணபதிப்பிள்ளை இராசரெத்தினம்**
**பிறந்த திகதி :- 02-07-1923**
**முகவரி :- ஆரையம்பதி -01**
**கௌரவிக்கப்படும்துறை :- இலக்கியம்**



* 1980 முதல் எழுத்துலகில் பிரவேசித்த இவர் கிட்டத்தட்ட 35 கட்டுரைகள் வரை எழுதியுள்ளார்.
* இவரது கட்டுரைகள் தினகரன், வீரகேசரி, தினக்குரல் முதலிய தினசரிப் பத்திரிகைகளிலும் சிவநெறி அமிர்தம் முதலிய சஞ்சிகைகளிலும் பல கும்பாபிசேக மலர்களிலும் வெளிவந்துள்ளன.
* இவர் பெரும்பாலும் சமயம், சமய வரலாற்றுக் கட்டுரைகளை அதிகம் எழுதியுள்ளார்.
* எழுத்துத்துறை மட்டுமன்றி பல சமய, சமூக, பொதுப்பணிகளிலும் ஈடுபாட்டு வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அஞ்சலி

மண்முனைப்பற்றுப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் இவ்வாண்டுக் கௌரவக் கலைஞர்களாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்த திரு.கணபதிப்பிள்ளை இராசரெத்தினம், திரு.சின்னத்தம்பி சந்திரசேகரம் ஆகிய இருவரின் திடீர் அமரத்துவச் செய்திகேட்டு, அதிர்ச்சியடைந்தோம். அமரர்கள் இருவருக்கும் கலாசாரப் பேரவையின் சார்பாக அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, இவர்களின் ஆத்மா சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**கலாசாரப் பேரவை,**
**மண்முனைப்பற்று.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மக்கள் வாழ்க்கையில்

# கிராமியக் கலையின் முக்கியத்துவமும், அவற்றை வளர்க்கவேண்டியதன் அவசியமும்

எந்தக் கலையாக இருந்தாலும் அது மக்கள் வாழ்க்கையின் ஏதோ ஒரு தெறிப்பிலிருந்து பிறந்தவையாகத்தான் இருக்க முடியும். பொதுவாக கலைஞன் ஒருவன் தன் அனுபவங்கள் மூலமாகவும், இயற்கை சூழலிலிருந்தும் பெற்ற கலை உணர்வினை தனக்கு கைவந்த கலையாக வெளிப்படுத்தும்போது அது கலைவடிவம் பெறுகின்றது.

கிராமியக் கலைகள் என்பது கிராம மக்களாலே அளிக்கை செய்யப்படுவதும், கிராம மக்களே பார்க்கப்படுவதுமாகும். இது இடத்துக் கிடம் மாறுந்தன்மையுடையது மட்டக்களப்பு கிராமியக் கலைக்குப் பேர்பெற்றதொரு இடமாகும். பொதுவாக 'கலை' என்று சொல்லும்போது எம் மட்டக்

**சி.புவனேந்திரன்**

களப்பு பிரதேசத்துக்கே உரித்தான கிராமியக் கலைகளே எம் நினைவுகளில் நீந்துகின்றது. காரணம், இக்கலைகள் எமது மட்டக்களப்பு பிரதேச மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தவையாக காணப்படுகின்றன. அந்த வகையிலே இக்கலைகள் பற்றியும், எம் பிரதேச மக்கள் வாழ்க்கையில் அதன் முக்கியத்துவம் பற்றியும், அவற்றை வளர்க்கவேண்டியதன் அவசியம் பற்றியும் விரிவாக ஆராயவேண்டியது அவசியமாகும்.

"எங்கும் குறைவில்லாது இயலையுடைய தேனாடு மட்டக்களப்பு என்னும் வளநாடு" என்று வர்ணனை பெறுகின்ற கிராமியக் கலைகளின் பிரவாகம் பெருக்கெடுத்தோடுகின்ற எமது பிரதேசத்துக்கே உரித்தான கிராமியக் கலைகளாக நாட்டுக்கூத்து, கிராமியச் சிற்பம், கிராமிய ஓவியம், நாட்டார் பாடல்கள், கரகம், காவடி, கும்மி, கோலாட்டம் வசந்தன் போன்ற கலைகளும் அத்தோடு சோதிடம், வைத்தியம் போன்ற கலைகளும் திகழ்கின்றன. இவை கால வளர்ச்சியைத் தாண்டியும் எம் பிரதேசத்தைப் வளப்படுத்தும் சாதனங்களாக மிளிர்வதோடு எம் மக்கள் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்றனவாகவும் விளங்குகின்றன.

ஒரு குழுவின் அல்லது சமூக அமைப்பின் தூரத்துப் பிரதிபலிப்புக்களே கலைகளாகும். கலைகளை



ஆராய்வதன் மூலம் ஒரு இனத்தின் பண்பாடு, அமைப்பு என்பவற்றை கணக்கிட முடியும். "வெள ளைத்தனையது நீர்மட்டம் போல் மக்கள் வாழ்க்கையனையது கலைகளாகும்". இதற்கேற்ப மேற்குறிப்பிட்ட கிராமியக் கலைகளை எம்மக்கள் வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி ஆராய்வதோடு அதன் வளர்ச்சி பற்றியும் தனித்தனியாக ஆராய்வோம்.

எமது பிரதேசத்தக்கென்றே தனித்துவம் பெற்ற கலைகளின் வரிசையில் நாட்டுக்கூத்து முதலிடமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பிடமும் பெறுகின்றது. இளங்கோவடிகள் யாத்த சிலப்பதிகாரத்திலே கூறப்படுகின்ற குரவைக கூத்துக்கும், இந்த நாட்டுக்கூத்துக்கும் தொடர்பி ருப்பதாக சில இலக்கியச் சான்றோர்கள் கூறுகின் றார்கள். இக்கலை வடிவம் மக்கள் வாழ்க்கை யிலே மிக முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.

அந்தவகையிலே எமது பிரதேச மக்கள் விவசா யத்தையும், மீன் பிடித்தலையுமே தமது ஜீவனோ பாய தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர்கள். அத் தோடு பகலெல்லாம் உழைத்து "பாடுபட்டவர்க்கே இந்தப் பாரிடம் சொந்தமையா" என்ற கவி வரிக ளுக்கு ஒப்பாக வாழ்ந்தவர்கள். இரவு நேரங்க ளிலே இவர்களுக்கு ஓய்வு கிடைத்தது. இவர்க ளது வாழ்க்கை இன்பமாக அமைவதற்கும், கலை வளர்வதற்குமாக கூத்து அரங்கேற்றம் செய் யப்பட்டு ஆடப்பட்டுவந்தது.

இந்த நாட்டுக்கூத்து வடமோடி, தென்மோடி என இசைமுறைக்கேற்ப இரண்டுவகையாக காணப் படுகின்றது. அத்தோடு இது நடாத்தப்படுவதற் கான இடம் களரி எனவும் அழைக்கப்படுகின்றது. இது நாலா பக்கங்களிலிருந்தும் மக்கள் இருந்து கூத்தை ரசிக்கும் வண்ணம் அமைக்கப்படுகிறது. கடந்த காலங்களில். இந்த நாட்டுக்கூத்து சிறந்த இடத்தில் இருந்தது. தற்காலத்திலும் அது புதிய வளர்ச்சிகளைக் கண்டிருந்த போதிலும் சில மாற் றங்களையும் சந்தித்து வருகின்றது. காரணம் தற்போதைய சினிமா மற்றும் நவீன கலை வடி வங்களால் இது தனது தனித்துவப் பண்பை பறி கொடுக்கும் நிலையில் காணப்படுகின்றது.

ஆனாலும் சு.வித்தியானந்தன் போன்றோர்கள் எமக்கென்றோர் நாடகம் வேண்டாமா? என சிந் தித்து இந்த நாட்டுக்கூத்திலே சில நவீன முறை களை புகுத்தினர். அந்தவகையில் இராவணேசன் நாடகம், நொண்டி நாடகம், வாலிவதை போன்ற கூத்துக்களை அரங்கேற்றியதோடு மட்டுமல்லாது "அண்ணாவியார் மாநாடு" போன்றவற்றையும் நடத்தினார். அத்தோடு "மு.க" என்று அழைக் கப்படுகின்ற எமது பிரதேச பெரியாரும் எமது சமூகக் கதைகளை நாட்டுக் கூத்தில் உள்ளடக்கி அரங்கேற்றினார். இவையும் எமது நாட்டுக்கூத்து பெற்ற வளர்ச்சியைக் காட்டுகின்றது.

இருந்தபோதிலும் 1983ம் ஆண்டு காலப் பகுதி யிலே சிறப்புப்பெற்று விளங்கிய கூத்து அதன் பிற் பட்ட காலப்பகுதியிலே முற்றாக மறைந்துவிட்டது. இதற்குக் காரணம் மக்கள் ஈடுபாடு குறைந்தமையா கும். ஆனாலும் தற்காலங்களில் "நவீன நாட்டுக் கூத்து" என்ற கலை வடிவத்தை கொண்டிருப்பதும், பல்கலைக்கழகங்களிலே இதனைப்பற்றிய ஆய் வுகளும், அத்தோடு பாடத்திட்டங்களிலே குறிப் பாக நுண்கலைத் துறையில் இதுவும் சேர்க்கப்பட் டதும் இதன் வளர்ச்சியைக் காட்டுகின்றது.

கிராமியச் சிற்பங்களான மண்சுதை உருவங்கள், அம்மன் உருவங்கள், சூரன் சிலை போன்ற மரத் தினாலாக்கப்பட்ட சிலைகள், கூத்திலே பயன் படுத்தப்படுகின்ற பிரம்பு, துணி இவற்றைக் கொண்டு ஆக்கப்படுகின்ற அன்னம், குதிரை, யானை போன்ற உருவங்கள் முதலியனவும் எமது பிரதேசத்தில் தற்காலத்தில் சிறப்புப் பெற்ற கிராமியக் கலையாக விளங்குகினன்றது.

கிராமிய ஓவியங்கள் அதாவது பானையிலே கீறப்படும் கோடுகள், தீட்டப்படும் வர்ணங்கள், கண்ணாடியிலே தீட்டப்படும் ஓவியங்கள் முதலி யனவும் கிராமியக் கலைகளாகக் காணப்படுகின் றன. இவை கைவினை சார்ந்தெனவாக காணப் படுவதால் மக்கள் வாழ்க்கையில் பொருளாதாரத் தில் முக்கியம் பெறுவதோடு புதிய வளர்ச்சியை யும் கண்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக நாட்டார் பாடல்கள் சிறப்பிடம் பெறுகின் றன. இவற்றுள் தலாட்டு, ஒப்பாரி, வசந்தன், மாரி யம்மன் காத்தவராயன் பாடல், லாவணி, தெம்மாங்கு, தொழிற்பாடல்கள், நாடக மேடைப் பாடல்கள் என் பன அடங்குகின்றன. மக்கள் வாழ்க்கையிலே இது எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றன என்ப தற்கு தாலாட்டுப் பாடல்கள் சிறந்த உதாரணமாகும்.

"ஆராரோ ஆரிவரோ
ஆரடித்து நீயழுதாய்
அடித்தாரை சொல்லியழு
ஆக்கினைகள் செய்திடுவோம்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஒரு தாய் தன் பிள்ளையைத் தாலாட்டு கின்ற தன்மையையும், பண்பாட்டையும் இப்பாடல் பறைசாற்றி நிற்கின்றது.

கலைகளுக்கும் உற்பத்தி முறைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இதற்கமைவாக தொழிலைப் பற்றி நாட்டார் பாடல்கள் பேசுவதைக் காணலாம். முக் கியமாக விவசாயம் செய்யும் உழவர்கள் தங்கள் வேர்வையையே விதையாக விதைத்து இறுதியில் இறைவனை வேண்டி நிற்கின்றார்கள். இதனை,

"மண்ணை நம்பி உழுதுவச்சி மழைய
நம்பி வித விதச்சி
உன்ன நம்பி நாமிருப்போம் சாமியே
உழவர் எம்மை நம்பி
இருக்குதிந்த பூமியே"

என்ற நாட்டார் பாடல் எம் உழவர் மக்களின் வாழ்க்கையைச் சிறப்பாக சித்தரித்துக் காட்டு கின்றது. அதே போன்று

"அருவி வெட்டப்போநேன் பெண்ணே
அரிவாளைக் கொண்டா....
அறியாமல் சொல்லி போட்டேன்
பழஞ்சோற்றைக் கொண்டா...."

என்ற நாட்டார் பாடல் கிராம மக்களின் வாழ்க்கை முறையையும்; அவர்களின் தொழில் முறைகளை யும், காடிட்டுக்காட்டுவதனால் நாட்டார் பாடல் கலை வடிவமும் எம் மக்கள் வாழ்க்கையில் முக் கியம் பெறுகின்றது.

அதுமட்டுமல்லாது மீனவர்கள் கரைவலை இழுக் கும் போதும் "ஏலேலோ கைலசா...." என்று கூட் டாக வேலைசெய்யும்போது பாடுவதனால் களைப் புத் தெரிவதில்லை. அந்தவகையில் தொழில் என்ற ரீதியில் இக்கிராமியக் கலைகள் மக்கள் வாழ்க்கையிலே முக்கியம் பெறுகின்றன.
மாரியம்மன் தாலாட்டு, மாரியம்மன் குளிர்த்திப் பாட்டு, பொன்னூஞ்சல் போன்றனவும் நாட்டார் இலக்கியத்தில் அடங்குகின்றன.

"தட்டான் பொடியாக தார் வேந்தன்
நீறாக....."

என்ற பாடலை இதற்கு எடுத்துக் காட்டாக கூற லாம். அத்தோடு "மகமாரி என்றுணை தமக்கு....." என்ற பத்ததி மந்திரப் பாடல்களும் நாட்டார் இசை யோடு பாடப்பட்டு வருகின்றது. இவையும் சமய வழிபாட்டு ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் கிராமியக் கலைகள் மக்கள் வாழ்க்கையில் முக் கியத்துவம் பெற்று விளங்குவதை சான்றுரைக் கின்றது.

"நானழுத கண்ணீரும் -இந்த
நாடழுத கண்ணீரும்
வாய்க்கால் நிறைந்து
வழிப்போக்கர் கால்கழுவி
இஞ்சிக்குப் பாய்ந்து
இலாமிச்சைக்கு வேரோடி....

நாடே அழுததையா
நாளை நமதாமோ?"

என்று தற்கால அகதிகளின் வாழ்க்கையை படம் போட்டு காட்டியிருக்கின்றார். இந்த இலக்கிய வகை நாட்டார் பாடல்களின் வடிவத்தின் வளர்ச் சியே என்பதனால் இதன் பரிணாமம் கிராமியக் கலையை உன்னதமான இடத்துக்கு உயர்ததும் என்பதில் ஐயமில்லை.

அடுத்ததாக ஆலயங்களிலே ஆடப்படுகின்ற கர கம், காவடி, என்பன சமய ஒழுக்கம் நெறி ஈடு பாட்டையும் கலை உணர்வையும் வெளிப்படுத் துபவனாய் அமைகின்றன.
"உலகத்து நாயகியே தேவி தேவி அம்மா-தேவி தேவி"

என்ற கரகப் பாடல் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். இதனைப் போன்று கும்மியும் இங்கே தனித்துவம் பெறுகின்றது.

"நாகங்கள் படம் விரிக்க -எங்கள்
நாகம்மாவை புகழ்ந்தோடுங்கடி
தாபம் கொள் பக்தரின் தாகத்தை
தீர்த்து நாகம்மாவை புகழ்ந்தாடுங்கடி"

என்ற கும்மிப் பாட்டு, மக்கள் வாழ்க்கையை படம் பிடித்துக்காட்டுவதாய் அமைகின்றது.

அடுத்து கிராமிய கலை வடிவங்களில் ஒன்றாக கோலாட்டமும் முக்கியம் பெறுகின்றது. பெண் கள் வட்டமாக நின்றோ அல்லது வேறு வடிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகவோ கோல்களை கையிலேந்தி ஆடுவது கோலாட்டமாகும். 'கோலாடுவோம் நாமும் பண் பாடுவோம்' என்ற பாட்டை இதற்கு காரணமாக எடுத்துக் காட்டலாம். இவற்றிலே முக்கியமாக பெண்களேமுக்கியத்துவம் பெறுவதோடு எமது இனத்தின் கலாசாரத் தனித்துவத்தை வெளியிலே காட்டி நிற்பதாயும் இவை அமைகின்றன.

கொம்புமுறி விளையாட்டு கிராமியக் கலைக்குள் அடங்குகின்றது. இது வடசேரி, தென்சேரி எனவும் இடமும் நேரமும் குறித்தும் விளையாடப்படுகின் றது. இதனை

"கோவை பனிச்சோலை கொய்துடுத்து
கொம்பு விளையாடபோகையிலே...."

என்ற பாடல் எடுத்துக் காட்டுகின்றது. இதுவும் எமது மட்டக்களப்பு மக்களின் வாழ்க்கையிலே முக்கியத்துவம் கொண்டதாகும். கிராம மக்கள் பொழுது போக்குக்கலையாக இவற்றைப் பாவித்து சந்தோசமாய் வாழ்ந்ததற்கான ஆதாரமாகவும் திகழ்கின்றது.

அடுத்து வசந்தன் கூத்து கண்ணகை அம்மன் வழிபாட்டோடு தொடர்பு பட்டதாகவும், விவசா யத்தோடு தொடர்புபட்டதாகவும் விளங்குகின்றது. வயற்களத்தில் வேலை செய்யும்போது சோர்வு போக்க உழும்போது ஏர்ப்பாடலும் சூடடிக்கும் போது பொலிப்பாடலும் மாடுகள் நோமறந்து வேலை செய்யவும் பாடப்பட்டது. ஆனால் தொழில் சம்மந்தமான முழு விடயங்களையும் கூறும் பாட லாக வசந்தன் பாடல்கள் திகழ்கின்றன.

"மங்கையரே எங்கள் நங்கையரே
மழை வாருமடி என் தோழியரே
சங்கையில்லாமல் கட்டுகள் தாங்கி
சடுதியுடன் சுமப்பீர் எல்லோரும்"

என்ற சூட்டு வசந்தன் பாடல் மக்கள் வாழ்க்கை யிலே கிராமியக் கலைகள் எவ்வாறு முக்கியத்து வம் பெறுகின்றன என்பதை சித்திரித்தக் காட்டு கின்றன.

சோதிடம், குறிபார்த்தல், சாத்திரம்பார்த்தல் போன் றனவும் அத்தோடு வைத்தியம் போன்றனவும் இக்கிராமியக் கலைக்குள் அடங்குகின்றன. இதிலே வைத்தியத்தில் முறிவு வைத்தியம், கட்டு வைத் தியம், விஷ வைத்தியம் பற்றியும் அத்தோடு மூலிகைகள் பற்றியும் குறிப்பிடப்படுகின்றன.

"கரிமுகனை வாழ்த்தி கைதனில்
நாடி பார்த்தால்....."

என்று விஷத்துக்கு மருந்து செய்கின்ற முறைக ளும், பாடல்களும் எம் பிரதேச மக்கள் மத்தியி லே மிக முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.

கற்றோர் புனையும் பெற்றியதாய காவியங்களையே தமிழ் கலைகளைகொண்ட இலக்கியமாக வரலாற் றாசிரியர்கள் ஏற்கின்றார்கள். மக்கள் மத்தியில் வாழும கலைகளை அவர்கள் மறுக்கிறார்கள்.

இன்றைய நிலையில் இளைஞர்கள் இக்கிராமியக் கலைகளை முன்னோருக்கே உரியது என ஒதுக் கிவிடுவதும், மக்களின் ஈடுபாடு குறைந்த தன்மை யையும் கிராமியக் கலையொன்று இருந்ததா? என்ற நிலைக்கு கொண்டுவருமோ என நினைக் கும் போது பயமாக இருக்கிறது.

எனவே இதனை வளர்த்தெடுக்க கலைஞர்களை கௌரவித்தல், இதன் மூலம் இளையோர், முதி யோர் மத்தியில் தொடர்பை ஏற்படுத்துதல் மற்றும் பாடசாலை, பல்கலைக்கழகங்களிலிருந்து இத னை வளர்த்தல், அரச, அரசசார்பற்ற நிறுவனங் கள் ஒன்றிணைந்து மாநாடுகளைக் கூட்டுதல், சிறப்புத் தேர்ச்சியுடையோரை பேட்டி காணல், பிரதேச ரீதியாக சாகித்திய விழாக்களை கொண் டாடுவதன் மூலமாக எமது மட்டக்களப்பு பிரதே சத்தைக் கலைவாசம் நிரம்பிய பிரதேசமாக மாற்ற முடியும்.

மக்கள் வாழ்க்கையிலே முக்கியத்துவம் பெற்றும், சிறந்த வளர்ச்சியையும் தாண்டி வருகின்ற இந்தக் கிராமியக் கலைகளை கட்டிக்காப்பதன் மூலம் தான் எமது பண்பாட்டையும், கலையுணர்வை யும் வெளிக்காட்ட முடியும். இவ்வாறு செய்தால் எமது மட்டக்களப்பு பிரதேசம் என்றும் கலைக ளின் கோயிலாகத் திகழும் என்பது திண்ணமாகும்.

**பிரதேச சாகித்திய விழா 2003 ஐயொட்டி, மண்முனைப்பற்று பிரதேச செயலகம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சாகித்திய விழா - 2003
# கலாசார போட்டி முடிவுகள்

**பாடசாலை மட்டப் போட்டி** | **வெற்றி பெற்றவர்களின் விபரம்**

| | | |
|---|---|---|
| 01. கட்டுரைப் போட்டி : | 1ம் இடம் | செல்வன்.சி.புவனேந்திரன் மட்/கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயம். |
| | 2ம் இடம் | செல்வன்.ப.சுதர்சன் மட்/கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயம். |
| | 3ம் இடம் | செல்வி. K.வானதி மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயம். |
| 02. பேச்சுப் போட்டி : | 1ம் இடம் | செல்வி.சி.ஜெயசீலி மட்/ஆரையம்பதி இ.கி.மி.மகா வித்தியாலயம். |
| | 2ம் இடம் | செல்வி.சு.டசினா மட்/ஆரையம்பதி இ.கி.மி.மகா வித்தியாலயம். |
| | 3ம் இடம் | M.H.பாஹறா மட்/காங்கேயனோடை அல்-அக்ஸா மகா வித்தியாலயம். |
| 03. கிராமிய நடனம் : | 1ம் இடம் | மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயம் |
| | 2ம் இடம் | மட்/காங்கேயனோடை அல்-அக்ஸா மகா வித்தியாலயம். |

**திறந்த மட்டப் போட்டி** | **வெற்றி பெற்றவர்களின் விபரம்**


| | | |
|---|---|---|
| 01. கவிதைப் போட்டி : | 1ம் இடம் | செல்வி.செ.தாமரைச்செல்வி - ஆரையம்பதி - 01 |
| | 2ம் இடம் | திரு.க.மோகனதாசன் - கிரான்குளம் - 07 |
| | 3ம் இடம் | திரு.சி.புவனேந்திரன் மட்/கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயம் |
| 02. சிறுகதைப் போட்டி : | 1ம் இடம் | செல்வி.அ.சுரேந்தினி இராசதுரைக்கிராமம், கோவில்குளம். |
| | 2ம் இடம் | திரு.சி.புவனேந்திரன் மட்/கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயம். |
| | 3ம் இடம் | செல்வி.செ.தமிழ்ச்செல்வி ஆரையம்பதி - 01. |
| 03. நாடகம் : | சிறப்புப்பரிசு | மட்/காங்கேயனோடை அல்-அக்ஸா மகா வித்தியாலயம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா சிறப்புற மலர வாழ்த்துக் கூறுகிறது.

# தர்மா


## அரிசி ஆலை



பிரதான வீதி,
5ம் கட்டை,
ஆரையம்பதி.

விழா சிறப்புற மலர வாழ்த்துக் கூறுகிறது.

# அம்பாள் அரிசி ஆலை



பிரதான வீதி,
தாளங்குடா.

விழா சிறப்புற மலர வாழ்த்துக் கூறுகிறது.

# பிரதேச மது விற்பனை நிலையம்







பிரதான வீதி, புதுக்குடியிருப்பு.

# UNITED BOOK CENTRE

## Dealers in Stationery & Books

**No: 75, Munai Street, Batticaloa.**



- பாடசாலைப் புத்தகங்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- சகலவிதமான அப்பியாசக் கொப்பிகள்
- C.R. கொப்பி வகைகள்
- காரியாலய உபகரணங்கள்
- சினிமா பத்திரிகைகள்
- இலங்கை, இந்திய வெளியீட்டாளர்களின் சகலவித நாவல்கள்
- அச்சகத்திற்குத் தேவையான கடதாசி வகைகள், மை வகைகள்



- கேடயங்கள்
- போட்டோ பிரதி, Fax பேப்பர் வகைகள்
- திருமண, பிறந்தநாள், நினைவு நாள் அழைப்பிதழ்கள் (Invitation)
- புத்தம் புதிய டிசைன்களில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

# யுனைற்றட் புத்தகசாலை

இல : 75/A, முனை வீதி,
மட்டக்களப்பு.
தொலைபேசி : 065-2222452
Fax : 065-2225434




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவே நாட்டுயர்வு

சலக விதமான நுகர்ச்சிப் பொருட்களையும்,
கொள்வனவு செய்ய நாடுங்கள்

## கூட்டுறவு வர்த்தக நிலையம்

மேலும் எமது சங்கத்தில் இயங்கும் சேவைகள்:


- கிராமிய வங்கிச் சேவை : சேமிப்பு, நகை அடவு பிடித்தல்.
- எரிபொருள் விற்பனைச் சேவை
- போட்டோ பிரதிச் சேவை
- சிறந்த பஸ் சேவை
- போக்குவரத்துச் சேவை
- கதிரை வாடகைக்கான சேவை
- தபால் முத்திரை விற்பனைச் சேவை

இச்சேவைகள் அனைத்தையும் வழங்க உங்களை அன்புடன் வரவேற்கிறது

**மண்முனைப்பற்று ப.நோ.கூ.சங்கம், ஆரையம்பதி.**

அழகிய வேலைப்பாடமைந்த தரமான உத்தரவாதமிக்க
22ct தங்க ஆபரணங்களுக்கு இன்றே நாடுங்கள்

## காவேரியம்மன் நகை மாளிகை



- ✳ நம்பிக்கை!
- ✳ நாணயம்!
- ✳ நேர்மை!



**காவேரியம்மன் நகை மாளிகை**

இல.09, பிரதான வீதி, ஆரையம்பதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org